700

தாருல் இஸ்லாம்

700/1-53. ஜனவரி 1953

10 MAR 1953
MADRAS





DARUL ISLAM

விலை 6 அணா

N53·32·1
199008

நெசவுடைகளில் -
- சிறந்து ஜொலிப்பது !

ஐந்து நக்ஷத்திர மார்க் கைலிகள்
உறுதியான நெசவுக்கும்,
கெட்டிச் சாயத்திற்கும்
உத்திரவாத முள்ளவை.

பி. அஹமது & ஸன்ஸ்

நெ. 2/70, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - 1

54, குவீன் ஸ்டிரீட், பினங்கு. — 74, பெல்பீல்டு ஸ்டிரீட், கூப்போ.

பர்மா நண்பர்களுக்கு

ஷாஜஹான் புக் டெப்போ வின் நூல்களும், "தாருல் இஸ்லாம்," "முஸ்லிம் முரசு" "மறுமலர்ச்சி" முதலிய முஸ்லிம் பத்திரிகைகளில் எது தேவைப்பட்டாலும் நீங்கள் சென்னைக்கோ, திருச்சிக்கோ எழுதத் தேவையில்லை. கீழ்க்காணும் விலாசத்தில் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

ஸவுத் இந்தியா புக் டெப்போ

326, மொகல் வீதி, இரங்கூன்.

பினங்கு-மலேயா நண்பர்களுக்கு

தாருல் இஸ்லாம் பத்திரிகையும் ஷாஜஹான் புக் டெப்போவின் நூல்களும் M. R. M. அப்துர் ரஹீம், திருச்சி ரஸூல் ஆகியோர் எழுதிய நூல்களும், இன்னம் பலவித இஸ்லாமிய நூல்களும் எங்களிடம் கிடைக்கும். தேவைக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதுங்கள்.

K. S. முஹம்மதுகனி,

நியூஸ் பேப்பர் ஏஜெண்டு

153, கிங்ஸ்டிரீட், பினங்கு.

மலேயாவிலுள்ள அன்பர்களுக்கு

"ஷாஜஹான் புக் டெப்போ"வின் நூல்கள், "தாருல் இஸ்லாம்" முதலியவை தேவைப்பட்டால் நீங்கள் சென்னைக்கு எழுதத் தேவையில்லை. இங்கே மலேயாவிலேயே உடனுக்குடன் கிடைக்கும். தங்கள் தேவைக்குக் கீழ்க் கண்ட விலாசத்துக்கு உடனே எழுதுங்கள்.

இந்தியா நாவல் டிப்போ,

3, கிருபோ ரோடு, சிங்கப்பூர்.

நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய அருமையான நூல்கள்.

உதுமான் (றலி)	...	1	8	0
திருமணமும் பிரிவினையும்	...	2	8	0
ஹஜ்ரத் அலீ (றலி)	...	2	4	0
இ. இணையிலாச் சாந்தி	...	1	8	0
மஹான் முஹம்மது நபி	...	1	12	0
அபூபக்ர் ஸித்தீக் (ரலி)	...	2	0	0
இஸ்லாம் (புதிய பதிப்பு)	...	3	0	0
ஈமான் (மூலக் கொள்கை)	...	0	12	0
நாயகத்தின் நற்குணங்கள்	...	1	8	0
இஸ்லாமிய ஞானபோதம்	...	4	0	0
நபிகள் நாயக வாக்கியம்	...	1	8	0
ஜ. பு. அம்மயத் தப்ஸீர்	...	2	8	0

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

விலை குறைக்கப்பட் டிருக்கிறது !

மணவாழ்க்கையின் மர்மங்கள்

(புத்தப்புதிய ஐந்தாம் பதிப்பு)

கல்யாணமாகியும் பிரமசாரியா? விவாகமாகியும் விவரம் தெரியாதா? கண் மூடித் தனமான வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இதுவரை தமிழில் எவரும் வெளியிடாத உன்னத உண்மைகள் நிரம்பிய எமது நூலை வாங்கிப் படித்துத் தெளிய இன்னம் தயக்கமேன்? கர்ப்பத்தடை, சிற்றின்பத்தில் பேரின்ப வாழ்க்கை, தகாத முறைகளைத் தவிர்க்கும் உபதேசம், தக்க முறைகளைப் பயில்விக்கும் உன்னத விவரங்கள், நுட்ப சாஸ்திரத்தை விளக்கமாக்கிக் காட்டும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் முதலிய யாவையும் ஒருங்கு திரட்டப்பட்ட இந்நூல் யாவர்க்கும் எளிதில் கிட்டும்படி பதிப்பிக்கப்பட்டுள்ளது. 344 பக்கங்கள் கொண்ட 8 நவீன ஆப்டோன் படங்களும், பலவித அபூர்வப் படங்களும் நிறைந்த இப்புதிய பதிப்பின் விலை ரூ. 4-8-0. தபாற் செலவு 0-10-0.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, ஹைரோட் :: சென்னை—5

பொருள் அடக்கம்

நபிகட் டிலகத்தின் இறுதி ஹஜ்ஜின் நல்லுபதேசம்	3
இறைவனிட்ட சோதனை (தலையங்கம்)	4
அரிமா நோக்கு	6
லண்டன்மா நகரில் திருநபி ஜயந்தி	9
எனது 33 வருட ஊழியம்	17
நல்ல நண்பன்	19
ஐ. நா. சபை பற்றிய முழுவிருத்தாந்தம்	20
ஷஜருத்துர் (தொடர் கதை)	28
இஸ்லாத்தின் இலக்ஷியங்கள்	32
எமது இலங்கைச் சுற்றுப்பிரயாணம்	36
குர்ஆன் மஜீதை நான் மொழி பெயர்த்த முழு விருத்தாந்தம் ...	40

அட்டைப் படம்

சென்ற மாதம் 25-ஆம் தேதி உலக முஸ்லிம்கள் பாக்கிஸ்தானின் நிர்மாண கர்த்தாவாகிய காயிதெ அஃலம் முஹம்மதலீ ஜின்னாவின் பிறந்த தினத்தைக் கொண்டாடினர். ஜனாப் ஜின்னா பாக்கிஸ்தான் மக்களின் அன்பை மட்டும் பெற்றவ ரல்லர். ஆனால், இந் நூற்றாண்டில் உலகில் தோன்றிய சகல முஸ்லிம்களுள்ளும் மிகத் தலை சிறந்த ராஜதந்திரியும், சட்ட விற்பன்னரும், பிரசங்க வீரரும், அரசியல் ஞானியு மாவார். எனவேதான், அவர் காலஞ்சென்று நாலரை ஆண்டுகளாகியும், உலக முஸ்லிம்கள் சகலரின் நன்மதிப்புக்கும் பேரன்புக்கும் பாத்திரராகி விட்டார். இந்திய அரசியற் போராட்டத்தில் ஜனாப் ஜின்னா காங்கிரஸ் கட்சிக்குச் சற்றும் விட்டுக் கொடுக்காமல் போராடித் தம் கட்சிக்கே இணையற்ற வெற்றியைப் பெற்றுத் தந்துவிட்டா ரென்னுங் காரணத்துக்காகச் சில இந்திய அரசியல் வீரர்கள் அவரை வெறுத்த போதினும், அவர் நிச்சயமாகப் பெரிய மதியூகியாகவே திகழ்ந்து வந்தா ரென்னும் உண்மையை மட்டும் எவராலும் மறுக்க இயல்வதில்லை. எனவே, அரசியல் விஷயத்தில் அபிப்பிராயபேத முள்ளவர்கள் அவர் பிடித்த முரட்டுப் பிடிவாதத்துக்காக அவரை வெறுத்த போதினும், ஒரு பெரிய தலைவரென்ற ஹோதாவிலோ அல்லது சிறந்த மதியூகி யென்னும் விஷயத்திலோ எவரும் அபிப்பிராய பேதம் கொள்வதில்லை. உலக முஸ்லிம்கள் அந்தக் காயிதெ அஃலத்தை என்றென்றும் ஞாபகம் வைத்திருப்பதில் வியப்பில்லை. கிறிஸ்துமஸ் தினம் கொண்டாடப் படுகிற நாளாகிய டிஸம்பர் 25-ஆம் தேதியே ஜனாப் ஜின்னாவின் பிறந்த தினமாகவும் திகழ்வதால், அந்த நாள் எல்லாராலும் கொண்டாடத் தக்க பெருமை மிக்கதாகவே உயர்ந்துவிட்டது. பாக்கிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரலாக அவர் உத்தியோகம் பார்த்தபோது எடுக்கப்பட்ட படமே நம் இதழின் மேலட்டையை அலங்கரிக்கிறது.

199008

DARUL ISLAM ✦ TAMIL MONTHLY ✦

தாருல் இஸ்லாம்

ESTD - 1919

வருட சந்தா உள்நாடு, சிலோன் ரூ. 4-8-0 பர்மா மலேயாவுக்கு ரூ. 6-0-0

நிர்வாக ஆசிரியர் : அல்ஹாஜ், பா. தாவூத்ஷா, பீ. ஏ.

மலர் 32	ஹிஜ்ரீ 1372, ரபீஉல் ஆகிர் மீ — 1953, ஜனவரி மீ	இதழ் 1

நபிகட் டிலகத்தின் இறுதி ஹஜ்ஜின் நல்லுபதேசம்

அம்ர் (இப்னுல் அஹ்வஸ்—றலி.) அறைந்துளார்: அல்லா(ஹ்)வின் திருத்தூதர் (சல் அம்) இறுதிஹஜ்ஜின் வேளையிலே, "இன்று என்ன நாள், தெரியுமா?" என்று வினவியதை யான் செவியேற்றேன். இதற்கு அம் முஸ்லிம்கள், "இன்று மாபெரிய ஹஜ்ஜின் நாள்," என்று விடை யிறுத்தார்கள். இதுகேட்டு, அப்பெருமானார், "நிச்சயமாக, உங்களுயிர்களும், உங்கள் பொருள்களும், உங்கள் கண்ணியங்களும், உங்களுடைய இந்நகரத்திலே, உங்களுடைய இந் நாளின் புனிதத்தைப் போலே ஒருவருக் கொருவர் புனிதமா யிருக்கின்றன. பாருங்களே! துன்புறுத்துகிறவன், தனது ஆத்மாவுக்கே விரோதமாயல்லது (வேறெவருக்கும் விரோதமாய்த்) துன்புறுத்த மாட்டான். இன்னம், பாருங்களே! துன்புறுத்து கிறவன் தன்மைந்தனைத் துன்புறுத்த மாட்டான், மைந்தனும் தன் தந்தையைத் துன்புறுத்த மாட்டான். இன்னம், பாருங்களே! நிச்சயமாக உங்களுடைய இந்த நகரத்திலே ஷைத்தான் இனிமேல் வணங்கப்படப் போவதில்லை (யென்பதைக் கண்டு) ஏமாற்றமுற்றுக் கிடக்கிறான்; ஆனால் உங்கள் (நற்) செய்கைகளில் எதை நீங்கள் வெறுக்கிறீர்களோ, அதிலே அவனுக்கு (நீங்கள் செய்யும்) வழிபாடு இருக்கிறது. அது பொழுது அவன் அதனைக் கொண்டு திருப்தியடைந்து விடுவான்," என்று கூறினார்கள்:— இப்னு மாஜா, திர்மிதீ.

அபூபக்ரா (றலி) அறிவித்துளார் : குர்பானீ (பைரத்து) க்குரிய அந்தநாளிலே நபிகள் திலகம் (சல்) எங்களுக்கொரு நல்லுபதேசம் புரிந்தார்கள்: "இந்த மாதம் எந்த மாதம்?" என்று அப்பெருமானார் வினவினார்கள். அதற்கு நாங்கள், "அல்லா(ஹ்)வும் அவனுடைய தூதருமே செவ்வனம் அறிவார்கள்," என்று விடையளித்தோம். அதற்குரிய பெயரையன்றி வேறொரு பெயரை அப் பெம்மான் சீக்கிரம் சொல்லப் போகிறார்களென்று நாங்கள் நினைத்த வரையில் மௌனமா யிருந்தார்கள். "இது துல்ஹஜ் அல்லவா?" என்று வினவினார்கள் ; அதற்கு நாங்கள் ஆமென்று விடையளித்தோம். அப்பாலவர்கள், "இந்த நகரம் எந்த நகரம்?" என்று அத்திரு நபி வினவலுற்றார்கள். அதற்கு நாங்கள், "அல்லா (ஹ்) வும் அவனுடைய தூதருமே செவ்வனம் அறிவார்கள்," என்று விடையளித்தோம். அதற் குரிய பெயரையன்றி வேறொரு பெயரை அப் பெம்மான் சீக்கிரம் சொல்லப் போகிறார்களென்று நாங்கள் நினைத்த வரையில் மௌனமா யிருந்தார்கள். "இது புனித (மக்கமா) நகரமல்லவா?" என்று

(44-ஆம் பக்கம் பார்க்க)

DARUL ISLAM ✦ TAMIL MONTHLY ✦
தாருல் இஸ்லாம்
ESTD. 1919

ஜனவரி 1953, சென்னை - 5

இறைவனிட்ட சோதனை

மழையே பெய்யவில்லை யென்றும், சென்ற ஏழாண்டுகளாய்த் தவறும் பருவ மழை இவ்வாண்டிலும் தவறிப் போய் எல்லா மக்களையும் நம் மாகாணத்தில் பட்டினி போட்டுவிடுமோ என்றும் பெருங் கவலைப்பட்ட மக்களுக்குச் சிறிது சாந்தி நல்கக்கூடிய விதத்தில் சென்ற டிஸம்பர் மாதம் முதல்தேதியும் ஏழாந் தேதியும் எங்கும் பரந்து மழை பொழிந்து நன்மையை நல்கிற்றென்றாலும், நவம்பர் இறுதிநா ளன்று சோழ மண்டலக் கரையில் கடுமையான சூறாவளியொன்று எழுந்து, நாகூர்-நாகபட்டினம் வழியே தஞ்சை ஜில்லாவுக் குள்ளும், திருச்சி ஜில்லாவின் சில பகுதிகட் குள்ளும் புகுந்து விளைத்த இணையற்ற பெருநஷ்டமிருக்கிறதே அதை இறைவனிட்ட சோதனை யென்றே குறிப்பிடவேண்டி யிருக்கிறது. நம் மாகாணத்தில் வாழ்கிற மிகவும் வயது முதிர்ந்த பெருங் கிழவர் கிழவிகளும் தங்கள் ஆயுளிலே இதற்கு முன் எப்போதும் கண்டோ, கேட்டோ இராத மாதிரியிலேதான் இப் பயங்கரப் பெருஞ் சூறைக் காற்று விளங்கிற்று என்று சாட்சியம் பகர்கிறார்கள்.

9—12—'52 அன்று சென்னைச் சட்ட சபையிலே கனம் ராஜகோபாலாசாரியார் வெளியிட்ட அறிக்கையில் கீழ்க் கண்டவாறு அறிவித்தார் :—"சென்ற நவம்பர் 30-ஆம் தேதி காலை 8-மணி முதல் இரவு 10-மணி வரை வீசிய ஒரு கடுமையான புயற்காற்றுத் தஞ்சை ஜில்லாவைப் பாழ்படுத்தி விட்டது. அதே புயற்காற்று மாலை 3 மணிமுதல் இரவு 10 மணிவரை திருச்சி ஜில்லாவையும்பாதித்துவிட்டது. அந்தச் சூறாவளி மிகவும் மூர்க்க முற்று அபரிமிதமாய்ச் சுழன்று சுழன்று வீசி அனேக வீடுகளின்கூரைகளையும், மங்களூர் ஓடுகளையும், வேறு ஸிமெண்ட் தகடுகளையும் பிய்த்துச் சென்றுவிட்டது. பல்லாயிரக் கணக்கான மண் வீடுகளும் பலஹீனமான இல்லங்களும் தகர்ந்து கிலமாகி விட்டன. மன்னார்குடி தாலுக்காவில் மட்டும் சுமார் 5600 மண் வீடுகளும் குடிசைகளும் அடியோடு பாழாகிவிட்டன. அந்தச் சுழற் காற்று, சாலையோரமாக இருந்தஎண்ணிலடங்கா மரங்களை யெல்லாம் வேர் பறியலாகப் பிடுங்கி எறிந்துவிட்ட துடனே, தந்திக் கம்பங்களையும் மின்சாரக் கம்பங்களையும் திருகியும் வளைத்தும் எலெக்டிரிக் சாதானத்தையும் டெலிபோன் தந்திப்போக்கு வரத்தையும் அடியோடு பெரும்பாழ் செய்தும் விட்டது. அசுரக் காற்றின் கொடிய சுழற்சியால் வெற்றிலைக் கொடிக் கால்களும், தென்னையும், கருப்பஞ் சோலைகளும் சொல்லொணப் பெருநஷ்டத்துக்கு இலக்காகிவிட்டன. நாகபட்டினம் தாலுக்காவில் கடல் ஐந்து மைல் சுற்று வட்டாரத்துக்கு நுழைந்து விட்டபடியால் அங்கிருந்த நெல் விளைச்சலில் காற்பங்கு பாழாகிவிட்டது...தஞ்சாவூர் தாலுக்காவில் மட்டும் 14 மக்கள் உயிரிழந்தனர்; 1360 கால்நடைகள் கொல்லப்பட்டன; 19,300 குடிசைகள் சேதமாயின. நன்செய் நிலத்திலுள்ள வெற்றிலைக் கொடிக் கால்களும் கருப்பஞ்சோலைகளும் 511 ஏக்கர் பரப்பில் அழிந்துவிட்டன. 4750 ஏக்கருக்குமேற்பட்ட நிலப் பரப்பிலுள்ள தென்னை, சவுக்கு மரங்கள்முறிந்துவிட்டன...புதுக்கோட்டை டிவிஷனிலோ குளத்தூரும் ஆலங்குடி தாலுக்காவும் பாழடைந்தன. குளத்தூரில் 13 பேர் மாண்டனர்; 3920 கால் நடைகள் அழிந்தன; 1424 குடிசைகள் பறந்தன. ஆலங்குடியிலோ 17 பேர் மாண்டனர்; 2253 கால் நடைகள் செத்தன; சுமார் 3000 குடிசைகள் பாழாகின.........தஞ்சாவூர் ஜில்லாவில் மொத்தம் 134 பேர் உயிரிழந்தனர்."

புயலால் விளைந்த மொத்த சேதத்தின் சரியான கணக்கு விவரம் இன்னம் தயாராகி முடியவில்லை. அரசாங்கத்தார் இன்னம் சில வாரங்களில் அல்லது மாதங்களில் மொத்தம் எத்தனை உயிர்

கள் அழிந்தன, ஆடுமாடுகள் மடிந்தன, எத்தனை வீடுகள் மறைந்தன, எத்தனை ரூபாய்க்கு மொத்த நஷ்டம் விளைந்திருக்கிறது என்னும் தகவலைச் சரியான புள்ளி விவரத்துடன் வெளியிடுவார்கள். அது கிடக்க.

சென்ற ஒரு நூற்றாண்டுக்குள் எவரும் நம் நாட்டில் கண்டோ கேட்டோ இராத மாதிரியில் அவ்வளவு கடுமையான காற்று இப்போது வீசியது என்பதும், இதனால் சொல்லொணாச் சேதமும் நஷ்டமும் துன்பங்களும் விளைந்தன என்பதும், தஞ்சை ஜில்லா முழுதும், திருச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும், இலங்கைத் தீவின் யாழ்ப்பாண தீபகற்பமும் இச் சூறாவளியால் அளவுக்கு மீறிய பொருள் நஷ்டத்துக்கு இலக்காகி விட்டன வென்பதும் நன்கு தெரிய வருகின்றன. இலங்கைத் தீவிலுள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் விளைந்த நஷ்டங்களைப் பரிகரிக்க நிதியுதவி வருகிறார்கள்; இலங்கை யரசாங்கமும் தன்னாலான உதவிகளை யெல்லாம் செய்து மக்களுக்குச் சகாயம் செய்து வருகிறது. சோழமண்டலக் கரையில் உள்ள பிரெஞ்சு ஸர்க்காருக்குச் சொந்தமான காரைக்காலிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் புயலால் விளைந்த பெரு நஷ்டங்களை ஈடு செய்ய அந்த அரசாங்கம் தன் நிதியைத் தாராளமாகக் கொடுத்துதவி வருகிறது. ஆனால், நம் சென்னை அரசாங்கமும் வடக்கே வெகு தூரத்திலிருக்கும் இந்திய அரசாங்கமும் வாய்ச் சொற்களால் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றன. இந்திய பிரதமரும், சென்னைப் பிரதமரும் கடலில் பெருங்காயம் கரைத்த கதையைப் போல், சில ரூபாய்களைத் தாராளமாய் வழங்கிப் பஞ்சத்தைத் தணிக்க முற்பட்டிருக்கிறார்கள்! 'கையில் காசில்லை' என்று ஓயாமல் அவதிப்படும் நம் சென்னை யரசாங்கம் மிகத் தாராளமாக உதவிபுரியத் தன் கஜானாவைத் திறந்து விட வழியில்லை யென்றாலும், சென்னை கவர்னர் ஆரம்பித்திருக்கும் புயல் நிவாரண நிதிக்குக் கூட எதிர்பார்த்த அளவு ஒன்றும் பொருள் சேரவில்லை. வர்த்தகர்களைக் கேட்டால் வருமானமெல்லாம் அரசாங்க வரிவிதிப்புக்குப் போய்ச் சேர்ந்து விட்டன வென்கிறார்கள்; பொது மக்களைக் கேட்டால் வறுமை காரணமாகப் பல்லிளிக்கிறார்கள். எனவே, வீடும் பொருளு மிழந்த தஞ்சை-திருச்சி ஜில்லா வாசிகள் வானத்தை நோக்கி இறைவனிடம் முறையிடவும், ராஜாஜீ கையில் பணமில்லையே என்று வருத்தம் தெரிவிக்கவும், ஆந்திரர்கள் எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாய மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சண்டித்தனம் பண்ணவுமாக நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இறைவனிட்ட சோதனையில் இதுவு மொன்றாகும். அன்றியும், சூறாவளியால் சகலவற்றையும் இழந்த மக்கள் கொஞ்சம் சஞ்சலந் தீரு முன்னே அடுத்த வாரமே பெய்த அடைமழையும், அதனையடுத்துத் தாண்டவம் புரிய முற்பட்டிருக்கும் காலரா என்னும் கொள்ளை நோயாகிய வாந்திபேதியும் அவர்களை வாட்டுகிற வாட்டம் கொஞ்ச நஞ்சமன்று. "ஆவின மழை பொழிய இல்லம் வீழ...." என்றொரு மகான் பாடினானே அந்தப் பாடலின் ஒவ்வொரு சொல்லும் நம் தமிழகத்து மக்களுக்கு இப்போது முற்ற முற்றப் பொருந்தி நிற்கிறது.

இப்படி யெல்லாம் ஏற்பட்டது இயற்கை யென்று சாந்தமாகக் கூறுகிறார்கள், கொஞ்சமும் இக் கஷ்டத்தை நுகராமல் கால்மேல் கால் போட்டுக் கொண்டு, "கடவுள் எங்கே இருக்கிறான்?" என்று முரட்டுவாதம் பேசும் "பகுத்தறிவுத் தோழர்கள்." இவர்கள் நாகபட்டினம் ரயிலடியில் அந்த நவம்பர் 30உ ஞாயிறு காலை 10 மணிக்கு அகப்பட்டிருந்தால் இப்படிப் பேச மாட்டார்கள். ஏனென்றால், சுழன்று வீசிய பேய்க்காற்று அந்த ஸ்டேஷன் இரும்புக் கூரைமீது எஃகு ஆணிகளால் வைத்திறுக்கப்பட்ட கெட்டியான தடித்த இரும்புத் தகடுகளைக் காகிதம் போல் சுருட்டி, அவற்றை இலவம் பஞ்சுபோல் 'விர் விர்' ரென்று தூக்கிப் பறந்ததாக நேரிற் கண்டவர்கள் வருணிக்கின்றனர்.

மற்றொரு சாரார், "நாகூரில் அடங்கியிருக்கும் செய்திநா ஷாஹுல் ஹமீது

அவ்லியா வென்னும் நாதாக்கள் மிகவும் கோபமுற்றே இப்படி யெல்லாம் செய்து விட்டார்கள். எனவே, வரப்போகிற உற்சவத்தின் போது முன்னெப்போதையும்விடச் சிறந்த மாதிரியில் உருஸ் கொண்டாடி, சந்தனக் குட மெடுத்து அவர்களுடைய கோபத்தைச் சாந்தப் படுத்த வேண்டும்,'' என்று மிகுந்த பய பக்தி விசுவாசத்துடன் பையச் செப்புகிறார்கள். ஆனால், அன்றடித்த காற்றின் வேகத்தால் அந்த தர்கா மினாராவின் தங்கக் கலசமே பறந்து போய் விட்டதென்பதை மறந்தும் "அவனன்றி ஓரணுவும் அசையாது,'' எனவே நாகூர் ஆண்டவரின் தர்கா மீதுள்ள கலசத்தை உருட்டித் தள்ளியதுகூட அவனே என்பதை உணர மறுத்தும் இப்படி 'ஷிர்க்'காகப் பிதற்றுகிறார்கள்.

ஆனால், எம் போன்றவர்கள் இஃதெல்லாம் இறைவனிட்ட சோதனையே என்றும், நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவன் நமக்கு அச்சமூட்டி எச்சரித்திருக்கிறா னென்றும், தற்போது நம்மிடையே காணப்படும் சில வெறுக்கத் தக்க அம்சங்களை அறவே களைந்தொதுக்க இக்கணமே முற்பட வேண்டுமென்றும் கருத்துக் கொள்கிறோம். தஞ்சையிலும் திருச்சியிலும் அவதிப் பட்ட மக்களிடம் நீங்கள் சற்றுப் பேசிப் பாருங்கள். அவர்களனைவரும் ஏகமுகமாக என்ன கூறுகிறார்கள்? ஆண்டவன் சோதித்தான் என்கிறார்கள்; மரணத்தின்— கொடிய, உதவுவாரற்ற, பரிதாபகரமான, பயங்கர மரணத்தின் வாயிலை மிதித்துப் பார்த்துவிட்டோ மென்கிறார்கள். இப் பகுதியில் பாபம் நிறைந்து விட்டதாலேயே இறைவன் தன் கோபப் பார்வையை மக்கள்மீது இப்படிச் செலுத்திவிட்டான் என்கிறார்கள். ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவ அன்பர்கள் அனைவருமே இதே குரலில் தான் பேசுகிறார்கள்.

உண்மை இதுதான். மக்களினம் தாங்க முடியாத அளவுக்கு வழிதவறி நடக்கும்போது இறைவன் இப்படிப் பட்ட காற்று மழைகளை யனுப்பியே எச்சரித்திருக்கிறா னென்பதை வேதாகமங்கள் மட்டும் சொல்லவில்லை; சரித்திரங்களும் சான்று பகர்கின்றன. எனவே, அந் நிகழ்ச்சிகளை மனத்துட் கொண்டு, இப்போது நேரிட்டிருக்கும் சோதனையுங்கூட அப்படிப்பட்ட அச்சமூட்டி யெச்சரிக்கும் இனத்தைச் சேர்ந்ததே என்று உணர்ந்து, நம்மை நாமே திருத்திக் கொள்வோம். அன்றியும், அல்லலிற் சிக்கி அவதியுறும் சகோதர சகோதரிகளுக்கு நம்மா லியன்ற பொருளுதவியும் சகாயமும் செய்வோமாக!

குர்ஆனைக் கரைத்துக் குடிக்கலாமா?

இந்தச் சஞ்சிகை வெளிவரப் போகும் தறுவாயில் ஒரு மிகவும் வருந்தத்தக்க செய்தி எமக்கு எட்டுவிக்கப்பட்டது. என்னவென்றால், பர்மா தேசத்தின் தலை நகராகிய இரங்கூனிலே சென்ற இரண்டு மாதங்களாக ஒரு பெரும் பூசல் முஸ்லிம்களிடையே ஏற்பட்டு, கட்சி பிரதிகட்சி தோன்றி, குர்ஆன் ஆயாத்களை மாஇலையில் எழுதி ஸபர் மாதத்தின் இறுதிப் புதன்கிழமை யன்று கரைத்துக் குடிப்பது ஆகுமா? அல்லது ஆகாதா? என்னும் கவைக்குதவாத பிரச்சினை எழுந்துவிட்டதாம். இரு கட்சியினரும் சற்றும் சளைக்காமல் ஒருவரை யொருவர் வன்மையாகத் தாக்கி அறிக்கைகள் வெளியிட்டுக் கொண் டிருக்கிறார்களாம். முஸ்லிம்கள் இக் கேடு காலத்தைக் கண்டு மனம் புண்ணுவது ஒருபுறமிருக்க, எதிர்மத வாதிகள் இந்த இரங்கூன் முஸ்லிம்களின் சச்சரவைப் பார்த்துக் கை கொட்டி நகைக்கிறார்களாம். நாட் செல்லச் செல்ல விபரீதம் மேலும் மேலும் முற்றிக்கொண்டே செல்கின்றதன்றி, கொஞ்சமும் தணியவில்லை யென்று கேள்வியுறுகிறோம்.

ஸபர் மாதம் முழுதுமே சபிக்கப்பட்ட பொல்லாத, மிகவும் தீங்கிழைக்கிற மாத மென்றும், வருட முழுதும் ஒவ்வொரு வாரத்திலும் வருகிற புதன் கிழமை பொதுவாகவே கெட்டநா ளென்றும் ஸபர் மாதத்தில் வரும் புதன்கிழமைகள் மிகப் பொல்லாத தினங்க ளென்றும், அதிலும் சிறப்பாக அம் மாதத்தின் இறுதிப் புதன் ஈடிணையற்ற மகா மகா பொல்லாத கெட்டநா ளென்றும்

அந்த "ஒடுக்கத்துப் புதன்" என்னும் ஸபர் மாத இறுதிப் புதனன்று முஸ்லிம்கள் தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் ஆண்டவனிடம் துஆ கேட்டுக் கொண்டும், குர்ஆன் ஆயாத்களை மா இலையில் எழுதிக் கரைத்துக் குடித்துக் கொண்டும் இருக்க வேண்டுமென்றும் ஒரு கட்சியினர் கச்சையை வரிந்து கட்டிப் பிரசாரம் புரிய முற்பட்டிருக்கிறார்கள்; துண்டு பிரசுரங்கள் வினியோகித் திருக்கிறார்கள்; தங்கள் கூற்றையும் போக்கையும் எவருக்கும் கண்டிக்க உரிமையில்லையென்று தாங்களே தீர்ப்பு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுயநல அறிவிலிகளுக்கு மண்டையில் ஓங்கியோர் அடிகொடுத்து அழகிய கட்டுரை யொன்றை "அமின்" என்பவர் எமக்கு எழுதியனுப்பியிருக்கிறார். இடமின்மை காரணமாக இவ்விதழில் அந் நேர்த்தியான கட்டுரை பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த இதழில் அஃது இடம் பெறும் (இன்ஷா அல்லாஹ்). அதைப்படித்தால் உண்மையுணர்வீர்கள்.

ஆனால், இப்போது நாம் ஒரே ஒரு மறுத்தற்கரிய உண்மையை மட்டும் உங்களுக்கெல்லாம் அறிவிக்க ஆசைப்படுகிறோம். அஃதாவது, நாம் குர்ஆன் ஷரீபைத் திறந்தவுடன் நம் கண்ணில் தென்படும் முதல் சிறு அத்தியாயமாகிய ஸூரத்துல் பாத்திஹாவுக்கு அடுத்தபடியிலுள்ள இரண்டாவது அத்தியாயத்தைப் படித்துப் பாருங்கள்! அதில் இறைவன் என்ன கூறுகிறான்? "இந்தக் கிரந்தம்— அதில் சிறிதும் ஐயமில்லை,—தீமையை விட்டுத் தற்காத்துக் கொள்கிறவர்கட்கு நேர்வழி காட்டக் கூடியதாயிருக்கிறது..." என்று தொடங்கி, அவ்வாறு தீமையை விட்டுத் தற்காத்துக் கொள்கிறவர் (முத்தக்கீன்)கள், அல்லாஹ்வின் மீதும் அமரர்கள்மீதும் உறுதி பூண்டும் தொழுகையை விடாது தொழுது கொண்டும், தானதர்மஞ் செய்தும், குர்ஆன் மீதும், முந்தைய வேதங்கள் மீதும் ஈமான் கொண்டும், இறுதித் தீர்ப்பு நாள்மீது உறுதி பூண்டும் இருப்பவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ரக்ஷகன்பாலிருந்து வந்துள்ள நேர்வழியிலேயிருக்கிறார்கள்; இன்னம் அன்னவர்களே ஜயசீலர்கள் (2:2—5) என்று இறைவன் அறிவிக்கிறான். எனவே, முஸ்லிம்களுக்கு நேர்வழி காட்டவே இந்தக் குர்ஆன் அருளப்பட்டிருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாய்ப் படுகிறது. இறைவன் ஏவியுள்ளதைக் கடைப்பிடித்து, விலக்கியுள்ளதைத் தள்ளி நடக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் தள்ளொணாக் கடமையென்று அவன் குர்ஆனின் ஆரம்பத்திலேயே அழுத்தந் திருத்தமாக அறைந்துவைத்திருக்கிறான். நடைமுறைகளை வகுத்துக்காட்டும் அந்த வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள வண்ணம் ஒரு சிறிதும் நடக்காமல், அவ் வேத வாக்கியங்களை எழுதிக் கரைத்துக் குடித்து விடுவதால் எவனும் மூமினாகிவிடவும் முடியாது; முத்த(க்)கீனாக ஆகிவிடவும் முடியாது என்று மேலும் விளக்கிக் கூற வேண்டியதில்லை. குர்ஆனில் கூறியுள்ள சகலவற்றையும் நடைமுறையில் அமல் செய்பவர் மட்டுமே இவ்வுலக வாழ்க்கையிலும் வரப்போகும் அவ்வுலக வாழ்க்கையிலும் ஈடேற்றம் பெறுவரென்றுதான் இறைவன் பன்முறையும் திரும்பத் திரும்பப் போதித்துள்ளான். அவன் போதனைகளைப் பீங்கான் தட்டையில் அல்லது மா இலையில் எழுதிக் கரைத்துக் குடிப்பதென்பது இறைவனையும் அவன் வேதத்தையும் கண்ணியப்படுத்துவதாகாது; ஆயின், இழிவுபடுத்துவதாகவே பொருள்படும். இது பித்அத்.

வயிற்று வலியைப் போக்க ஒரு சிறந்த மார்க்கத்தை வைத்திய நூலொன்று போதிப்பதாக வைத்துக்கொள்வோம். வயிற்று வலி வந்தவன் அந் நூலிலுள்ள முறைகளைப் பயின்று அதில் கூறப்பட்டுள்ள வண்ணம் நடந்தால் மட்டுமே வயிற்றுவலி நீங்குமன்றி, அந் நூலிலுள்ள வார்த்தைகளை எழுதிக் கரைத்துக் குடித்தால் வலியுபத்திரவம் அதிகரித்துத்தான் விடும்.

இரங்கூனிலுள்ள விஷமம் புரியும் குதர்க்கக் கட்சியினர் கொஞ்சம் தங்கள் துருப்பிடித்த மூளைகளைத் துலக்கிக் கொண்டு நேர்மையை உணர்ந்து தங்கள் வழிகெட்ட பிரசாரத்தை இவ்வளவுடன் நிறுத்திக் கொண்டு, தாங்களும் குர்ஆன் போதனையைப் பின் பற்றியொழுகி மேன்மையடைந்து, மற்ற முஸ்லிம்களுக்கும் நேர்வழி காட்டுவாராக!

ஒட்டக் கூத்தன் கவிக்கு.........

"ஒட்டக் கூத்தன் கவிக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதற்கேற்ப நந்தமிழ் நாட்டு முஸ்லிம்கள் நடந்து வருவதைக்கண்டு நாம் மனங் குழைந்து வருந்தாதிருக்க இயலவில்லை. நபி ஜயந்தி விழாவில்—மீலாத் கொண்டாட்டக் கூட்டத்தில்—அப் பெருமானாரை ஏளன இழிவுபடுத்து முறையிலே, நாத்திக மனப்பான்மையுள்ள பிரசங்கிகளை அழைத்து மேடைமீதேற்றிச் சொற்பெருக் காற்றச் செய்ய வேண்டாமென நாம் கதறிக்கதறி வற்புறுத்தியும், இச் சென்னையம் பதியிலும், இன்னம் சிற்சில இடங்களிலும் அத்தகைய நாத்திக உள்ளக் கிடக்கையையுடைய மனிதர்களை மேடை மீதேற்றிப் பிரசங்கம் பொழியச் செய்கிறார்கள். காரணம் கேட்டால், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் கருதியும், மாபெருங் கூட்டத்தைக் கருதியும் அவ்வாறு செய்வதாய்க் கூறுவர் அம் மாநாட்டை நடத்தும் "சீதேவிகள்." நபி பெருமான் (சல்) பெருமை இப்போலிக் காரணங்களைச் சார்ந்து நிற்கவில்லை. திரு நபி பெருமங்கல விழா இக் கூட்டங்களைக் கூட்டுவிப்பவர்களாலும், அந் நாத்திகக் குழாத்தினராலும் ஏளனமே செய்யப்படுகிறதென்றே யாம் எச்சரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நபிகட்டிலகத்தின் பெருமை இவர்களால் கவுரவப்படுத்தப் படுதற்கு மாறாய் அகவுரவமே செய்யப்பட்டு வருகிறது. ஒரு நாத்திகன் கூறியதைக் கேளுங்கள்: "இந்த 1952-ஆம் ஆண்டுக்கு அந்தக் கொரான் பொருந்தாதென்று நெடுஞ்செழியன் கூறிவிட்டாரென்று இம் முஸ்லிம்கள் ஆத்திரப் படுகிறார்களே, இவர்களுக்கு என்ன தெரியும் குர்ஆனைப் பற்றியும், முகமது நபியைப்

பற்றியும்? இம் முஸ்லிம்களுக்குக் கொரானைப் பற்றியும், முகமது நபியைப்பற்றியும் ஏதாவது தெரியுமென்றால், அது எங்களால் தானே?" இந் நாத்திகனின் குருவாகிய ஒரு நாத்திகனை யழைத்து மேடைமீ தேற்றி அன்று வட சென்னையில் ஒரு மீலாத் மாநாடு நடத்தப்பட்டது. ஏனென்று கேட்டால், "அவர் அழகிய பிரசங்கி" என்பார்கள். நபி பெருமானை மகிமைப்படுத்துவது மிக நன்றாயிருக்கிறது! நமக்கு அணுத் துணையேனும் "தன்மானமோ" "நபி பக்தியோ" எஞ்சியிருந்தால், இப்படிச் செய்வோமா? "மான மழிந்த பின் வாழாமை முன்னினிது" என்றான் ஒரு புலவன். பளா! பளா! பளா!

உதவுங்கள்!

எமதூராகிய நாச்சியார் கோவிலிலுள்ள மஸ்ஜிதை ஒட்டி ஒரு புராதன சாவடி இருக்கிறது. பிள்ளைகள் இங்கேதான் ஓதுகிறார்கள். இதை இடித்துவிட்டு ஓர் அழகான சிறு மத்ரஸாவை நிர்மாணிக்கவும், அதை யொட்டி நவீன சாதனங்க ளமைந்த கக்கூஸ் வசதிகளைச் செய்யவும் ஊரார்கள் முடிவு செய் திருக்கிறார்கள். மஸ்ஜிதில் தொழ வருபவர்கள் காலைக் கடனை முடித்துக் கொண்டு கை கால்களை அலம்ப இப்போது வசதி யில்லை. மஸ்ஜித் ஊருக்கு நடுவிலிருப்பதால், அவசரமாக வெளிக்குச் செல்ல வேண்டு மென்றால், மஸ்ஜிதிலிருப்பவர் வெகு தூரம் செல்ல நேரிடுகிறது. இந்த உபத்திரவத்தை நீக்கவும், மத்ரஸாவைப் பலப்படுத்தவும் கொஞ்சம் நிதி தேவைப்படுகிறது. மத்ரஸா வேலையும் தொடங்கப் பட்டு விட்டது. ஆனால், எதிர்பாராத புயலடித்து மக்கள் பேரவதியுற நேர்ந்து விட்டமையால், பொருள் சகாயம் தட்டுப்பட்டு விட்டது. எனவே, வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களிடம் சிறிது பணம் திரட்ட முடிவாகி யிருக்கிறது. பர்மா, மலாயா முதலிய நாடுகளிலுள்ள அன்பர்கள் தயைபுரிந்து அவ்வவ் வூரிலுள்ள அதிகாரம் பெற்ற ஏஜெண்ட்களிடம் தங்களால் இயன்ற தொகையை அனுப்பி யுதவுமாறு கோரிக் கொள்கிறோம். மத்ரஸா நிர்மாணத்துக்கே பெருந்தொகை செலவிடப்படு மாகையால், இந் நிதிக்கு உதவுவோர் முஸ்லிம் கல்விக்காக உதவியவ ராவர் என்றே சொல்ல வேண்டும்.

தமிழாசிரியர் மறைந்தார்!

சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் சேவை செய்தவரும், சென்னைப் பல்கலைக் கழக ஸெனெட்டில் பலமுறை உயர்ந்த பதவிகள் வகித்தவரும், பாட புஸ்தகக் கமிட்டியில் அங்கம் வகித்திருந்தவரும், தமிழ்க் கல்வியில் கரை கடந்தவரும், மிகச் சிறந்த ஆசிரியரும், சாந்தகுணசீலரும், சத்தொழுக்கக் குன்றும், நமது பொறுப்பாசிரியர் ஜனாப் அப்துல் ஜப்பாரின் ஆசிரியராக விளங்கியவரும், பெயருக் கேற்ற குணம் படைக்கப் பெற்றவரும், தற்புகழை விரும்பாதவரும், குடத்து விளக்காய்த் திகழ்ந்தவரும், சைவத் தமிழாசிரியர்களுக்கும் பிராமணத் தமிழாசிரியர்களுக்கும் எமனாய் உயர்ந்தோங்கி நின்ற வருமான எஸ். டி. சற்குணர் என்னும் பெருமகனார் தமது 76-ஆம் பிராயத்தில் சென்ற மாதம் 23-ஆம் தேதி இறைவனடியை யடைந்துவிட்டா ரென்பதைச் சொல்லொணா அவலக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழென்னும் அமுதம் ஒரு குறிப்பிட்ட வர்ணத்தவருக்கு மட்டும் சொந்தச் சொத்தன்று என்பதையும், முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களுங்கூட ஹிந்துக்களைப் போல அல்லது அவர்களைவிடத் தமிழில் நற்பாண்டித்தியம் பெற்று உன்னதமடைய முடியுமென்பதைத் தம் இணையற்ற கல்வித் திறமையாலும், ஆசிரியத் தன்மையாலும் இனிது நிரூபித்துக் காட்டிய பெரியார் அவர். அவரிடம் தமிழ் கற்றுக் கொண்டவர்கள் கற்றவற்றை என்றுமே மறக்க முடியா தென்பதுடன், அவருடைய புன்னகை ததும்பும் அருள் நிறைந்த மலர்ந்த முகத்தை என்றென்றும் மறக்க முடியாது. அவரும் தம்மிடம் கல்வி பயின்ற அத்தனை மாணவர்களையும் என்றென்றும் ஞாபகத்தில் வைத்திருப்பவர். அவர் பாடஞ் சொல்லுந் திறனுக்கு உவமையாக எடுத்துக் காட்ட வேறெந்த ஆசிரியரும் நம் நாட்டில் முன்னெப்போதும் இருந்திருக்கவு முடியாது; இப்போதும் கிடையாது. பெயருக் கேற்ற குணம் படைக்கப் பெற்றவர் இவ்வுலகில் காணக் கிடைப்பது துர்லபம். ஆனால், நமது சற்குணர் முற்ற முற்றச் சற்குணக் குன்றாகவே என்றென்றும் திகழ்ந்து வந்தா ரென்றால், அவரைப்பற்றி இன்னம் வேறென்ன கூறமுடியும்? தமிழுலகத்தின் பெருஞ்சிங்க ஏறொன்று துஞ்சிவிட்ட தென்னும் துயரச் செய்தியைக் கேள்வியுற்ற மக்கள் திடுக்குற்றனர். நாமும் எம்மை யறியாமலே துயரக் கண்ணீ ருகுக்கின்றோம். இறைவன் அந் நல்லாசிரியரின் ஆவிக்குச் சாந்தி நல்கி, உயர்ந்த சுவன பதவியைத் தந்தருள்வானாக. ஆமீன்!

அப் பெரியாரை இழந்து தவிக்கும் உற்றாருறவினர்க்கும், மற்றவர்க்கும் எம் ஆழிய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், "ஏ இறைவா! இத் தமிழக மக்களின் ஞானம் வளர்ச்சி பெற இன்னம் பல சற்குணர்களைத் தந்தருள்வாயாக!" என்றும் ஆண்டவனிடம் குறையிரக்கிறோம்.

ஐயோ, திராவிடக் கட்சியே!

இதுபோதுள்ள சென்னை மாகாணத்தைத் தனியே பிரித்து, அதை ஒரு தனி நாடாக்கி, அதற்குத் "திராவிட நாடெ"ன்று பெயர் சூட்டி, தமிழும் தெலுங்கும் கன்னடமும் துளுவும் மலையாளமும் கமழும் சுதந்தர அரசியல் நாடாக அதை ஆக்கிவிட வேண்டுமென்னும் கருத்துடனேதான் ஈரோட்டுப் "பெரியார்" வே. ராமசாமி நாய்க்கர் திராவிடக் கட்சியைச் சிருஷ்டித்தார். அவரிடம் சண்டையிட்டுக்கொண்டு தனியே பிரிந்து சென்று முன்னேற்றக் கட்சியைச் சிருஷ்டித்துவிட் டிருக்கும் காஞ்சிநகர் அண்ணாத்துரை என்பவரும் அதே காரணத்துக்காகப் பாடுபடுவதாகவே ஓயாமற் பறை

(44-ஆம் பக்கம் பார்க்க)

"இவர்கள் (எம்முஸ்லிம்கள்) மகா நபீ முஹம்மதின் (சல்அம்) நல்லுபதேசங்களையும், குர்ஆன் ஷரீபின் கூற்றுக்களையும் மறந்துவிட்டு, அறிவைத் தேடுவதை அறவே கைவிட்டு, சரீர சுகபோகங்களைத் தேடுவதையே தங்களுக்குரிய முக்கிய குறிக்கோளாய்க் கொண்டுவிட்டபடியால், மேனாட்டு மக்கள் இவர்களைத் தாண்டிக்கொண்டு முன்னேறிச் சென்றுவிட்டார்கள். நான் சொல்வதை நம்புங்கள்: இம் முஸ்லிம்கள் தங்கள் உறக்கத்தினின்று உணர்ச்சி பெற்றெழுந்து, தங்கள் பெரு நபீ முஹம்மத் (சல்) அவர்களுடைய உபதேசங்களையும் உதாஹரணங்களையும் பின்பற்றி நடக்கத் துணிவார்களாயின், இன்றுங் கூட இவர்கள் அம் மேனாட்டவர்களைத் தாண்டி, அன்னவர்களைப் பின்னிடையச் செய்து, முன்னேறிச் சென்றுவிடலாம்."

லண்டன் மாநகரில் திருநபி ஜயந்தி

[லண்டன் மாநகரிலே 11-12-1951-இல், பாக்கிஸ்தான் ஹைக்கமிஷனராயிருந்துவரும் மேன்மை தங்கிய ஆலிஜனாப் ஹபீப் ஐ. ரஹ்மதுல்லா அவர்களால் செரியப்பட்ட சொற்பெருக்கின் முழுவிவரம். அதுகாலை எகிப்தின் தூதர் மேன்மை தங்கிய அப்துல் பத்தாஹ் அம்ர் பாஷா தலைமை தாங்கினார்.]

முஹம்மத் நபியின் (சல்) குணாதிசயம்.

மேன்மை தங்கிய தலைவரவர்களே, ஸ்ரீமாட்டிகளே, ஸ்ரீமான்களே,— இன்று மாலையிலே நாம் இங்கு லண்டன் மாநகரிலுள்ள "இஸ்லாமிய கலாசார மத்திய ஸ்தாபனத்தின்" ஆதரவிலே, நபீ முஹம்மத் (சல்) அவர்களது பெரு மங்கல விழாவைக் கொண்டாடுவான் வேண்டிக் குழுமியிருக்கிறோம். இன்று ரபீயுலவ்வல் பிறை 12; இதுதான் நபி பிரான் (சல்) ஜனன தினமெனச் சாதாரணமாய்க் கருதப்பட்டு வருகிறது. இன்று இப்பூவுலகு முழுதுமுள்ள அனைத்து முஸ்லிம்களும் அந்த அல்லா(ஹ்)வின் திருத்தூதர் பேரால் **பாத்திஹா** — (பிரார்த்தனை) ஓதி, அந்த மகா நபியின் வாழ்க்கைச் சரிதையையும், அப் பெம்மான் உபதேசித்துச் சென்ற ஞானபோத நல்லுரைகளையும் ஞாபகப் படுத்திக்கொள்ளுதற்குரிய நன்னாளாயிருக்கிறது. அவை குறித்து நமக்குள்ள (மறந்த) நினைவுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும், சத்திய சன்மார்க்கத்துறையை விட்டு நாம் இடையிலே நழுவிச் சென்றிருப்பின், நம்முடைய நடக்கையை நேர் வழியிலே திருப்பி ஒழுங்கு செய்து கொள்ளவும் இந்த ஜனன தின விழா மிகவும் நற்பயனளித்தே வருகிறது; இந்நாள் நம் முஸ்லிம்களனைவரும் மகிழ்ச்சி யடைதற்குரிய ஒரு பெருநாளாகவும் திகழ்ந்து வருகிறது; ஏனெனின், எங்கள் நபி முஹம்மத் (சல்) எல்லாத் தீர்க்கதரிசிகட்கும் இறுதியாய் (14 நூற்றாண்டுகட்கு முன்னே) இங்குள்ள மானிட கோடிகளின் உஜ்ஜீவிப்பிற்காக இவ்வவனியிலே திருவவதாரம் புரிந்து வந்துளார்கள்.

நபி முஹம்மத் (சல்) தங்கள் இளமைப் பருவத்தில் அப் பழுக்கற்ற குணவிசேஷ நல்லொழுக்க சீலராய் நனிவிளங்கி வந்தார்கள்; அவர்களுடைய ஒழுக்கத்தின் உயர்வைக் கண்டு, அக்கால அரபிகள் அவரை **அல் அமீன்** — சரியான நம்பிக்கைக்குரியவர் — என்றே அழைக்க

லாயினார்கள்; 40 பிராயம் எய்தி நபிப் பட்டம் அருளப்பெற்றக்காலும், அவரை எதிர்த்து நின்ற மக்களெல்லாம் அப் பெருமானது அரும் பெருங் குணாதிசயங் குறித்து ஒன்றுங் குறை கூற வகையின்றியே விழித்துத் திகைத்து நின்றார்கள். நபி பெருமான் (சல்) தங்கள் தீனுல் இஸ்லாத்தின் பிரசாரத் தொடக்கத்திலே மேருமலையை நிகர்த்த மாபெரு முட்டுக் கட்டைகளை யெல்லாம் எதிர்த்து நிற்க நேர்ந்த வேளையிலே, அப்பெருமானாரின் சத் தொழுக்கமும் சன்மார்க்க சீலமும், நாணயமும் நல்ல கண்ணியமுமே அவர்கள்பால் அந்த ஆதிகால இஸ்லாமிய கோஷ்டியைக் கொண்டு வந்து சேர்க்கலாயின.

முஹம்மத் நபி (சல்) ஒருபொழுதும் தாங்கள் அனுஷ்டிக்காததைப் போதித்தது கிடையாது; (அப் பெருமானார் போதித்து வந்ததையும் ஒருகாலும் அனுஷ்டிக்காது விட்டது கிடையாது.) அவர்களால் உபதேசிக்கப்பட்ட இஸ்லாம் இன்சானுக்காக (மானிடர்கட்காக)வே அருளப்பட்ட சமயமல்லது, அமரர்களுக்கென அருளப்பட வில்லை. அப் பெம்மானது உயிர் வாழ்க்கை, அனைவரும் படித்துப் பின்பற்றத் தக்க ஒரு திறந்துள்ள கிரந்தமாகவே யிருந்து வருகிறது; சமுதாய நலன் குறித்து ஒரு காரியத்தை அத் திரு நபி செய்யத் துணியுங்கால், எல்லாத் தோழர்களையும் கலந்தாலோசித்தே பகிரங்கமாய்ச் செய்வார்கள்; அத்தோழர்களே அப் பெருமானாரின் சிஷ்யர்களாகவும், சகபாடிகளாகவும், ஆலோசகர்களாகவும், அருமந்த நண்பர்களாகவும் திகழ்ந்து வந்தார்கள். அத் தோழர்கள் ஒரு காரியத்தை ஒரு விதமாய்ச் செய்ய வேண்டுமென்று கூறுங்கால், அதனை அப் பெரு நபியே அவ்வாறு முதன் முதலாய்ச் செய்து காண்பிக்க முற்படுவார்கள். நபிகட்டிலகம் (சல்) மலை கலங்கினும் மனங்கலங்காத அத்துணைப் பெரிய வஜ்ஜிர ஹிருதயம் படைக்கப் பெற்றிருந்தார்கள்; சற்காரியத்தில் விடாப்பிடி, தளக்குறா உளத்தைரியம், காரியசித்திக் குரிய அனுபவ ஞானம், பகுத்துணர்வு ஆதியவற்றிலே தலைசிறந்து விளங்கினார்கள். அல்லா(ஹ்)வின் அரிய திருமறையை அனைவர்க்கும் அறிவிப்பதில் அதிக சாந்த சொரூபி யாயிருப்பார்கள்; நீதி வழுவா நெறி முறையிலே மிகப் பெரிய நீதிமன்றத்துக்குரிய உயர்தனி நீதிபதியேபோல் விளங்கி வருவார்கள். போர் முறையிலோ, மகா பெரிய தளபதிகளும் அப் பெருமானார் பாதத் தடியிலே குந்திப் பாடங் கற்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள்; நபி கட்டிலகம் தங்கள்பா லிருந்துவந்த சிற்சில சிறுவர்களையும் கிழவர்களையும் வைத்துக்கொண்டு, போர்க் கலங்களும் ஏறு வாகனங்களும் செம்மையா யில்லாதிருந்தும், ஆட்பலமும் படைக்கலத்துணையும் அதிகம் பெற்றிருந்த வல்வீரர்களை யெல்லாம் பலமுறை எதிர்த்து வெற்றி முரசு கொட்டிய வீரப் பிரதாபத்தை நோக்கின், அம்மகா நபி எத்துணைப் பெரிய சேனாதிபதி யென்னும் உண்மை விளங்குகின்றது. எனவே, எமது இறைவன் திருமறை, "உண்மையாகவே, உங்களுக்கு அல்லா(ஹ்)வின் திருத்தூதரிடத்துப்......பின்பற்றுதற்குரிய அழகான முன்மாதிரிகை இருக்கிறது," என்று (33 : 21) எடுத்தோதி யிருப்பதிலே அதிசயம் என்ன இருக்கிறது?

நபி முஹம்மத் (சல்) இவ்வுலகில் நாம் எவ்வாறு வாழ வேண்டுமென்ற வழி காண்பித்துள்ளார்கள்.

முஹம்மத் நபி (சல்) அவர்கள், தாங்கள் இத்தரணியில் வாழ்ந்துவந்த வாழ்க்கையே நம் மன்பதைகள் பின்பற்றி நடத்தற்குரிய மிகவுஞ் சரியான சிலாக்கிய முன்மாதிரிகை யென்று வாழ்ந்து காண்பித்துள்ளார்கள்; அதுவே நாம் இவ் வுலகவாழ்க்கையில் முழுப் பயனையும் பெற்று, வரப்போகின்ற அவ்வுலக (மறுமை) வாழ்க்கையிலே மோக்ஷ சாம்ராஜ்யத்தை எய்துதற் குரியதாகவும் இருந்துவருகிறதென எண்பித்துக் காண்பித்துள்ளார்கள். இதற்காக நாம் இத் தரணி (இல்லற) வாழ்க்கையைத் துறந்துவிட வேண்டுமென்பது அவசியமில்லை யென்றும், இங்குள்ள இல்லற தர்மத்தையே அவரவரும் அவலம்பித்து, இவ்வில்ல

றத்திலேயே — இங்குள்ள உலகாயத சுகபோகத்திலே — முற்றும் முழுகிப் போகாமல் மத்திப மார்க்கத்தையே கடைப்பிடித் தொழுகவேண்டுமென்றும் அப்பெருமானார் அறிவுறுத்தியுள்ளார்கள். சுருக்கிச் சொல்லுமிடத்து, இஸ்லாம் தோன்றியே இக் குவலய மக்களின் உயிர் வாழ்க்கையை எளிதாக்கி வைத்து விட்டதுடனே எங்கள் மத நம்பிக்கையையும் இலேசு படுத்தி வைத்திருக்கிறதெனல் வேண்டும். இம் மார்க்கம் மாபெருந் தத்துவ ஞானிகட்கெல்லாம் ஆராய்ச்சிக்குரிய அரும் பெருந் தத்துவங்களனைத்தையும் தன்னகத்தே கொண்டிருப்பதுடன் கூட, எல்லாவித எளிய சாமானிய புத்தி படைத்தவர்களாலும் அறிந்துணர வல்லதாயே அமைந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, இறைவருணனையைப் பாருங்களேன்! அவை எத்துணை எளியனவாகவும், அதே அமயத்தில் எத்துணைக் கம்பீரமாகவும் இருந்து வருகின்றனவென எண்ணிப் பாருங்கள்: இறைவன் ஒருவனே! அவன் அருளாளன்; அன்புடையவன். சர்வ வியாபி; சர்வ சக்தன். அவனொருவனே இப் பிரபஞ்ச முழுமைக்கும் சிருஷ்டி கர்த்தா; சிரேஷ்டஞானி. அறிவுமிக்கவன்; ஆளுந்திறன் வாய்ந்தவன். நீதிமான்; நெறி தவறாதவன். மெய்யாயிருப்பவன்; மேன்மையான அறிவு படைத்தவன். பாபத்தை மன்னிப்பவன்; நன்மையைப் பெருக்கித் தருபவன். நேர்வழி காண்பிப்பவன்; கோணல்வழியைத் தடுத்து நிறுத்துபவன். இறைவன், "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே!" என்னுமாபோலாறே யிருக்கிறானென இஸ்லாம் இயம்பியுள்ளது. எனவே, இஸ்லாம் தோன்றியதற்கு இப்பாலே இறைவன் இத்தரணியில் அவதாரமெடுத்து வரவேண்டிய அவசியமில்லாதே போய்விட்டது. சந்திர சூரிய நக்ஷத்திரங்களெல்லாம் கடவுளாயிருக்க வேண்டிய ஆவசியகமும் இங்கில்லாது மறைந் தொழிந்தது. பஞ்ச பூதங்களெல்லாம் பகவான்களேயென்று பாமரர்கள் எண்ணியிருந்த எண்ணங்களனைத்தும் இங்கில்லாது எழுந்தோடி மறைந்து விட்டன. கற்கடவுள்களும் கட்டைக் கடவுள்களும், உலோகக் கடவுள்களும் உருவப்படிமங்களும் இறைவனுக்குரிய பீடத்தை விட்டு இழிந்தொழிந்து மறைந்து விட்டன. படிமத்தொழும்பு தொலைந்ததுடனே, புரோகிதக் குழாத்துக்கும் பூசாரிகட்கும் வேலையில்லாதே போய்விட்டது. ஆண்டவனுக்கும் அடியானுக்கும் நேரான தொடர்பு ஏற்படுவது சாத்தியந்தான் என்று இஸ்லாமும் எம்பெருமானும் எடுத்துக் காட்டிய பின்னால், இங்குப் புரோகிதப் புல்லுருவிகட்கு என்ன வேலை எஞ்சியிருக்கிறது? ஆண்டவனுடனே அடியான் ஐக்கிய நெருக்கத்தை நேரே ஏற்படுத்திக் கொள்ள அருகதையைப் பெற்றுவிடுங்கால், அப்பால் இடையிலே தரகர்கள் அல்லது மத்தியஸ்தர்கள் வந்து நுழைய வேண்டிய அவசியம் எங்கேயிருக்கிறது? இன்னம் எங்கள் நபிபிரான் போதித்துச் சென்ற இஸ்லாத்திலே எல்லா அம்சங்களும் அடியவர் உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாயுள்ள அனுஷ்டான மார்க்கங்களாகவே இருந்து வருகின்றன; எனவே, இச் சன்மார்க்கத்தில் அனுஷ்டிக்க வியலாத வெற்று நம்பிக்கை— மூடநம்பிக்கை— என்பதற்குச் சிறிதும் இடமில்லையென்பது சரதம். இஸ்லாம் மார்க்கம் மானிடனது ஓரொரு துறைக்கும் தேவையாயுள்ள சகலவித வழி வகைகளையும் வகுத்து வைத்திருப்பதுடனே, இச்சன்மார்க்கம் இப்பூவுலகிலுள்ள எல்லா மன்பதைக்கும் ஏற்றதாகவும் அமைந்திருக்கிறது.

நபி முஹம்மத் (சல்) அவர்கள், தாங்கள் கடவுளவதாரமென்றோ, கடவுளின் குமாரன் அல்லது அப்படி இப்படி உறவினரென்றோ உரிமை கொண்டாடியது கிடையாது. அடி முதல் முடி வரை அப்பெருமானார் ஓர் "உங்களைப்போன்ற ஒரு மனிதனாகவே" இருந்திருக்கிறார்கள்; தங்களை ஆண்டவனடியவரென்றும், அவனது செய்தியை இக் குவலய மக்கட்குக் கொண்டுவந்து கொடுக்க ஏற்படுத்

தப்பட்டுள்ள ஒரு தூதரென்றுமே கூறி வந்துளார்கள். அம்மஹானுபாவர் நம்பாலிருந்து ஒரு சிரக்கம்பம், அல்லது கரக்கம்பத்தைக்கூட எதிர்பார்த்து நிற்கவில்லை. தங்களுழியத்துக்கு ஊதியமாகப் பொற்கிழி (பணமுடிப்பு) ஒன்றையும் ஆசித்து நிற்கவில்லை.* அவர்கள் ஒரு சிக்கன எளிய வாழ்க்கையே வாழ்ந்துவந்தார்கள்; தங்கள் வேலைகளையும், தங்கள் வீட்டு வேலைகளையும் தாங்களே பார்த்துக்கொள்வார்கள்; வேலை பார்ப்பது எவருக்கும் அகவுரவமானதன்றென்றே எல்லார்க்கும் எண்பித்துக் காண்பித்தார்கள்; தங்கள் கரத்தைக் கொண்டே, தங்களுதாரணத்தைக் கொண்டே வேலையின் கவுரவத்தை நிலைநாட்டினார்கள். செருப்பைப் பழுதுபார்ப்பது முதல் வீட்டைப் பெருக்கும் காரியம் வரை அவர்கள் தாங்களே செய்து காண்பித்துள்ளார்கள். ஏழைகட்கிரங்கி, தான தர்மஞ் செய்தலையும், ஏக சகோதரத்துவத்தையும் எல்லார்க்கும் எம்பிரான் (சல்) வற்புறுத்தி வந்தார்கள். ஆசையையும் அபிலாஷையையும் ஒரு மிதமான எல்லைக்குள்ளே கடிவாளமிட்டு அடக்கி வைக்கவேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள். இறையின் கருணையை எட்டிப்பிடிக்க எவ்வித அருகதையையும் நாம் பெறாதிருக்க, அவ்வெல்லாம் வல்ல இறைவன் நம் மக்களுக்குத் தன் சுயக் கருணையால் அருளியுள்ள அனுக்கிரகங்களுக்கெல்லாம் நாம் கணக்கில்லா நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோமென நன்கெடுத்து நவின்றருளியுள்ளார்கள்.

இவ்வாறு நபி பெருமான் (சல்) இனிய உபதேசம் புரிந்து வந்தது கண்டு, எவர்கட்கெல்லாம் அவ்வறவுரைகள் தங்கள் சுய நய நன்மைக்கு விரோதமாய்க் காணப்பட்டனவோ, அவர்களனைவரும் அந்த நபிகட்டிலகத்தை எதிர்த்தெழுந்தார்கள். அதற்கு முன்னே அநேக நூற்றாண்டுகளாக அரும் பாடுபட்டுப் பாமரமாக்களையெல்லாம் ஏய்த்துத் தங்களுக்கு அடிபணிந்து நடக்கும் அடிமைகளாய்ச் செய்து, சமயம் (மதம்) பொருளாதாரம், அரசிய லதிகாரம், சமுதாய உயர்வு ஆதிய மேன்மைகளனைத்தையும் பெற்று, ஏகபோக சுதந்தர புருஷர்களாய் ஆண்டனுபவித்துவந்த புரோகிதர்களும் பூஜாரிகளும், பிரபுக்களும் பணப்பொதிகளும் ஒருமிக்கத் திரண்டெழுந்தார்கள் எம்பெருமானுக்கு எதிராய்.

இதன் பயனாகப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் மட்டும் நபி முஹம்மத் (சல்) அவர்கள் தங்கள் சிஷ்யர்கள் ஒரு சிலருடனே படாத பாடுகளெல்லாம் பட்டு, அளவற்ற அவதிக்கெல்லாம் ஆளாய்த் தீர்ந்தார்கள். ஆயின், ஆண்டவனது தூதில் அசைக்கமுடியா ஆழிய உறுதியையும், அதன் வெற்றி கிட்டுமட்டும் விடாப் பிடியுடனே வேலை பார்த்தே தீரவேண்டுமென்னும் திட சித்தத்தையும் கடைப்பிடித்தே ஓயாதுழைத்து வந்தார்கள். இவற்றினைக் கண்ட சீடர்கள் ஏக தைரியமடைந்து, தீனுல் இஸ்லாத்தின் உண்மையிலே உறுதி பூண்டு, இறுதி வரை தங்கள் குருமகானுக்கு வலக்கரமாய் நின்று முழுதும் ஒத்துழைக்கலாயினார்கள். இதனால் அச்சீடர்களெல்லாம், தங்கள் இனத்தவர்களாலும் ஜனத் திரளாலும் இழைக்கப்பட்டுவந்த எல்லா ஏகடிய எகத்தாளங்களையும், இன்ன லிடையூறுகளையும், தொல்லை தொந்தரைகளையுமெல்லாம் முகமலர்ச்சியுடனும் மனக்கிளர்ச்சியுடனுமே பொறுத்து முன்னேறியே வந்தார்கள்; இதுகண்டு, இஸ்லாத்தை நிராகரித்துநின்ற எதிரிக் காபிர்களும், அம்முஸ்லிம்களின் உண்மையான உறுதியைப் பார்த்து உயரிய கவுரவமும் கண்ணியமுமே அன்னவர் மாட்டுப் பாராட்டத் துவக்கிவிட்டார்கள். எனினும், ஒரு சமயம் இஸ்லாம் படு தோல்வியுற்று, நசுக்குண்டு, நன்கு நசித்துவிட்டதே போல் தோற்றிற்று. 13 வருடப் பிரசாரத்துக்குப் பின்னே நபிகணாயகர் (சல்) ஒரு நூற்றுச் சில்லறை சிஷ்யர்களுடனே

* இற்றை நாளில் சஷ்டி அப்தபூர்த்தி (60—ஆம் பிராய முடிவு) என்றபெயரால் மாபெருங் கொண்டாட்டம் கொண்டாடுவதும், பணமுடிப்பளிப்பதும் வெகு சாமானியர்க்கெல்லாம் சர்வ சாமான்யமாய் நடைபெற்று வருகின்றன.

மக்காவைத் துறந்து மதீனு (யதுரிப்) நகருள்ளே சென்று குடியேறவேண்டிய ஆவசியகம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஹிஜ்ரத்துக்கு முன்னேகூடச் சில பல முஸ்லிம்கள் மக்கத்துக் குறைஷியரது தொந்தரை தாளாது, அபிஸ்ஸீனியா (ஹபஷா) நாடு சென்று, அந் நாட்டுக் கிறிஸ்தவ மன்னரிடத்தே தஞ்சந்தேடிப் புகலிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய அத்தியாவசியத்துக்கு உள்ளாய்விட்டார்கள்.

மதீனு சென்ற முஹம்மத் நபி (சல்) தாராளமனப் பான்மையும் நேய மனப்பான்மையும் அனைவர்பாலும் காண்பிக்கிறுர்கள்.

மதீனு வாசிகள், நபிபெருமானது உண்மைத் தன்மையையும் மேன்மைக் குணத்தையுங் கண்டு, பெரிதும் நல்லபிப்பிராயமே கொண்டு விட்டார்கள்; ஆதலால், அவர்கள் தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலே சிறிதும் தயக்கம் காண்பியாமலே மனமார முஸ்லிம்களாய் மாறிவிட்டார்கள். அப்பால் அம் மதீனுவிலே ஒரு மஸ்ஜித் நிருமிக்கப்பட்டது; அக் கட்டிட வேலையிலே நபிகணுதர் (சல்) ஒரு சாதாரணக் கூலியாளைப் போலத்தான் உடன் நின்று உழைத்தார்கள். எனவே, இம் மஹானுபாவரின் மேன்மையையும் சீலத்தையும், ஒழுக்கத்தையும் உயர் குணத்தையுங் கண்டு, கூட்டங் கூட்டமான அரபிகளெல்லாம் மேன்மேலும் வந்து நபிபெருமானுக்குச் சீடர்களாய் அமரலாயினர்கள்; எனவே இஸ்லாத்தின் வட்டாரம் நாளுக்கு நாள் விரிவடைந்தே வந்து கொண்டிருந்தது. தங்களெதிரி தப்பியோடி விட்டதுடன் நில்லாது மதீனுவில் மதப் பிரசாரத்தால் மேன்மேலும் வலுவடைந்து வந்ததைக் கண்டு மக்கா வாசிகளால் வாளா இருக்க இயலாது போய்த் தங்களாலான பல முழுதையுங் கொண்டு அப் புதிய மதத்தை வாட்படையுதவியால் வென்றடக்க நாடினர்கள். இதனுல் மதீனுவிலிருந்த சகல ஜாதியினரும் ஒன்று சேர ஏதுவுண்டாயிற்று.

அதுகாலை முஹம்மத் நபி (சல்) அவர்களால் பல்வேறு ஜாதியினருக்கும் அளிக்கப்பட்ட உரிமைச் சீட்டுக்களின் ஷாத்துக்களை உற்று நோக்குவோமாயின், அப்பொழுது மதீனுவில் நிலை நிறுத்தப்பட்டிருந்த அந்தப்பால்ய (இஸ்லாமிய) குடியாட்சி யரசாங்கத்தின் தன்மை இப்படிப்பட்ட தென்பதை நாம் நன்குணர்ந்து கொண்டுவிடலாம். அவ் வுரிமைப் பத்திரம், "அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லா(ஹ்) வின் திருநாமத்தைக் கொண்டு இந்த உரிமைச் சீட்டு முஹம்மத் நபியால் குறைஷிகளேயாயினும் யதுரிப் வாசிகளேயாயினும் சகல முஸ்லிம்களுக்கும், அவர்களுடனே நேயம் பூண்டுள்ள ஏனையெல்லா மக்களுக்கும் (அவர்கள் எவர்களாயிருப்பினும் சரியே) வழங்கப்பட்ட தஸ்தாவீஜாயிருக்கிறது. இவர்களெல்லாரும் சேர்ந்து ஒரே ஜாதியினராக (Nation ஆக)ப் பிணைந்திருப்பார்கள்,'' என்று ஆரம்பமாகி, மேலும் அது கூறுகிறது: "இந்தக் காமன்வெல்த்துடனே சேர்ந்து கொண்டுள்ள யூதர்களெல்லாம் தொல்லைகளைவிட்டும் தொந்தரைகளை விட்டும் காப்பாற்றப் பெறுவார்கள்; இவர்களனைவரும், எம் முஸ்லிம் குடிகளுடனே எம்முடைய உதவியையும் உபகாரத்தையும் பெற்றுக் கொள்ளச் சமமான அருகதை வாய்ந்தவர்களா யிருப்பார்கள். இவ் யூதர்களும், இந்த யதுரிபில் வந்து குடியேறியுள்ள ஏனையெல்லா மனிதர்களும் எம் முஸ்லிம்களுடனே சேர்ந்து ஒரே ஒற்றுமையுள்ள ஜாதியினரா யிருப்பார்கள். இங்குள்ள சகல மக்களும் சர்வ சுதந்தரத்துடனே அவரவருக்கு இஷ்டமுள்ள சமயத்தைப் பின்பற்றி யொழுகி வரலாம்.'' இம்மாதிரியான உரிமைப் பத்திரம் கிறிஸ்தவர்கட்கும், ஜர்தஷ்தியர்கட்கும் வழங்கப்பட்டது எம்பெருமானவர்களால்; அதிலே இவ்வாறு அவ்வுரிமை பதிவு செய்யப்பட்டது: "நஜ்ரானிலுள்ள கிறிஸ்தவர்கட்கு, ஆண்டவனது பாதுகாப்பும், அவனுடைய திருநபியின் உறுதிமொழியும் அவர்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் மதத்துக்கும் சர்வ சுதந்தரமும் உண்டென்று இருக்கின்றன. இவர்களுடைய மதானுஷ்டானங்களில் எவரும் தலையிடவிடப்பட

மாட்டார்; அவர்களுடைய சமய ஆராதனையில் எத்தகைய மாறுதலையும் எவரும் நுழைக்க அனுமதிக்கப்படார்; அவர்களுக்குரிய எந்த ஓர் உருவப்படமும் சிலுவை யடையாளமும் சிதைக்கப்படமாட்டா."

இவற்று லெல்லாம் விளக்கமாவது யாதா யிருக்கிறது? மதீனாவில் தழைத்தோங்கிய தீனுல் இஸ்லாம், அனைவர்மாட்டும் தாராள மத மனப்பான்மையையும் நேயமனப்பான்மையையுமே காண்பித்துவந்த தென்பதற்கு மேற் கூறிய சுதந்தரப் பத்திரங்கள் கண் கண்ட சாக்ஷியங்களா யிலங்கிவருவது வெளிப்படை. அரப்நாட்டிலே நெடுநெடுங்காலமாய்ப் பழக்கத்தி லிருந்துவந்த கோத்திர மாற்சரியங்களையும் சமுதாயச் சண்டைகளையும் ஒழித்து, வாளை உருவியே உதிரத்தை யோட்டியே அவரவரும் தத்தம் கக்ஷியை ருஜுப்படுத்திக் காட்டுவதென்னும் பழங்காலப் பழக்கத்தை அடியுடனே அழித்தொழித்து விட்டது இஸ்லாம் தோன்றி; அவ்வரபியரிடத்து அநேக நூற்றாண்டுகளா யிருந்து வந்த கொலை, கொள்ளை, வஞ்சனை சூது, விபசாரம் பலதார (நூற்றுக் கணக்கான) மணம், ஆதிய அநேகமநேக துர்க்குணங்களை யெல்லாம் நபி முஹம்மத் (சல்) அவர்கள் எவ்வாறு 23 ஆண்டுகட்குள்ளே இல்லாது போக்கடித்துவிட்டார்கள் என்பது இவ்வுலக மகா சீர்திருத்தக்காரர்களை யெல்லாம் இன்றுங்கூட மலைக்கச் செய்தே வருகின்றது. நபி பெருமான் தோன்றுகின்றார்; மாத்திரைக் கோலைவீசுகின்றார். எல்லாம் தில்ஸிமாத்தே போல் சீர்திருந்திவிடுகின்றன. நபி முஹம்மத் (சல்) செய்து சென்ற சீர்திருத்தம் இப்பாருலகு முழுமைக்குமே ஒரு பேருபகாரமா யிருந்து வருகிறது. நபிபெருமானாரவர்கள், எத்துணைப் பெரிய, எவ்வளவு அதிகமான எதிர்ப்பிருப்பினும், அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது தங்கள் கருமத்திலேயே கண்ணாயிருந்து வந்த தொன்றே, அம்மஹானால் போதிக்கப்பட்ட மதத்தின் மஹாத்மியத்தையும், அம்மஹானுபாவரின் மகிமையையும் நன்கெடுத்து விளக்குவதா யிருக்கிறது. நபிகளுதரும் அவருடைய சீடர்களும் சினேகிதர்களும் அளவிறந்த தியாகங்களைப் புரிய நேர்ந்தாலும், ஆண்டவன் வாக்குறுதி யளித்துள்ளாங்கு, இறுதியிலே, நபிபிரான் ஆயுட் காலத்திலேயே வெற்றி இஸ்லாத்துக்கே ஏற்பட்டு விட்டது.

இவ் வுலக வாழ்க்கைக்கு வாளாயுதம் தேவையில்லை யென்று எம்பெருமானார் (சல்) எங்குமே இயம்பி யிருக்கவில்லை. தங்கள் சமய (மத) த்தையும், தங்களைப் பின்பற்றிய சீடர்களையும் தற்காத்து நிறுத்தவேண்டிய பொறுப் பனைத்தையும் தாங்கள் முக்கிய கடமை யென மேற் போட்டுக்கொண் டிருந்தமையால், அப் பெருமானார் எவ்வாறு வாட்படையின் அவசியத்தைத் திரஸ்கரித்து விட்டிருத்தல் சாத்தியமாகும்? நியதி அல்லது பகுத்தறிவின் ஸ்தானத்திலே வாட்படை வந்து குந்தக் கூடுமெனக் கூற முடியாவிடினும், சுயேச்சை யென்பது காலின்கீழே போட்டு மிதித்துத் தொகைக்கப்படும் வேளையிலே, அல்லது சுதந்தரமென்பது இங்கிருந்து பிடுங்கப்படும் காலத்திலே, அல்லது நீதிபரிபாலனமென்பது வெற்று ஏளனத்துக்கு இலக்காய்விடும் தருணத்திலே தற்காப்பினிமித்தம் வாளை உருவவேண்டுவது அத்தியாவசியமாகவே ஆய்விடுகிறது. எனினும், இஸ்லாத்தை எங்கும் பரத்தவோ இல்லை, இவ்வுலக லாபங்களைப் பெருக்கிக்கொள்ளவோ வாளையுருவலாம் என்று எம்பெருமானாராதல், எங்கள் திருமறையாம் குர்ஆன் மஜீதாதல் எங்குமே என்றுமே அனுமதி யளித்திருக்கவில்லை; இல்லையே யில்லை.

அரபிகள் சமுதாயத்துக்கு அடிப்படை தனித்தனி கோத்திரமே என்னும் பண்டைக் கோட்பாட்டை, மாந்தரனைவரும் ஒரே இனந்தான் என்று கூறித் தகர்த்தெறிந்தார் மஹான் முஹம்மத் நபி (சல் அம்).

நபி பெருமான் (சல்) அந்த அரப் நாட்டு மக்கள் சமுதாய அடிப்படையையே அடியுடன் மாற்றி யமைத்துவிட்டார்கள். தனித்தனி கோத்திரமா யிருப்

தாருல் இஸ்லாம்

படதே அவ் வரபிகளின் நெடுங்காலப் பழக்கமாயிருந்துவந்தது; இந்தத் தனிக் கோத்திர மென்னும் சிதறுண்ட சித்தாந்தமே கோத்திரச் சண்டைகளுக் கெல்லாம் மூல காரணமாயிருந்து வந்த தென்பதை நபி முஹம்மத் (சல்) நன் குணர்ந்து கொண்டார்கள். ஆதலால், அக் கோத்திர ஸ்தானத்திலே எல்லா முஸ்லிம்களும் ஒரே உம்மத்—கோஷ்டி—என்னுங் கோட்பாட்டை நிலைநிறுத்தினார்கள். கோத்திரமென்பது, அவரவர் கூட்டமே ஏனையவர் கூட்டங்களைப் பார்க்கினும் சிறந்ததென்னும் சித்தாந்தத்தையே தனக்குரிய அடிப்படையாய்க் கொண்டு நின்றது. ஆனால், முஹம்மத் நபி (சல்அம்) எல்லா முஸ்லிம்களும்—உண்மையிலே எல்லா மன்பதையுமே அல்லா(ஹ்)வின் பார்வையில் சரிசமானர்களே யென்றும், ஆதலால் சகல உரிமைகளிலும் பெருமைகளிலும் சரி நிகர் சமான முள்ளவர்களே யென்றும் கூறி, ஆங்கிருந்துவந்த குலப்பெருமைகளையும் கோத்திரக் குரும்புகளையும் அடியுடனே அழித்தொழித்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள். அஜமிகளை விட அரபிகள் உயர்ந்தவர்களல்ல ரென்று கூறி, அனைவரையும் ஒரே படித்தரத்தில் நிறுத்தி வைத்து, எல்லார்க்கும் சம உரிமையே யுண்டென்னும் இஸ்லாமிய குடியரசை — பரிபூரணக் குடியாட்சியை — ஏற்படுத்தி வைத்தார்கள்.

முஹம்மத் நபி (சல்) அவர்களால் நிலை நிறுத்தப்பட்ட அந்த இஸ்லாமிய குடியரசிலே பெண்மணிகளும் ஆண் புருடரைப்போன்ற சம சுதந்தரம் பெற்றவர்களென்றே கருதப்பட்டு வந்தார்கள்; அற்றை நாளிலே இஸ்லாத்தி லல்லது ஏனை மதங்களெல்லாம் எல்லா நாடுகளிலும் பெண்கள் பேய்களென்றும், பிள்ளை பண்ணும் பாண்டங்களென்றுமே கருதி நடத்தப்பட்டு வந்தார்கள்; அந்த ஸ்திரீ ரத்னங்கள் ஆடு மாடுகளைவிடக் கீழாய பிராணிகளாகவே அவமதிக்கப்பட்டு வந்தார்கள். ஆனால், இஸ்லாத்திலோ பெண்மணிகள் தாய் தந்தையர் சொத்தினின்று, தமையன் தம்பி, கணவன்மார் சொத்தினின்றும் பாகம்பெற அருகதையுள்ளவர்களாக உயர்த்தி வைக்கப்பட்டதுடனே, சமுதாயத்திலும் அவர்கள் சர்வ சுதந்தரமும் வாய்க்கப் பெற்றவர்களாகவே ஆக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். எவ்வாறெனின், இஸ்லாத்திலே ஸ்திரீகள் பண்டைக்காலம்போலே, அடிமைகளாக ஆக்கப்படுவதுங் கூடாது; அவ்வாறு அடிமைகளாக விற்கப்படுவதும் வாங்கப்படுவதும் கூடாவென நபி பெருமான் (சல்) நல்லதொரு சட்டத்தை நடைமுறையிலே செய்து வைத்துள்ளார்கள். இச் சன்மார்க்கத்திலே ஸ்திரீகள் சுயமே சொத்துச் சம்பாதிக்கலாம்; அதனை அவர்களே வைத்துக்கொண் டிருக்கலாம்; அவர்கள் அச் சொத்தைத் தங்களிஷ்டம்போலே தானுதி விக்கிரயங்களுக்கு அருகதை யுள்ளதாய்ச் செய்து கொள்ளலாம். இஸ்லாத்திலுள்ள விதவைகளை, பண்டைநாள் போலே, தந்தையின் மைந்தர்கள் (தங்கள் மாற்றாந் தாய்களைக்) குடும்பச் சொத்தாகச் சுதந்தரித்துக் கொள்வது கூடவே கூடாது. விதவைகள் தங்களிஷ்டம் போலே மறுமணம் புரிந்து கொள்ள சகல உரிமைகளும் இச் சன்மார்க்கத்திலே அளிக்கப்பட்டு விட்டார்கள். சகோதரிகள் மணமுடிக்கப்பட்டு விடுவதால் தங்கள் சகோதரர்களது குடும்பத்தை விட்டு விடுபட்டுப் போய்விடுவது கிடையாது. இஸ்லாமிய சட்டத்திலே பெண்மணிகள் சாக்ஷி சொல்லக் கூடாதெனத் தடையுத்தரவு பிறக்கப்பட் டில்லை. தாய்மார் சகோதரிகள், மனைவிமார், மக்கள் என்னுமுறையிலே ஒவ்வொரு குறிப்பிட்ட பாகப் பிரிவினைக்கு உரிமைப் பெற்றவர்களாகவே கணிக்கப்பட் டுள்ளார்கள்.

நபி முஹம்மத் (சல்) அவர்கள் மன்பதைக்குச் செய்துள்ள மற்றொரு மகா நன்மை அடிமை விடுதலையாயிருக்கிறது. மானிடனென்பான் அடிமையாக ஆக்கப்படுவது கூடாதென ஆதியிலே சட்டம் பிறப்பித்தவர்கள் அஹ்மத் (முஹம்மத்—சல்) நபி அவர்களாகவே யிருந்து வருகிறார்கள். முதன் முதலாக, இஸ்லாமிய நாடுகளில் அடிமை வியாபாரம் அகற்றப் பெற்று, இறுதியாய் இப் பூவுலகு முழுதுமே அவ்வக்கிரம வியாபாரம் அடியுடனே நிறுத்தப்பட்டுப் போய்விட்டது.

மீக்கூறிய வாறாயுள்ள மனிதரே மகான் முஹம்மத் நபி (சல்) அவர்கள்; அவர்களே அச்சீர்திருத்தப் பெரியாராவார்கள்; அவர்களே அந்தமானிட முன்னேற்ற மா பெரியாரா யிருந்துவந்தார்கள். எல்லா விஷயத்திலும் அந்தப் பெரியார் பணிவென்பதையே மேற்கொண்டொழுகி வந்துளார்கள். அரப் நாடு முழுமைக்கும் அரசராயிருந்தும், ஒருவிதப் பொலீஸ்-ம் மில்லாமலே அம் முஸ்லிம்கள் அனைவரும் அக்குரு மகானிடம் ராஜவிசுவாசம் பாராட்டி வந்தார்கள்; அந்த இறுதி நபியவர்கள் பல போர்களில் வெற்றிபெற்ற வீரதளபதியாயிருந்தும், ஒரு சாதாரண சிப்பாஹீயே போல் வேலை பார்த்துவந்துளார்கள்; இன்னம், மனிதனென்னும் முறையிலே அம் மகான் உயரிய ஒழுக்கமும் சீரிய சீலமும் உடையவர்களா யிருந்தும், சர்வசாதாரண நடை யுடை யுடையவர்களாகவே திகழ்ந்து, ஏழைப் பங்காளராகவும் தீனதயாளு வாகவுமே எளிய முறையிலே ஒழுகிவந்துளார்கள். பகல் முழுதும் நோன்பு நோற்று, மாலையிலே அந்நோன்பைத் திறந்து பசியோடிருந்த வேளையிலும் நபிகட்டிலகம் (சல்) தங்களுணவை ஏழைக்கு ஈந்து, வாளாயிருந்துவிடுவார்கள். இஃது எத்துணைப் பெரிய "எழைக்கிரங்கும் எளியகுணம்" என்பதை எண்ணிப்பாருங்களே !

நபி முஹம்மதின் (சல்) ஜீவியத்தினின்று நம் முஸ்லிம்கள் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை.

ஆதலால், சீமாட்டிகளே, சீமான்களே, நபிகணாதரின் ஜீவிய சரிதையை நீங்கள் மீட்டும் மீட்டும் ஊன்றிப்படிக்க வேண்டுமென்றும், அம்மஹானுபாவரின் உயிர் வாழ்க்கையையும் உபதேசங்களையும்உங்கள் உலக வாழ்க்கைக் குரிய பாடங்களாகவும் முன்மாதிரிகையாகவும் மேற்கொண்டொழுக வேண்டு மென்றும் வற்புறுத்தியே நான் கூறவேண்டியவனாயிருக்கிறேன். இப்படிச் செய்தால், நீங்கள் உங்களையே முன்னேற்றிக் கொள்வதுடன், இத்தரணியில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்குரிய அடிப்படைகளையும் மீட்டும் போட உதவுவீர்கள். ஏனையெல்லாவற்றுக்கும் மேலாக, நபி பெருமானது நல்வாழ்க்கையினின்று நீங்கள்கற்றுணர வேண்டிய முக்கியப் படிப்பினை யொன்று இருந்தே வருகிறது: பொதுக் காரியங்களுக்காகத் தியாகம் புரிய வேண்டிய அவசியத்தை அவரவரும் ஆழ அறிந்து கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாயே யிருந்து வருகிறது; பொதுமக்களின் நன்மைக்காகத் தனிமனிதரின் சுக சவுகரியங்களை யடக்கித் தியாகம் புரிவது ஆவசியகமா யிருக்கிறது.

இனியொரு விஷயத்தையும் நீங்கள் மறந்துவிடுவது கூடாது: இப்பூவுலகின் எந்த மூலைக்குச் செல்வதா யிருப்பினும், நீங்கள் ஆணும் பெண்ணும் கல்வியறிவைத் தேடவேண்டுமென அடிக்கடி வற்புறுத்தி வந்துளார்கள் நபிகட்டிலகம் (சல்). இப் பிரபஞ்சத்தில் காணப்படும் ஒன்றொன்றி லிருந்தும், அதனைக் கூர்ந்து கவனிப்பது கொண்டு, நாம் ஞானமும் நல்லுணர்வும் பெறவேண்டுமென்று குர்ஆன் ஷரீப் மீட்டும் மீட்டும் நினைப்பூட்டி யுள்ளது. இப் பூவுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் காரண காரியத்தை நாம் ஊன்றிக் கவனித்து, நம் புத்தியைத் தீக்ஷண்யப் படுத்திக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். அப்பால், வெளிப்படையாய் விளங்காத நிகழ்ச்சிகளின் அந்தரங்கத் தாத்பரிய மெல்லாம் நன்கு புலப்படலாகும். ஐரோப்பிய மேனாடுகளைத் தும் ஆழிய அந்தகாரத்துள்ளே ஆழ்ந்து தாழ்ந்துபோய்க் கிடந்த காலத்திலே நம் முஸ்லிம்கள் சகல ஞானங்களிலும் முன்னேறி நின்றார்கள்; இவர்கள் கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், சரித்திரம், ஆகியவற்றிலே அளவிலா அபிவிருத்தி யெல்லாம் அடைந்துவந்தார்கள். இவர்கள் — எம் முஸ்லிம்கள் — மகா நபி முஹம்மதின் (சல்அம்) நல்லுபதேசங்களையும், குர்ஆன் ஷரீபின் கூற்றுக்களையும் மறந்துவிட்டு, அறிவைத்தேடுவதை அறவே கைவிட்டு, சரீர சுக போகங்களைத் தேடுவதையே

(27-ஆம் பக்கம் பார்க்க)

எனது 33 வருட ஊழியம்

[ஆசிரியர், அல்ஹாஜ், பா. தாவூத்ஷா அறைவது.]

"(ஏ நபீ!) அவர்கள் (உம்மீது) உறுதி கொள்ளவில்லையென்னுங் காரணத்தால் நீர் தற்கொலை புரிந்துகொள்வீர் போலும்!"

"ஆகையால் திண்ணமாக, அன்னவர்கள் (இத்திருமறையைப்) பொய்ப்படுத்தி விட்டார்கள்; ஆயின், அவர்கள் எதனை ஏளனம்செய்து கொண்டிருக் கிறார்களோ, அதன் (மெய்ச்) செய்தி அதிசீக்கிரம் அவர்கள் பால் வந்து சேரும்"—(குர். 26 : 3, 6).

1-1-1919 (புதன் கிழமை) முற் பகலில் துவக்கப்பட்ட எனது இஸ்லாமிய சமய ஊழியம் இன்று 31—12—1952 (புதன்கிழமைப்) பிற்பகலோடு தனது 33-ஆவது ஆண்டை முடித்துக் கொண்டுவிட்டது. இதுபொழுது இம் மிஸ்கீனது வயது 68 முடிவுறப் போகிறது. எனவே, எனதாயுளில் உத்தேசம் ஒரு பாதியை இச் சத்திய சன்மார்க்கத்தின் உத்தாரணப் புத்துணர்ச்சிக்காகச் செலவிட் டிருக்கிறேன் என்பது நிதரிசனம். இஸ்லாம் என்பது இயற்கையோடியைந்த, ஒரெளிய சன்மார்க்கமென்பது இவ்வுலகப் பெரியார்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வெளிய, இயற்கையோடியைந்த · சத்திய சன்மார்க்கம் இறைவனாலே இத் தாரணி மாந்தரின் உஜ்ஜீவிப்பிற் கென்று எம்பெருமான் முஹம்மத் (சல்) நபியவர்கள் வாயிலாய் அருளிச் செய்யப்பட்டது; இவ்வாறு இறைவனால் அருளப்பட்ட செய்கைக்கு வ'ஹீ என்று பெயர் கூறப்பெறுகிறது. எனவே, எமது திருமறையாம் குர்ஆன் மஜீத் இறைவனது "கலாம் (திருவசனம்) ஷரீப்" என்று அழைக்கப்பட்டு வருகிறது; ஆயின் அவனுடைய கைவேலை—அஃதாவது, இப்பிரபஞ்ச சிருஷ்டியும், இதில் காணப்படும் எல்லாப் பொருள்களின் படைப்பும்— 'பித்ரத் என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

இறைவனது இயற்கைச் சிருஷ்டி அவனது செயலாகவும், அவனருளிய திருமறை அவனது சொல்லாகவும் இருந்து வருங்கால், அவ்வொரே இறைவனுடைய சொல்லும் செயலும் ஒன்றுடனொன்று மாறுபடாது ஒன்றி நிற்க வேண்டுவது நியாயமேயன்றோ? ஒரே இறைவனுடைய **கலாம்** அவ்வொரே ஆண்டவனுடைய 'பித்ரத்' துக்கு எவ்வாறு முரணாயிருப்பது முடியும்? அல்லா(ஹ்)வினால் அருளப்பட்ட அழகிய திருமறை குர்ஆன் என்று அரபில் அழைக்கப் படுவதே போல், அவனது செயன் முறை ('பித்ரத்) ஆங்கிலத்தில் **ஸயன்ஸ்** என்று அழைக்கப் படுகிறது. எனவே, குர்ஆன் வேதமும், ஸயன்ஸ் ஞானமும் ஒன்றுடனொன்று ஒன்றியே நிற்க வேண்டுமென்பது வெள்ளிடை விலங்கலாயிருக்கிறதென்பதே இஸ்லாமிய ஞானவான்களின் தீர்ந்த முடிபாயிருக்கிறது. இம் முடிபே இம் மிஸ்கீனுக்கும் முற்றும் ஏற்றதாயமைந்திருக்கிறது.

ஸயன்ஸென்பது கடைந் தெடுத்த பகுத்துணர்விற்குரிய ஞானத்தின் சிகரமாயிருந்து வருதலினால், குர்ஆன் ஷரீபின் கூற்றும் அத்தகைய கடைந் தெடுக்கப்பட்ட பகுத்துணர்வுக்குரிய ஞானத்தின் சிகரமாயிருக்கிறதென இவ் வுலகினர்க்கெல்லாம்—சிறப்பாக இத் தமிழுலகத்தவர்களுக் கெல்லாம்— எண்பித்துக் காண்பிப்பதே இம்மிஸ்கீனது இடையறா ஊழியமாயிருந்திருக்கிறது. உயரிய இஸ்லாமிய உண்மை மத பக்தியேனும், சிறந்த தமிழ்

ஞானமேனும், ஆழிய ஆங்கிலக் கல்விப்பயிற்சியேனும் அதிகமில்லா நந்தமிழ் நாட்டினர்பால் மீக்கூறிய நல்ல முறையிலே இஷா அத்துல் இஸ்லாம் சேவை செய்வதென்பது எத்துணைக் கடின காரிய மென்பது — அதுவும் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னே செய்வதென்பது — இம் மிஸ்கீனைப்போல் இத் துறையிலிறங்கிப் பாடுபடும் "சிதேவி"கட்கே செவ்வனம் புலப்படக் கிடத்தல் கூடும். இம் மிஸ்கீனுக்கு விரோதமாக எத்தனை பத்திரிகைகள்! எத்தனை 'பத்வாக்கள்! எத்தனை ஏசல் மாலைகள்! எத்தனை வசைமொழி நோட்டீஸ்கள்! எத்தனை கிரிமினல் கேஸ்கள்! எத்தனை சிவில் தாவாக்கள்! அம்மம்ம! என்ன கடுமை! என்ன கொடுமை! இற்றை நாளில், "தடியெடுத்தவ னெல்லாம் சிலம்பக்காரன்," என்றாங்கு, தமிழெழுத்தால் எழுதுவதனைத்தும் "செந்தமிழ்ப் பதிப்பு" என்றும், "காலணாக் கார்டு" ஒன்றை எழுத்துப் பிழையின்றி எழுதத் தெரியாதவர்களெல்லாம், பத்திரிகாசிரியர்களெனவும் புத்தகாசிரியர்களெனவும் பறைசாற்றித் திரிகின்றனர்.

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி, எட்டியமட் டறுப்பதற்கோ வில்லியில்லை இரண்டொன்றா முடிந்து தலை இறங்கப் போட்டு, வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை விளையாட்டாக் கவிதைதனை வரைந்து பாடித், தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!" என்னும் பழம்பாடலே இங்கு என் நினைவிற்கு வருகிறது.

சு. ம. நாத்திகர்களென ஒரு சில வாலிபர் பகிரங்கமா யுலவிப் பிரகடனப்படுத்திக் கொள்ளுகின்றனர்; இன்னம் வெகு சிலர் நாத்திக சு. ம. க்களை ஆதரித்துப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வரைந்து, நல்ல முஸ்லிம்களை யெல்லாம் பொல்லா நாத்திகப் படுகுழியுள்ளே ஆழ்த்தித் தாழ்த்தி வருகின்றனர். இவர்கள் அனைவரும் இதுகாலைக் கேள்வி முறை யில்லாது எதேச்சையாய்த் திரிகிறார்கள்.

ஆனால், அக்காலத்தில் இம்மிஸ்கீனை நல்ல வேலை செய்யவொட்டாது முல்லாக்களும், முழு மக்களும் இனியில்லாத் தொல்லைகளை யெல்லாம் இழைத்து வந்தார்கள். அவர்களுடைய தொல்லைகளுக்கும் தொந்தரைகளுக்கும் இடையிடையே இஸ்லாமிய— உயரிய உண்மை இஸ்லாமிய நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டுள்ளேன். தா. இ. பத்திரிகையையும் துண்டு பிரசுரங்களிலிருந்து தொடங்கி, தினமிரு முறைப்பதிப்பு வரை உயர்த்தி, இதுகாலை ஒரு மாசிகையாகவே வெளியிட்டு, சமய சமுதாய சத்தொழுக்கப் பிரசாரம் புரிந்து வருகிறேன். இவற்றாலெல்லாம் நந்தமிழ்நாட்டு முஸ்லிம்கள் எத்துணை மட்டும் கண்விழித்து முன்னேறியுள்ளார்கள் என்பதற்கு எம் வாசக நேசர்களே தகவுரை கூறட்டும்; ஆண்டவனே அவர்களது கூற்றுக்குச் சாக்ஷியா யிருக்கட்டும். ஆயின், நந்தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இம் மிஸ்கீனை இன்னம் செவ்வனம் முழுப் பயன் படுத்திக் கொள்ளவில்லை யென்பதே இவ்வடியேனது இடையறாக் குறையா யிருக்கிறது. இவர்கள் என்சக்தி, சாமார்த்திய மனைத்தையும் ஏன் முழுக்க முழுக்கக் கறந்து கொள்ளா திருக்கிறார்கள்? இம்மிஸ்கீனுக்கு இறைவன் எத்தனை வயதை இன்னம் சேமத்தில் வைத்திருக்கிறான் என்பதை யானறியேன். இந் நிலையில், என்னால் வெளியிடப்பட வேண்டிய "நபிகள் நாயக மான்மியம்" இரண்டாம் பாகமும், மௌ. முஹம்மதலீ மர்ஹூமின் "இஸ்லாம் மார்க்கம்" (THE RELIGION OF ISLAM)* என்னும் ஆங்கில மகா கிரந்தமும்— ஏற்கெனவே என்னால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது— தமிழில் பல நூல்களும், இம் மௌலானாவின் "புத்துலகமைப்பும்" (THE NEW WORLD ORDER) அச்சாகி வெளிவர வேண்டியனவா யிருக்கின்றன. இவற்றை யெல்லாம் அநேக நண்பர்களிடத்துக் காண்பித்தும், விண்ணப்பித்தும் வருகிறேன். எனினும், இத் தமிழ் நாட்டு முஸ்லிம் பிரமுகர்களும் பணக்காரர்களும் மீக் கூறிய நல்ல நூல்களை யெல்லாம் பிரசுரிக்க முன் வரக்காணோம். அந்தோ!

* இவ்வொரே கிரந்தமே, இஸ்லாம் மார்க்கத்துக் குரிய சகல விஷயங்களையும் சாகோபசாகையா யறிந்துணரப் போதிய பெரு நூலாயிருக்கிறது. இஃது என்று வெளிவருமோ, இறைவனே யறிவான். ப—ர்.

இம் மிஸ்ஸீனல் மொழிபெயர்க்கப்பட்ட குர் ஆன் கையெழுத்துப் பிரதி லாகூர் அஞ்சுமனல் அச்சிட்டு வெளியாக்கப்பட வேண்டுவது பாக்கியா யிருக்கிறது. "ந. நா. மான்மியம்," "இஸ்லாம் மார்க்கம்", "புத்துலகமைப்பு" முதலிய கிரந்தங்கள் நந் தமிழ் நாட்டு முஸ்லிம்களால் வெளியிடப்பட வேண்டுவது பாக்கியா யிருக்கிறது. தா. இ. சஞ்சிகைக்கும், 33 வருடச் சேவைகளுக்குஇப்பாலும், இருக்க வேண்டிய அளவுக்கு இன்னம் பெரும் பகுதியான சந்தாநேயர்கள் சேர்ந்தபாடில்லை. தா. இ. சினிமா அல்லது மானிட மர்ம சஞ்சிகையன்றே!

எனவே, யான் எற்கெனவே எழுதியுள்ளவாறு, இத் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இவ்வடியேனுடைய கல்வி ஞானத்தையும், புத்தியையும், தத்துவத்தையும் போதிய அளவுக்குப் பயன் படுத்திக்கொள்ள வில்லை யென்பதே இம் மிஸ்னினின் மாபெருங் குறையா யிருக்கிறது. எனது எஞ்சியுள்ள ஆயுளின் உற்சாகத்தையும் உள்ளத்துணர்ச்சியையும் செவ்வனம் இம் முஸ்லிம் உலகுக்கு உபயோகமாகுமாறு நன்கு பயன்படுத்திக் கொள்ள முன் வாரார்களா? என்றே யான் இம் முதிர் வயதில் முறையிட்டுக் கொள்ளுகிறேன். என் பிரார்த்தனையை இறைவனும் ஏற்க வேண்டும்; எம் முஸ்லிம் அன்பர்களும் அல்லா (ஹ்) ரஸூலுக்காக அவ்வழகிய உயரிய நூல்களனைத்தையும் தமிழில் அச்சாக்கி வெளிவர உதவி புரிதல் வேண்டும்.

குப்பைத்தொட்டிப் புத்தகங்களும், கூளக் களஞ்சிய நூல்களும் கட்டுக் கட்டாய் வெளிவரும் இக்காலத்தில், மீக்கூறிய நல்ல, உயரிய, பகுத்துணர்வுக் கொத்த, மணிபோன்ற கிரந்தங்களை வெளியிட உதவுவோரின் நாமங்கள் நியாயத் தீர்ப்புநாள் மட்டும் இந் நானிலத்தே நின்று நிலவு மென்பது ஒருதலை. எங்கே பார்ப்போம், எத்தனை செல்வர்கள் முன் வந்து அவ்வரும் பெரும் கிரந்தங்களை அச்சிட்டு வெளிப்படுத்த நல்லுதவி புரியப் போகிறூர்களென்று!

"ஏ ஈமான் கொண்டவர்காள்! உங்களுடைய பொருள்களேனும், உங்களுடைய பிள்ளைகளேனும் அல்லா (ஹ்) வின் ஞாபகத்தைவிட்டு உங்களை மறக்கச் செய்யா திருக்கட்டும். இன்னம், எவர் அவ்வாறு (மறக்கச்) செய்கிறூரோ, அ(ப்படிப்பட்ட) வர்களே தாம் நஷ்டவாளிகள்"—(குர். 63 : 9).

மூலம்: **ஷேக்ஸ்பியர்**

நல்ல நண்பன்

மொழிபெயர்ப்பு: **ஷேக்கோ**

["உங்களது உண்மையான நண்பர்கள், எப்பொழுதும் உங்களைப்பற்றியே பேசிக்கொண் டிருப்பார்கள்; உங்களுக்குப் பக்கத்திலேயே உட்காருவார்கள்; உங்களைப் பற்றியே அதிகமாக நினைப்பார்கள்..." என்பது எம்பெருமானுர் முஹம்மது நபி (ஸல்) அவர்களது திருவாக்கு. அதை அனுசரித்தே, உண்மையான நண்பன் இத்தகைய லக்ஷணங்களைக் கொண்டிருப்பான் என்பதை, ஆங்கிலக்கவி ஷேக்ஸ்பியர், தமது "Faithful Friend"—உண்மையுள்ள நண்பன்— என்ற கவிதையின் மூலம் விளக்கிக் காட்டுகிறூர். அக் கவிதையின் மொழிபெயர்ப்பே இது. அவசியம் கருதி, கருத்துக்குப் பங்கமில்லாத முறையில் மாற்றியிருக்கிறோம்...]

வார்த்தை காற்றைப்போல் லெகுவாய் இருக்கிறது.

உண்மையான நண்பரைக்கண்டுபிடிப்பதோ கஷ்டமாய் இருக்கிறது:

உண்மையாக உனக்கு நண்பனுக இருக்கிறவன், உனக்கு உன் தேவைக்கு அவன் உதவிபுரிவான்.

நீ துக்கப் பட்டுக்கொண் டிருந்தால், அவன் அழுவான்;

நீ தூங்காமலிருந்தால் அவன் தூங்கமாட்டான்

அப்படியே உள்ளத்தின் ஒவ்வொரு துக்கத்திலும், அவனும் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்கிறுன்.

இவைகள் அடையாளங்களாக உள்ளன,

உண்மை நண்பனை ஏமாற்றும் எதிரியிலிருந்து அறிய.

சென்ற மகாயுத்தம் முடிவுற்றதிலிருந்து "ஐக்கிய நாட்டுச் சபை" என்னும் பெயர் எல்லாருடைய வாயிலும் தாராளமாக அடிபட்டு வருகிறது. ஆனால், பல பேருக்கு அந்தச் சபை என்னவென்பதே தெரியாது. இக்கட்டுரையில் கூடியவரை சுருக்கமாகவும் விளக்கமாகவும் அந்தச் சபையின் விருத்தாந்த வருணனைகள் விவரிக்கப் படுகின்றன.

ஐ. நா. சபை பற்றிய முழு விருத்தாந்தம்

N. B. A. வரைவது

இரண்டாவது உலக மஹா யுத்தம் முடிவடைந்த பிறகு 1945-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதியன்று, நிரந்தர உலக சமாதானத்துக்கென்று நிர்மாணிக்கப்பட்ட ஒரு சபைக்குத்தான் ஐக்கிய நாட்டுச் சபை (United Nations Organisation) என்று பெயரிடப் பட்டது. அதற்கு முந்திய முதல் உலக மஹா யுத்தத்தையடுத்து ஜினீவாவில் நிர்மாணிக்கப்பட்ட "சர்வதேச சங்கம்" (League of Nations) என்னும் சமாதான சபை ஹிட்லர் முன்பும் முஸோலினி முன்பும் டோஜோ முன்பும் செல்லாக் காசாகி மற்றொரு மஹா பெரிய கொடிய யுத்தம் மூள்வதைத் தடுத்து உலகைக் காப்பாற்ற முடியாமற் போயினமையால், இந்த இரண்டாவது மஹா யுத்தம் முடிவடைந்த பின்னர் நான்கு வல்லரசுகளான பிரிட்டனும், அமெரிக்காவும், பிரான்ஸும், ருஷ்யாவும் சேர்ந்து ஐக்கிய நாட்டுச் சபையைச் சிருஷ்டித்துவிட்டன. இந்த ஐக்கிய நாட்டுச் சபை யென்பது பழைய சர்வதேச சங்கத்தைவிட ஸ்திரமான, ஒழுங்கான சட்டதிட்டங்களின் மீது அமைக்கப்படுவதால், உலகம் உள்ளளவும் இனி எப்போதும் யுத்த மென்பது மூள முடியாது என்று கருதப்பட்டது. அவ்வாறு கருத்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில்தான் ஐ. நா. சங்கத்தின் சட்டதிட்டங்கள் பல அதிகாரங்களாகவும், பல ஷரத்துக்களாகவும், பல பிரிவுகளாகவும் அழகான சொற்களால், உலக நிபுண சட்டகலா வல்லுநர்களால் ஜோடிக்கப்பட் டிருக்கின்றன. "சர்க்கரை என்று எழுதி அதை நக்கினால் ருசிக்குமோ?" என்பதேபோல், ஐ. நா. சபைக்கான சட்டதிட்டங்களின் வாசக அமைப்புக்கள் பார்க்கப் பரவசமும் சிந்திக்க உளச் சாந்தியும் நல்கத் தக்கனவாகவே வெளித் தோற்றத்தில் காணப்பட்டுவரினும், நடைமுறையில் அவை என்ன வெற்றியைச் சாதிக்கின்றன என்பதை உலக மக்கள் நன்கறிந்து கொண்டிருக்கின்றனர்.

சர்வதேச சங்கம்

இப்போது மாண்டுபோன பழைய சர்வதேச சங்கத்தை உயிர்கொடுத்து உற்பத்தி செய்துவிட்டவர், 1918-இல் அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கி வந்த உட்ரோ வில்ஸன் என்பவரே யாவார். கெய்ஸர் கிளப்பிய 1914-18 முதல் மஹாயுத்தத்தில் அமெரிக்கா ஒரு நஷ்டத்தையும் பெறாது வெறும் லாபத்தையே அடைந்து வந்தமையாலும், அந்தக் காலத்துச் சொற்ப விமானங்களும் நீர் மூழ்கிக் கப்பல்களும் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்க பூமிக்கு யுத்தத்தை இழுத்துச் செல்ல இயலாமையாலும், அந்த யுத்தம் வெறும் ஐரோப்பா கண்டத்தை மட்டுமே வெகுவாக பாதித்தது. எனினும், அமெரிக்க ஜனாதிபதியாகிய உட்ரோ வில்ஸன் இம்மாதிரியான துவேஷ மனப்பான்மை தேசாதேசங்களுக்கிடையே நிலவி வருகிற மட்டும் உலகத்துக்கு க்ஷேமமோ சமாதானமோ கூடிவரப்போவதில்லை யென்பதை யறிந்து, சர்வதேச சங்க மென்னும் ஒரு சங்கத்தை நிர்மாணிக்க வேண்டு மென்றும், எல்லாத் தேசமும் அதில் அங்கம் வகிக்க வேண்டு மென்றும், அவ்வந்நாட்டின் குறைநிறைகளை அச் சங்கத்தில் வைத்துப் பேசுவதால் மற்றொரு யுத்தம் வாராமல் தடுத்துக் கொள்ள முடியு மென்றும் வழிகாட்டினார். ஐரோப்பிய நாடுகள் இந்த யோசனையை வரவேற்று, ஜினீவாவில் சங்கத்தை ஸ்தாபித்தன. ஆனால், உட்ரோ வில்ஸனே எவ்வளவோ முயன்று பார்த்தும் தம் நாட்டை அந்தச் சங்கத்திலே அங்கம் வகிக்கும்படி செய்ய முடியவில்லை. இறுதிவரை அமெரிக்கா அச் சங்கத்தை ஆதரிக்கவே இல்லையாகையால், சர்வதேச சங்க மென்பது வெறும் ஐரோப்பிய வல்லரசுகளின் விளையாடும் ஸ்தலமாகவே இழிந்து போனதுடன், எந்த மாதிரி யுத்தம் தோன்றக்கூடாது என்பதற்காக அச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த மாதிரியினும் மிக மூர்க்கமான மகா பொல்லாத கொடிய யுத்தத்தை மூட்டியும் விட்டுவிட்டது. இவை யெல்லாம் பழைய கதைகள்.

ரூஸ்வெல்ட்

ஆனால், இரண்டாவது மஹா யுத்தத்தின் கொடுமை எத்தன்மைத் தென்பதை அமெரிக்கா தேசமும் போதுமான அளவுக்கு அனுபவித்துப்

பார்த்துவிட்டபடியால், முன்போலில்லாமல் இனி யாவது ஓர் ஒழுங்கான சமாதான சபை உலகத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டு மென்றும், இந்தப் புதிய சபையை அமெரிக்காவே ஊக்கிவிட்டுத் தீரவேண்டு மென்றும் அமெரிக்க மக்களுக்கு ஞானோதயம் ஏற்பட்டுவிட்டது. எனவே, 1945 மே மாதம் வரை ஜனாதிபதியாக உயிர்வாழ்ந்த ரூஸ்வெல்ட் பழைய உட்ரோ வில்ஸனைவிட இன்னம் பரந்தநோக்கத்துடனும், விரிந்த கொள்கைகளுடனும் "அட்லாண்டிக் சாசனம்" என்னும் சமாதானத் திட்டத்தை உற்பத்தி செய்துவிட்டார். அத்திட்டம் ஐ. நா. சபையாக உருப்பெறுகிற மட்டும் உயிர்வாழும் பாக்கியம் ரூஸ்வெல்ட்டுக்குக் கொடுத்து வைக்கப்படவில்லை யென்றாலும், இன்றைய ஐ. நா. சட்ட திட்டங்கள் சகலமும் ரூஸ்வெல்ட் நிர்மாணித்த அஸ்திவாரத்தின்மீது பொருத்தப்பட் டிருக்கின்றன வென்பதை மறவாதீர்கள். அவர் மரணமடைந்த ஐந்து மாதங்களுக்கப்பால்தான் ஐ. நா. சபை ஸான்பிரான்ஸிஸ்கோ நகரிலே அந்த 24-10-1945-இல் நிர்மாணிக்கப்பட்டது.

விளையாட்டாக இப்போது (1952 அக்டோபருடன்) ஏழாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. இந்த ஏழாண்டுகளுக்குள் அந்த ஐ. நா. சபை என்னென்னவற்றைச் சாதிக்க முடிந்தது (?) அல்லது சாதிக்க முயன்றுகொண் டிருக்கிறது, அல்லது சாதிக்கப் போகிறது, அல்லது சாதிக்க முடியவில்லை யென்பதை நாம் இங்கு விவரிக்கத் தேவையில்லை. உங்களுக்கே அது நன்கு தெரியும்.

ஐ. நா. சபை அமைப்பு

ஐக்கிய நாட்டுச் சபை யென்பது ஆறு முக்கிய அங்கங்களாக அமைக்கப்பட் டிருக்கின்றது: (1) ஒரு பொது அசெம்பிளி சபை. (2) ஒரு பாதுகாப்புச் சபை. (3) ஒரு பொருளாதார, சமூகாதார கவுன்ஸில் (4) ஒரு ட்ரஸ்டீ கவுன்ஸில் (5) ஒரு சர்வதேச நீதிமன்றம் (6) ஒரு ஸெக்ரடேரியேட் காரியாலயம். ஐ. நா. வின் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அடிப்படைத் திட்டங்களான தேசாதேச சர்வ உரிமை அல்லது சம அந்தஸ்து, தேசங்களுக்குள் பரஸ்பர நல்லெண்ண வொழுக்கம், சர்வதேச விவகாரங்களில் நீதியும் நேர்மையும் வழங்குவது என்னும் அஸ்திவாரத்தையே இவ்வமைப்பு வன்மையாக உறுதிப்படுத்துகிறது.

(1) பொது அஸெம்பிளி சபை

ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கிற சகல நாடுகளும் இதில் இடம்பெற் றிருக்கின்றன. இந்தப் பொது அசெம்பிளியில் 60 நாடுகள் தற்சமயம் அங்கம் வகிக்கின்றன. [அவற்றின் பெயர்: ஆப்கானிஸ்தான், அர்ஜெண்டைனா, ஆஸ்ட்ரேலியா, பெல்ஜியம், பொலீவியா, பிரேஜில், பர்மா, பைலோரஷ்யன், கனடா, சிலி, சீனா, கொலம்பியா, கோஸ்டா ரிகா, கியூபா, ஜெக்கோஸ்லவாகியா, டென்மார்க், டாமினிகன் குடியரசு, ஈக்வடார், எகிப்து, எல் ஸல்விடார், எதியோபியா, பிரான்ஸ், கிரீஸ், குவாடமலா, ஹைத்தி, ஹோந்துரா, ஐஸ்லாந்து, இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், இராக், இஸ்ராயீல், லெபனன், லைபீரியா, லக்ஸம்பர்க், மெக்ஸிகோ, நெதர்லாந்து, நியூஜிலாந்து, நிக்காராகுவா, நார்வே, பாக்கிஸ்தான், பனமா, பாராகுவே, பெரு, பிலிப்பைன்ஸ், போலந்து, சௌதி அரேபியா, ஸ்வீடன், ஸிரியா, தாய்லாந்து, துருக்கி, யுக்கரேனியா, தென்னாபிரிக்க யூனியன், ஸோவியத் ருஷ்யா, ஐக்கிய பிரிட்டிஷ் அரசாங்கம், அமெரிக்க யுனைட்டட் ஸ்டேட்ஸ், உருகுவே, வெனீஸுவேலா, எமன், யூகோஸ்லாவியா] பொது அஸெம்பிளியின் ஒவ்வோர் அங்கத்தின நாடும் ஐந்துக்கு மேற்படாத பிரதிநிதிகளை மட்டுமே அஸெம்பிளி கூட்டத்துக்கு அனுப்பி வைக்கலா மென்று ஐ. நா. சாசனம் வரையறுத் திருக்கிறது.

ஐ. நா. சாசனத்துக்கு உட்பட்ட எந்தப்பிரச்னையைப் பற்றியும் விஷயத்தைப் பற்றியும், அல்லது அந்தச் சாசனம் உண்டுபண்ணி யிருக்கும் எந்த இயக்கத்தின் சக்தியைப் பற்றியும் நடப்பைப் பற்றியும் பொது அஸெம்பிளி விவாதிக்கலாம். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச் சபை எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண் டிருக்கிறதோ அந்த ஒரு விஷயத்தைத் தவிர்த்து, ஐ. நா. சாசனத்துக்குக் கட்டுப்பட்ட எந்தப் பிரச்னையையும் பொது அஸெம்பிளி ஐ. நா. சபைக்கோ, அல்லது பாதுகாப்புச் சபைக்கோ அல்லது இரண்டுக்குமோ சிபாரிஷ் செய்யலாம்.

பொது அஸெம்பிளியின் பெரும்பாலான வேலைகளைக் கமிட்டிகளே செய்து முடிக்கின்றன. அந்தக் கமிட்டிகளுள் நான்குவகை இருக்கின்றன :—

(அ) பிரதான கமிட்டிகள்: பொது அஸெம்பிளியின் நிகழ்ச்சி நிரலில் கண்ட இனங்களைப் பரிசீலனை செய்து அவற்றை அஸெம்பிளி கூட்டத்துக்கு அனுப்பி வைக்கின்றன.

(ஆ) நடைமுறைக் கமிட்டிகள் : பொது அஸெம்பிளியின் அமைப்பையும், அதன் தினசரி நடவடிக்கைகளையும் கண்காணிக்கின்றன.

(இ) நிரந்தரக் கமிட்டிகள்: தொடர்ந்து நீடிக்கும் சிக்கலான பிரச்சினைகளை ஆராய்ந்து வருகின்றன.

(ஈ) உப அல்லது தாத்காலிகக் கமிட்டிகள் : பிரத்தியேகமான முக்கிய விஷயங்களைக் கவனிப்பதற்காக இவை அவ்வப்போது நியமிக்கப்படுகின்றன.

(2) பாதுகாப்புச் சபை

ஐ. நா. சபை அங்கத்தினர்களுள் பதினொரு அங்கத்தினர்கள் அடங்கிய பிரத்தியேகக் கவுன்ஸிலுக்குத்தான் பாதுகாப்புச் சபை என்று பெயர். இந்தப் பாதுகாப்புச் சபையின் பதினொரு பேர்களுள் ஐந்து பேர் நிரந்தர அங்கத்தினர்கள்; ஆறுபேர் தாத்காலிக அங்கத்தினர்கள். பிற்சொன்ன ஆறு தாத்காலிக அங்கத்தினர்களையும் இரண்டிரண்டு வருஷ கெடுவுக்குப் பொது அஸெம்பிளி தேர்ந்தெடுத் தனுப்புகிறது. ஐந்து நிரந்தர அங்கத்தின நாடுகள் வருமாறு—(1) சீனா (2) பிரான்ஸ் (3) ஸோ

வியத் ருஷ்யா (4) ஐக்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் (5) அமெரிக்க யூனைடெட் ஸ்டேட்ஸ். தற்போதைய ஆறு தாத்காலிக அங்கத்தின நாடுகளுள் பிரேஜில், நெதர்லாந்து, துருக்கி என்னும் மூன்று நாடுகள் 31–12–1952 வரையிலும். சிலி, பாக்கிஸ்தான், கிரீஸ் என்னும் மற்ற மூன்று நாடுகள் 31–12–53 வரையிலும் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்க வேண்டு மென்று பொது அஸெம்பிளி தேர்ந்தெடுத்திருக்கிறது.

ஐ. நா. சபையின் அங்கத்தின நாடுகள், அகில உலக சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் இந்தப் பாதுகாப்புச் சபையையே பொறுப்பாளியாயிருந்து உலகத்தில் யுத்தம் வராமல் காப்பாற்ற வேண்டும் என்ற மகத்தான பொறுப்பைச சுமத்தியிருக்கின்றன.

ஐ. நா. சாசனம் தனது 27–ஆவது ஷரத்திலே அங்கத்தினர்களின் ஓட்டுரிமை பற்றிக் கூறுகிறது.

"1. பாதுகாப்புச் சபையின் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ஓர் ஓட்டு உண்டு.

"2. நடைமுதல் விஷயங்களைப்பற்றி ஏற்படுகிற ஒவ்வொரு தீர்மானமான முடிவும் ஏழு அங்கத்தினர்களின் சாதகமான ஓட்டுக்களைப் பெற வேண்டும்.

"3. ஏனை எந்த விஷயங்களைப்பற்றி ஏற்படுகிற ஒவ்வொரு தீர்க்கமான முடிவும் ஏழு அங்கத்தினர்களின் சாதகமான ஓட்டுகளைப் பெறுவதுடன், நிரந்தர அங்கத்தினர்களின் ஒரு முகமான ஓட்டுகளையும் பெற வேண்டும்..."

"நிரந்தர அங்கத்தினர்களின் ஒரு முகமான ஓட்டு" என்றால், முற்சொன்ன ஐந்து நிரந்தர அங்கத்தினர்களான சீனாவும், பிரான்சும், ருஷ்யாவும், பிரிட்டனும், அமெரிக்காவும் ஏகமனதுடன் அத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அர்த்தம். அந்த ஐந்து நாடுகளுக்கும் ஒவ்வொரு ரத்ததிகாரம் (Veto) உண்டு. பாதுகாப்புச் சபையின் பதினொரு பேர்களுள் பத்து அங்கத்தினர்கள் எந்தவிதமான தீர்மானத்தையாவது ஆதரித்து வாக்களித்தபோதினும், ஐந்து நிரந்தர அங்கத்தினருள் ஒரே ஒருவர் தம்முடைய ரத்ததிகாரத்தைப் பிரயோகித்து விட்டால், அக்கணமே அந்தத் தீர்மானம் தவிடு பொடி யாகிவிடும். ஐ. நா. பாதுகாப்புச் சபை ஸ்தாபிதமானதி லிருந்து இதுவரை எந்த நான்கு நிரந்தர அங்கத்தினரும் ரத்ததிகாரத்தைப் பிரயோகிக்கவில்லை. ருஷ்யா மட்டுமே சுமார் 70 முறை அதைப் பிரயோகித்திருக்கிறது.

பாதுகாப்புச் சபையின் பதினொருபேரும் மாதம் ஒருவர் வீதம் அந்தக் கவுன்ஸிலுக்குத் தலைமை வகிப்பார்கள்.

(3) பொருளாதார, சமூகாதாரக் கவுன்ஸில்

பொது அஸெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 அங்கத்தினர்கள் இந்தக் கவுன்ஸிலில் ஸ்தானம் வகிக்கிறார்கள். மும்மூன்று வருஷ கெடுவுக்கு ஆறு, ஆறு அங்கத்தினர்கள் வீதம் ஒவ்வோராண்டிலும் அஸெம்பிளியால் தேர்ந் தெடுக்கப் படுகின்றனர்.

இந்தக் கவுன்ஸிலின் அதிகாரங்களும் நடவடிக்கைகளும் பின்வருமாறு:—பொது அசெம்பிளியின் அதிகாரத்தின்மீது, பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வது; எல்லார்க்கும் வேலை கிடைக்கும்படி செய்வதுடன், பொருளாதார சமூகாதார முன்னேற்றத்துக்கான வழி வகைகளை வகுத்துக் கொடுப்பது; சர்வதேச பொருளாதார, சமூக, தேகாரோக்கிய இன்னம் இவைபோன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது; சர்வதேச கலாசார கல்வித் துறைகளில் கூட்டுறவை உண்டுபண்ணுவது; இனவேற்றுமை, ஆண் பெண் வேற்றுமை, பாஷை வேற்றுமை, மத வேற்றுமை யல்லாது, மனிதர்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் அகில உலகத்திலும் நிலைநாட்டுவதும், அவற்றை அனுஷ்டிக்கச் செய்வதுமாகும்.

(4) ட்ரஸ்டி கவுன்ஸில்

ஐ. நா. வின் பாதுகாவலுக் கென்று ஒப்படைக்கப்பட்டிருக்கும் எல்லைகளை நிர்வகிக்கும் ஐ. நா. அங்கத்தினர்களும், அப்படிப்பட்ட பாதுகாவலை ஒப்படைக்கப் பெறாத ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தினர்களும் இந்தக் கவுன்ஸிலில் ஸ்தானம் வகிக்கின்றனர். பாதுகாவலுக்காக எல்லைகள் எவ்வெவ் நாட்டுக்கு ஒப்படைக்கப்பட் டிருக்கின்றனவோ அந்த நாடுகளின் எண்ணிக்கையும், ஒப்படைக்கப் படாத நாடுகளின் எண்ணிக்கையும் சரிநிகர் சமானமாக இருக்கும் வண்ணம் இந்தக் கவுன்ஸில் மெம்பர்களைப் பொது அஸெம்பிளி மும்மூன்று வருட கெடுவுக்குத் தேர்ந்தெடுத்து அமைக்கிறது. பாதுகாவலுக்கு ஒப்படைக்கப்பட்ட எல்லைகளை நிர்வகிக்கும் நாடுகள் இந்தக் கவுன் ஸிலிடம் தங்கள் நிர்வாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும். அவ்வறிக்கைகளைப் பரிசீலனை புரிவதும், மனுக்களை ஏற்பதும், அவ்வப்போது அந்தக் குறிப்பிட்ட எல்லைகளை நேரிற்சென்று பார்வையிட்டுவிட்டு வரவேண்டு மென்று ஏற்பாடு செய்வதும் இந்தக் கவுன்ஸிலின் பொறுப்புக்களாகும்.

(5) சர்வ தேச நீதி மன்றம்

ஐ. நா. சபையின் பிரதானமான நீதி இலாகா சர்வதேச நீதி மன்றமாகும். இந்த நீதிமன்றத்திலே சர்வதேச சட்டத்தைத் துணையாகக் கொண்டு, தன்னிடம் சமர்ப்பிக்கப்படும்சர்வவழக்குக்களுக்கும் தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேலும், பொது அஸெம்பிளிக்கும், பாதுகாப்புச் சபைக்கும், ஐ. நா. பிரத்தியேகக் காரியாலயங்களுக்கும் சட்டபூர்வமான உபதேசங்களையும் இந் நீதி மன்றம் புரிந்து, ஒத்தாசை நல்குகின்றது.

(6) ஸெக்ரேடேரியட் காரியாலயம்

இவ்வளவு பெரிய சபையை நடத்துவதற்கும், கடிதப் போக்குவரத்துக்களை நிகழ்த்துவதற்கும் ஓர்

ஆபீஸ் வேண்டுமல்லவா? அந்த மகத்தான பெரிய ஆபீசுக்குத்தான் 'ஸெக்ரெடேரியட்' என்று பெயர். இப் பெரிய காரியாலயத்துக்கான சிப்பந்திகளை எந்த எந்தச் சட்ட திட்டப்படி நியமிக்கவேண்டுமென்பதையும் பொது அஸெம்பிளி முன்னமே தீர்மானித்து நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்ட திட்டத்திற்கு ஒத்தவிதமாகவே "ஸெக்ரெடரி ஜெனரல்" என்னும் தலைமை ஆபீஸர் சிப்பந்திகளை நியமித்துக்கொண்டிருக்கிறார். இந்த ஸெக்ரெடரி ஜெனரல்தாம் அக் காரியாலயத்தின் தலைமை நிர்வாக ஆபீஸராவார்.

ஐ. நா. தலைமைக் காரியாலயம்

இத்தன்மைத்தாய அமைப்பைப் பெற்றுக்கொண்டிருக்கும் 'ஐக்கிய நாட்டுச் சபை யென்னும் பிரமாண்டமான ஸ்தாபனம் ஏதாவதொரு பரந்த இடத்திலும் பெரிய கட்டிடங்களிலுமிருந்துதானே செயல் நடத்த வேண்டும்? எனவே தான், அமெரிக்க யுனைடெட் ஸ்டேட்ஸின் துறைமுகப்பட்டினமாகிய நியூயார்க் நகரிலே 'கிழக்கு நதி' என்னும் பெரிய ஆற்றங்கரையின் ஓரத்திலேயுள்ள மான்ஹட்டன் (Manhattan) என்னும் வட்டாரத்திலேயுள்ள 18 ஏக்கர் விஸ்தாரமுள்ள இடத்திலே தலைமைக் காரியாலயம் (UN Headquarters) அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நிலப்பரப்புக்கும் அங்கு அமைந்துள்ள மூன்று கட்டிடங்களுக்குமே ஐ. நா. தலைமைக் காரியாலயம் என்றுதான் பெயரே யொழிய, அவையனைத்தும் உலக நாடுகளனைத்துக்கும் சொந்தமேயன்றி அமெரிக்காவுக்கோ அல்லது வேறு எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ அல்லது நாடுகளுக்கோ சொந்தமல்ல. விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்த 18 ஏக்கர் நிலமும், அங்குள்ள கட்டிடங்களும் பொதுச் சொத்துக்களாகும். அவ்விடத்திலிருந்து வெளிவருகிற செய்திகளும் அறிக்கைகளும் "ஐ. நா. தலைமைக் காரியாலயம்" என்ற பெயருடன் தான் உலகச் செய்தி ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்படுமன்றி, "நியூயார்க" கின் பெயரிலோ அல்லது 'மான்ஹட்டன்' என்ற தலைப்பிலோ வெளியிடப்படுவதில்லை. சுருங்கச் சொல்லின், நியூயார்க்கின் ஒரு சிறு பகுதியாகிய இவ்விடம் உலகப் பொது இடமாக ஆக்கப்பட்டு விட்டது என்று சொல்லலாம்.

ஐ. நா. ஸ்தாபனத்துக்காக இந்தப் பதினெட்டு ஏக்கர் மனையை அமெரிக்க தயாளுவாகிய ஜான டி. ராக் பெல்லர் (ஜூனியர்) என்பவர் நன்கொடையாக இனமளித்திருக்கிறார். மனையின் கிரையமல்லாமல், அங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மூன்று பெரிய, சிறிய கட்டிடங்களுக்கும் சுமார் ஆறே முக்கால் கோடி டாலர் (அஃதாவது, சுமார் ரூ. 32½ கோடி ரூபாய்) செலவில் ஐந்து வருஷ காலத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. பல எஞ்சினீயர்கள் திட்டமிட்டுக் கண்காணித்து இவற்றைக் கட்டிமுடித்திருப்பினும், வாலஸ் கே. ஹாரிஸன் என்னும் பிரதான நிபுணரே இம் மகத்தான கட்டிடங்கள் இவ்வளவு அழகாகவும் பெருமிதமாகவும் நின்றிலங்குவதற்குத் திட்டம் போட்டுக் கொடுத்த பெரிய கலைஞரும் சிற்பியு மாவார்.

ஸெக்ரெடேரியட் கட்டிடம்

ஒரு கட்டிடத்தைப்பற்றி எவ்வளவு வருணித்துப் படம் போட்டுக் காட்டி விவரித்து விளக்க மெழுதினபோதினும், அக்கட்டிடத்தை நேரிற் காணும்போது உண்டாகிற உணர்ச்சியையும் உத்வேகத்தையும் எப்படிப்பட்ட எழுத்து நிபுணனும் தன் பேனா கொண்டு தீட்டிக் காட்டுவதென்பது இயலாது. தாஜ் மஹா லென்றால் அது பார்ப்பவருள்ளத்தில் எப்படிப்பட்ட மகத்தான பேருணர்ச்சியை உண்டு பண்ணுகிறதென்பதை ஆக்ராவுக்குச் சென்று நேரில் கண்டறிய வேண்டுமன்றி, அந்தச் சலவைக்கல் சமாதியைப் பற்றி விவரித்தெழுதப்பட்டுள்ள நூல்களைப் படிப்பதால் கிஞ்சித்தும் பெற்றுவிட முடியாது. எனவே, ஐ. நா. சபையின் பிரமாதமான கட்டிடங்களை வருணிப்பதன் மூலம் உங்களுள்ளத்துள் பரிபூரணமான போட்டோப் படத்தை உண்டுபண்ணிவிட இயலாதென்பதை முற்று முணர்ந்தே, என்னாலியன்ற அளவுக்கு அவற்றைப் பற்றி விளக்கி எழுதிக்காட்ட முற்படுகிறேன். (நான்கூட அவற்றை நேரில் போய்க் கண்டதில்லை என்பதை மறக்க வேண்டாம்!)

ஐ. நா. தலைமைக் காரியாலயத்திலே வானளாவ நின்று திகழ்கிற பெரிய உயரமான கட்டிடம் ஸெகரெடேரியட் டென்னும் ஆபீஸ் அலுவலகமாகும். இக் கட்டிடம் 39 அடுக்குள்ள மாடிக் கட்டிடமாகும். செங்குத்தாக நட்டுவைக்கப்பட்டுள்ள நீளமான நெருப்புப் பெட்டியைப் போல் தோற்றமளிக்கும் இக்கட்டிடத்தில் காணப்படும் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு மாடியாகும். அந்த ஒவ்வொரு மாடியிலும் அகலம் அகலமான பெரிய பெரிய அறைகளும் கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. படத்தை உற்றுக் கவனித்தீர்களேயானால் இதைக் கண்டு கொள்வீர்கள். நியூயார்க்கின் மற்ற உயரமான கட்டிடங்களுக்கும் இந்த ஸெகரெடேரியட் கட்டிடத்துக்குமுள்ள ஒரு பெரிய வித்தியாசமென்னவென்றால், அவையெல்லாம் நட்டுவைத்த பென்சிலைப் போல் தோற்றமளிக்கின்றன; ஆனால், இதுவோ ஒரு பெரிய ஸோப் டப்பா அல்லது அகலங் குறுகிய நீண்ட அட்டைப் பெட்டி செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்டதைப போல் காட்சியளிக்கிறது. சுமார் 3200 ஆபீஸர்களும் பலப்பல சிப்பந்திகளும் பணிபுரியும் இந்த ஆபீஸ் கட்டிடந்தான் கிழக்கு நதி தீரத்திலே சப்பையான தோற்றத்துடன், ஆனால் கண்களைப் பறிக்கத்தக்க வனப்புடன் அழகாக நின்றுகொண்டிருக்கிறது. ஆற்றில் நின்றுகொண்டு அதை இராவேளையில் நோட்டமிட்டால், அந்த 39 அடுக்கு மாடிகளிலுள்ள எல்லா அறைகளிலும் எரிகிற விளக்குச் சுடர் ஒளிகள் எப்படிப்பட்ட வனப்பை யூட்டுமென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். கண்ணைக் கவரும் கண்ணாடிகளாலும் சலவைக் கற்களாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் தூரத்தோற்றத்துக்கு ஒரு

மிகப் பெரிய நீள்சதுரச் சலவைச் சுற்றுண்டு கண்ணாடிவைத் திழைக்கப்பட்டதாய் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதைப் போன்ற உணர்ச்சியையே உண்டுபண்ணி வருகிறது.

மகாநாடுகள் கூடும் கட்டிடம்

வடக்குத்தெற்காய் ஓடுகிற 'கிழக்கு நதி'யின் மேற்குக்கரை யோரத்தில் அமைந்திருக்கும் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் ஸெகரெடேரியட் கட்டிடம் அந்த 18 ஏக்கர் மனையின் தெற்குக் கோடியிலே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. [பிளான் படத்தில் நம்பர் 1 பார்க்க.] வெறும் கண்ணாடிக் கட்டிடம் போல் பளபளப்பாக நின்று திகழும் அந்த ஸெகரெடேரியட் கட்டிடத்துக்குக் கீழே, நதிக்கரை யோரமாக 400 அடி நீளத்தில், ஐந்தடுக்கு மாடிகளுடன் மற்றொரு கட்டிடம் இருக்கிறது. [நம்பர் 2 பார்க்க.] ஐ. நா. சபையின் எண்ணிறந்த கமிட்டிகள் இந்தக் கட்டிடத்திலே தான் கூடுகின்றன. இதிலுள்ள கமிட்டிக் கூட்ட அறைகளும், ஆயிரக் கணக்கான ஆபீஸ்களும் மிக நேர்த்தியாக நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், இங்கே ஹோட்டல்களையும், மீட்டிங் அறைகளையும், அங்கத்தினர்கள் ஆயாசமாக ஓய்வெடுத்துக் கொள்வதற்கு லாயிக்கான அறைகளையும், இன்னம் பூலோக சுவர்க்கம் போன்ற சகல வசதிகளும் ஒருங்கமைந்த சௌகரியமான இடவசதிகளும் வனப்புப் பெற அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நீளமான கட்டிடத்தின் நிலமட்டத்துக்கு அடியிலுள்ள மிகப்பெரிய விசாலமான கூடந்தான் ஐ. நா. வுக்கு வருகிறவர்கள் தங்கள் மோட்டார் கார்களை நிறுத்தி வைக்கும் இடமாக அமைந்திருக்கிறது. இந்தக் "கார் நிறுத்திவைக்குமிடம்" தரைமட்டத்துக்குக் கீழே அமைந்திருந்த போதினும், இதில் பகல் வெளிச்சத்தைத் தோற்கடிக்கும் அளவுக்கு மின்சார வெளிச்சமும், காற்று வசதியும் உண்டுபண்ணி வைக்கப்பட்டிருப்பதால், அந்தப் பரந்த இடம் ஒரு பெரிய அழகான மைதானமே போல்தான் காணப்படுகிறது. ஏக காலத்தில் 1500 மோட்டார் கார்கள் அங்கே சௌகரியமாக நிறுத்தி வைக்கப்படுவதற்கு எல்லா வசதிகளும் பொருந்தி யிருப்பதுடன், ஒன்றுடனொன்று மோதிக்கொள்ள முடியாதபடியும், இடைஞ்சலின்றி எந்தக் காரையும் வெளியேற்றிக் கொணர்வதற்குத் தக்க வசதிகளுடனும் அந்த இடம் பரந்தும், விசாலமாகவும், வீதிகளின் அகன்ற பாதைகள் போன்றும் அமைந்திருக்கின்றது.

ஸெக்ரெடேரியட் கட்டிடத்தை ஒட்டி நீண்டிருக்கும் இந்த மகாநாட்டுக் கட்டிடம், பக்கத்தில் வானளாவ ஓங்கி நிற்கும் பிரும்மாண்டமான கட்டிடத்தைவிட எவ்வளவோ தாழ்வானதாகவும், பிரபலம் பெருததாகவும் தோற்றமளிப்பினுங்கூட, ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் ஜீவநாடி போன்றது இக்கட்டிடமென்பது ஞாபகத்திலிருக்க வேண்டும். ஐ. நா. சபையின் எண்ணிறந்த கமிட்டிகள் இக்கட்டிடத்தில் தான் கூட்டங் கூடி எதையும் முடிவு செய்ய வேண்டும். உலகத்தின் வேறெந்தக் கமிட்டிக் கூட்டமும் இவ்வளவு அழகான, இவ்வளவு வசதியான, இவ்வளவு நேர்த்தியான கட்டிடத்தில் கூடுவதில்லையென்பது குறிப்பிடத் தக்கது. இந்த மகாநாடுகள் கூடும் கட்டிடம் உயரம் குட்டையாக இருப்பதுடன், ஸெக்ரெடேரியட் கட்டிடத்தைவிடத் தெற்கு வடக்காகச் சுமார் ஒன்றரை மடங்கு நீண்டிருக்கிறது.

1



கிழக்கு

அஸெம்பிளிக் கட்டிடம்

ஐ. நா. சபையின் மிக முக்கியக் கட்டிடமான பொது அஸெம்பிளிக் கட்டிடந்தான் அந்த மனையில் வடக்குக் கோடியில் மூன்றாவது கட்டிடமாக அமைந் திருக்கிறது. இந்தக் கட்டிடத்தில்தான் சென்ற 14—10—1952 செவ்வாயன்று ஆரம்பமான ஏழாவது வருடாந்த அஸெம்பிளிக் கூட்டம் முதன் முதலாகக் கூட்டப்பட்டது. [படத்தில் நம்பர் 3 பார்க்க.] இக் கட்டிடந்தான் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் மிகப் பிரதானமான, முக்கியமான கட்டிட மாகையால், இதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகவே வருணிக்க வேண்டும். ஐ. நா. சாசனத்தின் அடிப்படைத் திட்டமே இந்தப் பொது அஸெம்பிளிதா னாகையால், இந்த அஸெம்பிளியே பாதுகாப்புச் சபைக்கு ஊன்றுகோலாகையால், இதன் விவரம் நுணுக்கமாக விவரிக்கப்படுகிறது. முற் சொன்ன மற்றிரு கட்டிடங்களும் ஆபீஸ் வேலை நடக்கும் அலுவலகங்களாகவும், மகாநாடு கூடுகிற கூடங்களாகவும் விளங்கி வரும் போது, இந்தப் பொது அஸெம்பிளிக் கட்டிடந்தான் உலக சமாதானத்துக்கு வழிகோலப்படும் அடிப்படைத் திட்டங்கள் உருவாக்கப் படுகின்ற ஸ்தலமாக விளங்கி வருகிறது.

பக்கத்தில் 39 அடுக்கு மாடிகளுடன் வானளாவி நிற்கும் ஸெக்ரெடேரியட் கட்டிடத்துடன் இந்த அஸெம்பிளிக் கட்டிடம் ஒப்பிட்டுப் பார்க்கப்படுமளவில், இஃதொரு தாழ்ந்த சிறு கட்டிடமாகவே தோற்றமளிக்கிறது. இந்த அஸெம்பிளிக் கட்டிடம்தான் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் வாயிற்படியாக அமைந்திருப்பதுடன், முற் சொன்ன மற்றிரு கட்டிடங்களையும் இதுவே இணைத்துவைக்கிறது. இப் புதுக் கட்டிடம் அகில உலக சிற்பக்கலையின் பிழிந்தெடுக்கப்பட்ட சாறாகவே இருந்து வருகிறது. நவநாகரிக வசதிகள் பொருத்தப்பட்டும், உட்புறமெல்லாம் வெகு வனப்புடன சிங்காரம் செய்யப்பட்டும் பேரெழிற் சித்திரமாக இது காணப்படுகிறது. முன்னம் நாம் விவரித்த ஐந்தடுக்கு மகாநாட்டுக் கட்டிடத்தைப்போல் இந்த அஸெம்பிளிக் கட்டிடமும் தாழ்ந்ததாக விளங்கி வந்தாலும், அந்த மகாநாட்டுக் கட்டிடம் நீள் சதுரமானதாக அமைந்திருக்கையில், இந்த அஸெம்பிளிக் கட்டிடம் இருபுறமும் உட்பக்கமாக வளைந்த சுவர்களுடனும், உச்சியில் ஒரு விசாலமான மண்டபத்துடனும் நிற்கிறது. இந்த ஒரே கட்டிடத்தின் மதிப்பு மட்டும் 1,22,50,000 டாலர் (ரூ. 5,89,53,125) ஆகும். இந்தக் கட்டிடம் அந்த மனையின் வடக்குக் கோடியில், ஆற்றங்கரையை அடுத்து இருப்பதுடன், இதன் கிழக்குச் சுவரும் மேற்குச் சுவரும் உட்புறம் வளைந்த வண்ணம் கட்டப்பட் டிருப்பதுடன், இதன் முன்முகப்பு வடக்கு நோக்கி இருக்கிறது. இதுதான் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் வெளிவாயில். பொது மக்கள் இதன் வழியாகத்தான் இங்குப் பிரவேசிக்க முடியும்.

வடக்கு நோக்கி யிருக்கும் இந்த முன் முகப்பு, நீண்டுயர்ந்த சலவைக்கற் றூண்களுடனே காட்சியளிக்கின்றது. இந்த வெண் சலவைத் தூண்களிடையேயும், அவற்றின் மத்தியிலேயும் ஒருவிதமான கண்ணாடியை வைத்துக் கட்டியிருக்கிறார்கள். இந்தக் கண்ணாடியின் தன்மை யென்னவென்றால், வெளியே யுள்ள வெளிச்சத்தை உள்ளே வாங்கி விடுமேயன்றி, உள்ளேயுள்ள எதையும் வெளியே நிற்பவர்களால் பார்க்க முடியாது. எனவே, வெளி முகப்பைத் தாண்டினால் உள்ளேயும் வெளியேயுள்ள முழு வெளிச்சமும் அப்படியே ஒளி வீசிக்கொண் டிருப்பதைக் காணலாம். இக்கட்டிடத்தின் கிழக்கு மேற்குச் சுவர்கள் (நாம் முன்னம் விவரித்தபடி) உட்பக்கமாக வளைந்திருக்கையில், அவற்றின் வெளிப்புறங்கள்மீது ஆங்கிலேய நாட்டுச் சுண்ணாம்புக்கற்கள் பதிக்கப்பட் டிருக்கின்றன. கட்டிடத்தின் தெற்குக் கோடி ஒரு சிங்கார வனத்தண்டை போய் முட்டுகிறது. இந்தத் தென்புற வாசல் உச்சி முதல் தரை மட்டம் வரை, முழு நீள அகல உயரத்துக்கும் ஒரு பெரிய கண்ணாடி ஜன்னலாகவே நிர்மாணிக்கப்பட் டிருக்கிறது. அஃதாவது, கட்டிடத்தின் தெற்கு முகப்பு ஒரு சுவரோ, தூணோ, மறைப்போ இல்லாமல் உச்சி முதல் வெறும் திறப்பாக இருப்பதுடன், மழை காற்று முதலிய உபத்திரவமில்லாம லிருப்பதற்காக வெறும் கண்ணாடிச் சுவராக நிற்கிறது என்று சொல்லலாம். இந்தத் தெற்குக் கோடியாகிய கண்ணாடிச் சுவரிலேதான் ஒரு பிரத்தியேக வாயிற்படி அமைந்திருக்கிறது. இந்த வாயிற்படி சலவைக் கல்லால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியேக வாசல் வழியே அஸெம்பிளிக்கு விஜயஞ்செய்யும் பிரதிநிதிகள்மட்டுமே நுழையலாம். இந்தப் பின்புற வாசலுக்குப் பிரதிநிதிகள் எப்படிச் செல்கின்றனர், தெரியுமா? அஸெம்பிளிக் கட்டிடத்தை யொட்டி ஒரு பிரத்தியேகப் பாதை வடக்கிலிருந்து தெற்கு வரை வியாபித்திருக்கிறது. ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் வடக்கு வாயிலண்டை வந்து சேரும் அவர்கள் அந்தப் பிரத்தியேகப் பாதை வழியே கட்டிடத்தின் பின்புறத்துக்குப் போய்ச் சேர்கிறார்கள். அந்தப் பாதை நெடுக, அறுபது அங்கத்தின் நாடுகளின் தேசீயக் கொடிகளும் ஒன்றையடுத் தொன்றாகக் கொடிமரங்களில் பறந்துகொண் டிருக்கும்.

கட்டிடத்தைப் பார்கக வருகிறவர்கள் வடக்கு வாசலில் நுழைந்தவுடனே, நிக்கல் பூசப்பட்ட ஏழு பெரிய கதவுகளைக் கடக்கவேண்டும். இந்த விலை மதிப்பேறிய பளபளப்பான கதவுகள் கனடா அரசாங்கத்தால் வெகுமதியாக அளிக்கப்பட் டிருக்கின்றன. அக் கதவுகளின் மேல் முகப்பிலே சமாதானத்தையும், நீதியையும், சத்தியத்தையும், சகோதரத்துவத்தையும் எண்பித்துக் காட்டக்கூடிய சிற்பங்கள் வனப்புடன் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக் கதவுகளைக் கடந்ததும், ஒரு பிரும்மாண்டமான பெரிய கூடம் அமைந்திருக்கிறது. கட்டிடத்தின் மேற்றளமாகிய 75 அடி உயரத்துக்கும் இந்தக் கூடம் ஒரே திறப்பாக இருப்பதுடன், சுற்றிலும் அமைந்துள்ள பால்கனிகளும், பெரிய மாதாகோவிலுள் வீசும் ஒளி போன்ற இனிய வெளிச்சமும் பார்ப்பவருள்ளத்துள் பரவசம் உண்டுபண்ணும்.

இந்தப் பெரிய கூடத்தைத் தாண்டினால் வாட்டமாகச் சரிந்த சரிவிலே படிக்கட்டுக்கள் மேல் நோக்கிப் போகின்றன. இந்தப் படிக்கட்டுக்களின் மீது ஏறிக்கொண்டே சென்றால், அங்குள்ள பொது மக்கள் காலரிகளுக்கும், பொதுக் கூட்ட அஸெம்பிளி ஹாலுக்கும் போய்ச் சேரலாம். அந்தப் படிக்கட் டல்லாமல், இரு புறமும் இரு 'லிப்ட்'களும் உண்டு. அவற்றிலும் ஏறிப் போகலாம். இந்தப் பொதுஜன காலரியில் 800 பேர் உட்காரக்கூடிய அழகிய தனித்தனி ஆசனங்கள் போடப்பட் டிருக்கின்றன. இங்கு அமர்ந்து கொண்டால் எதிரிலுள்ள அஸெம்பிளிக் கூடத்தை எல்லாரும் நன்றாய்ப் பார்க்க முடியும்.

இந்த அஸெம்பிளிக் கூடத்தின் இடப்புறத்திலே (கிழக்குப் பக்கத்திலே) பொது மக்கள் நடமாடும் பாதை யிருக்கிறது. இது நீண்டும் அகன்று மிருப்பதால், இங்கேதான் கண்காட்சிப் பண்டங்களும் பொருட்காட்சிப் பண்டங்களும் அமைக்கப்பட் டிருக்கின்றன. மேலும், இந்த வழியாகத்தான் மகா நாட்டுக் கட்டிடத்துக்கும் ஸெக்ரெடேரியட் ஆபீசுக்கும் போக வேண்டும்.

இந்த அஸெம்பிளிக் கூடம் 165 அடி நீளமும் 115 அடி அகலமும், 75 அடி உயரமும் கொண்டதாகும். இந்தக் கூடம் இரு பகுதியாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஒன்று பிரதி நிதிகளுக்காக, மற்றொன்று வேடிக்கை பார்ப்பவர்களுக்காக. பிரதிநிதிகளுக்காக உள்ள பகுதியில், பத்து வரிசை பச்சை நிறத்தோல் போர்த்தப்பட்ட சாய்மேஜைகளும், நீலநிறத்தோல் போர்த்தப்பட்ட நாற்காலிகளும் போடப்பட் டிருக்கின்றன. தற்சமயம் அப்படிப்பட்ட மேஜை நாற்காலிகள் 750 பிரதிநிதிகளுக்காக வென்று போடப்பட் டிருப்பினும் எதிர்காலத்தில் வேறு புதிய நாடுகள் ஐ. நா. அங்கத்தினர்களாகச் சேர்ந்து தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைப்பதா யிருந்தால், அவர்களுக்கும் வசதி செய்து கொடுக்க வென்று இடம் காலியாக விடப்பட் டிருக்கிறது. வேடிக்கை பார்க்க வந்தவர்கள், விருந்தினர், பத்திரிகை நிருபர்கள் முதலியவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மறு பகுதி சிறுகச் சிறுக காலரிபோல் மேல்நோக்கி அடுக்கடுக்காக அமைக்கப்பட் டிருக்கிறது. இதில் 270 அழகிய ஆசனங்கள் பார்வையாளர்களுக் கென்றும்,



ஐ. நா. ஸ்தாபனத்தின் செகரெடேரியேட் கட்டிடமும் மகா நாடுகள் கூடும் கட்டிடமும் அஸெம்பிளிக் கூடம் கட்டிமுடிக்குமுன் எடுக்கப்பட்ட படம் இது.

234 ஆசனங்கள் பத்திரிகை நிருபர்களுக்கென்றும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

கட்டிடத்தின் உச்சியிலுள்ள பிரும்மாண்டமான மண்டபத்தின் நேர்வழி அமைந்திருக்கும் இந்த அஸெம்பிளி ஹாலில் பிரதிநிதிகளாகப் போயமரும் பாக்கியம் பெற்ற புண்ணியவான்கள் அண்ணாந்து பார்த்தால் பெரிய தொப்பி போன்ற மண்டபமிருப்பதையும் எதிரிலே சபைத் தலைவர் அமர்ந்திருப்பதையும் பார்க்கப் பார்க்கப் பிரமிப்படையும்படி எல்லா அம்சங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தில் எல்லாப் பிரதிநிதிகளும் கூட்டம்கூடி ஐ. நா. சபையை நடத்தும்போது அக் காட்சி எவ்வளவு பிரமிப் பூட்டுவதாய் விளங்குகிறதென்பதை நேரிற் சென்றால்தான் பூரணமாய் நுகரமுடியும். பகல்போன்ற மின்சாரச் சுடரொளி வெளிச்சமும், பெரிய நாடக மேடை போன்ற கூடமும் பார்ப்பவருள்ளத்துள் அழியாத உணர்ச்சியையே உண்டுபண்ணிவிட்டு விடும்.

இந்த ஹால்அமைந்திருக்கும் தளவரிசைக்குக்கீழ் மட்டத்திலேதான் ஐந்து கமிட்டிக் கூட்ட அறைகளும், எழு ரேடியோ ஸ்டேடியோக்களும், ஒலிப்பதிவு செய்யும் அறைகளும், ஒரு பெரிய 'கண்ட்ரோல்' அறையும் அமைந்துள்ளன. இந்தக் கண்ட்ரோல் அறையிலிருந்துதான் ஐ.நா. தலைமைக்காரியாலயத்தின் எல்லா இடத்துக்கும் செய்திகளனுப்பப்படும்.

ஐக்கிய பிரிட்டிஷ் நாடுகளும் (பிரிட்டன்) கனடாவும் இக் கட்டிட நிர்மாணத்துககாகக் கொடுத்த வெகுமதிகள் ஒரு புறமிருக்க, நியூஜீலாந்து உலகப் பிரசித்தி பெற்ற 'ரிமு' மரச் சட்டங்களையும், ஆஸ்ட்ரேலியா 'லேஸ்' மரச் சட்டங்களையும் கொடுத்துதவியிருக்கின்றன. அந்த லேஸ்மரச் சட்டங்களால் நேர்த்தியுடன் செய்யப்பட்ட மரவேலையமைப்புக்களே ஸெக்ரெடெரி ஜெனரலின் ஆபீஸையும், பிரஸிடெண்ட்டின் மேடையையும் அலங்கரிக்கின்றன.

இவை யல்லாமல், அஸெம்பிளி ஹாலின் கோடியில் தொங்கும் விலைமதிப் பேறிய திரைத் துணிகள் ஹைத்தீயிலிருந்தும், பத்திரிகை நிருபர்களின் தங்குமறைகளில் தொங்கும் திரைகள் இஸராயீலிலிருந்தும், எல்லாப் பொது மக்கள் அமரும் ஆசனங்களும் ஸ்வீடனிலிருந்தும், சபைத் தலைவர் பிரஸிடெண்ட் அமரும் மேடைமீது பதிக்கப்பட்டுள்ள சலவைக்கல் இத்தாலியிலிருந்தும், அஸெம்பிளி ஹாலிலுள்ள தரைமீது விரிக்கப்பட்டிருக்கும் ரத்ன கம்பளங்கள் இத்தாலியிலிருந்தும் கிரயங் கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றன.

இந்த விதமாக வெல்லாம் கோடிக் கணக்கான டாலர்களும், எண்ணிறந்த மணி நேரங்களும் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள ஐ. நா. சபைத் தலைமைக் காரியாலயம் மாஜீ சர்வ தேச சங்கத்தைப்போல் அற்பாயுஷுடன் மறைந்துவிடுமா, அல்லது நீடித்து நிலைத்து நின்று ஏதும் உருப்படியாகச் செய்து சாதிக்குமா? என்பதை எதிர்காலந்தான் நிரூபிக்க வேண்டும்.

ஆனால், ஒன்று மட்டும் உறுதி. ஒவ்வொரு வல்லரசும் தன்தன் சுயநலத்தை ஒழித்துக் கட்டிவிட்டு, அயலான்மீது அநியாயமாகச் சந்தேகம் கொள்வதை அடியோடு உதறித்தள்ளினாலொழிய, இந்த ஐ. நா. சபையை விடுத்து இன்னம் ஓராயிரம் ஐ. நா. சபைகள் உருவெடுத்த போதினும் இவ்வுலகத்தில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்த முடியவே முடியாதென்பதில் கிஞ்சித்துமையமில்லை.

16-ஆம் பக்கத்தொடர்

தங்களுக்குரிய முக்கிய குறிக்கோளாய்க் கொண்டுவிட்டபடியால், மேனாட்டு மக்கள் இவர்களைத் தாண்டிக்கொண்டு முன்னேறிச் சென்று விட்டார்கள். நான் சொல்வதை நம்புங்கள்: இம்முஸ்லிம்கள் தங்கள் உறக்கத்தின்று உணர்ச்சிபெற்றெழுந்து, தங்கள் பெருநபி முஹம்மத் (சல்) அவர்களுடைய உபதேசங்களையும் உதாஹரணங்களையும் பின்பற்றி நடக்கத் துணிவார்களாயின், இன்றுங்கூட இவர்கள் அம்மேனாட்டவர்களைத் தாண்டி, அன்னவர்களைப் பின்னிடையச் செய்து, முன்னேறிச் சென்று விடலாம். எல்லாம் வல்ல இறைவன் நம்மெல்லோரையும் அந்த ஒரே— ஆனால், கடினமான— பாதையினூடே நேராகவும் சீராகவும் நடாத்தி வைக்குமாறு நாமனைவரும் சதா பிரார்த்தித்து வருவோமாக.

"மானிட இன்பம்" ஆசிரியர்

K. வெங்கடராவ் எழுதியுள்ள

அபூர்வமான சிற்றின்ப நூல்கள்.

1. காமக் களஞ்சியம்	0	14	0
2. ஆண் பெண் இன்பம்	0	14	0
3. ஆண் பெண் ஜனனேந்திரிய விளக்கம்	0	12	0
4 காம கலாசாகரம்	0	12	0
5. தேக தர்ம அவஸ்தை	0	12	0
6. உச்சஸ்தான இன்ப சுகம்	0	12	0
7. தேக தத்துவ வினா விடை	0	12	0
8. கசங்கிய கன்னி	0	12	0
9. ஆண் பெண் உறவு ஆபாசமா? (வேள்)	1	0	0
10. என் காதலி (சிரஞ்சீவி)	1	0	0
11. சம்சார பந்தம் ,,	1	0	0
12. நித்ய கன்னி ,,	0		0
13. யார் விபசாரி ,,	0		0

தா. இ. ஏஜெண்ட்களுக்குக் கமிஷன் உண்டு.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, திருவல்லிக்கேணி ஹைரோட் சென்னை-5

ஷஜருத்துர்

[உரிமை யாவும் ஆசிரியருக்குச் சொந்தம்]

அத்தியாயம்—24

கணவரும் மனைவியும்

பாக்தாதில் அப்படியெல்லாம் கலீபா நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கையில், காஹிராவிலோ, அரண்மனையின் அந்தப் புரத்திலே ஷஜருத்துர்ரும் மூஈஜுத்தீனும் காதல் விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். முன்னம் ஒரு முறை ஷஜருத்துர் வேறொரு சுல்தானுக்கு மனைவியாயிருந்தார்; இப்போதோ, இனியொரு சுல்தானுக்கு மனைவியாயிருக்கிறார். இரண்டுக்கும் என்ன வித்தியாசமென்றால், முன் சந்தர்ப்பத்தில் சுல்தானின் தயவால் அந்த நிலைமையையடைந்திருந்தார்; இப்போதோ, இவருடைய தயவால் இவர் கணவர் சுல்தானாயிருக்கிறார். முன்பெல்லாம் கணவருக்குப் பயந்த மனைவியாய் ஷஜருத்துர் காட்சியளித்து வந்தார். இப்போதோ, ஷஜருத்துர்க்குப் பயந்த கணவராக மூஈஜுத்தீன் காணப்பட்டு வருகிறார். ஸாலிஹின் பத்தினியாயிருந்தபோதெல்லாம் அந்நாரிமணி மிகவும் சாந்த குண சீலியாகவும், நேர்மைக்கோர் உறைவிடமாகவும் மிளிர்ந்து வந்ததுடன், தம்மையே ஸல்தனத்துக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத வேற்று நாட்டுப் பெண்ணாகக் கருதி வந்தார்; இப்போதோ நேர்மாற்றமான குணங்களைப் பெற்றுக் கொண்டதுடனே, மிஸ்ரே தம்முடைய சொந்தச் சொத்தென்றும், அதை வெறும் தயா விஷயமாகவும், தந்திர யுக்தியாகவும் தாற்காலிகமாகத் தன் கணவரிடம் ஒப்படைத்து வைத்திருப்பதாகவும் மனப்பால் குடிக்க ஆரம்பித்து விட்டார். பதவி மோகத்துக்கு மிகவுமோசமாய்ப் பலியாய்விட்ட வேறொருவரை நாம் இவ்வுலக சரித்திரத்தில் ஷஜருத்துர்ருக்கு இணையாகக் கூறமுடியாதபடி ஆண்டவன் அத்துணை மாற்றிவிட்டான் என்பதைப் போகப்போக நீங்களே தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்.

“என்னுருயிர்க் காதலி! இன்பரசவல்லியே! நின்னை என் மனைவியாய் அடையும் பாக்கியத்தைப் பெற நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ தெரியவில்லையே! ஏ சுந்தராங்கியே! ஏன் பேசமாட்டேனென்கிறாய்?” என்று விரகதாபத்தினால் வெதும்பிக் கொண்டே கிட்ட நெருங்கினார் மிஸ்ரின் சுல்தான் மூஈஜுத்தீன்.

“உஸ்! காம சேஷ்டைகள் இருக்கட்டும்! கலீபாவின் ஆள் எவனோ ஒருவன் சில தினங்களுக்கு முன் இக் காஹிராவுக்கு வந்து, நம்மைப் பற்றியெல்லாம் புலன் விசாரித்துவிட்டு, ஐயூபி வம்சத்தைச் சேர்ந்த மூஸா வென்னும் சிறுவனையும் உடனழைத்துக் கொண்டு பாக்தாதுக்குச் சென்றிருக்கிறானாமே! அதனால் என்னென்ன கேடு காலங்கள் சம்பவிக்குமோ தெரியவில்லையே?” என்று கலவரந் தோய்ந்த வதனத்துடனே ஷஜருத்துர் பேசினார்.

"அப்படியா? எனக்கது தெரியாதே! கலீபா என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லையே?" என்று மூஜூத்தீன் துள்ளித் துடிக்கப் பேசியதைப் பார்த்தால் கலீபா அக்கணமே அவர் கிரீடத்தைப் பறித்து, அவரைத் தூக்கு மேடைக்குக் கூப்பிட்டுச் செல்வதைப் போன்ற உணர்ச்சி பெற்றவர் உளறியதுபோ லிருந்தது.

"என்ன செய்வார்? மிஸ்ருக்கு சுல்தானாவதற்கு ஐபக்குக்கு உரிமையில்லை யென்றும், ஐபூபிக்கே உரிமை யிருக்கிற தென்றும் அறிக்கை பிறப்பிக்கப் போகிறார். மிகவும் மிஞ்சிப்போய் விட்டால், அதே மூஸாவை சுல்தானாகவும் பிரகடனப்படுத்திவிடப் போகிறார். அவ்வளவுதானே!"

"ஐயோ! அப்படியானால் என் கதி?"

"உங்கள் கதி என்ன! நீங்களும் சுல்தானாகவே இருப்பீர்கள்."

"என்ன ஓர் ஊரில் இரண்டு பைத்தியக்காரர்களா? ஒரு ஸல்தனத்துக்கு இரு சுல்தான்களா? என்ன வேடிக்கை! அஃதெப்படி முடியும்?"

"மிஸ்ருடனே ஒரு சம்பந்தமுமில்லாத பாக்தாத் கலீபாவுக்கே இந் நாட்டுக்கு ஒரு சுல்தானை நியமிப்பதற்கு உரிமை இருக்கும்போது, இந் நாட்டைக் கிறிஸ்தவர்களின் வாயிலிருந்து மீட்டுக் கொடுத்த எனக்கு ஒரு சுல்தானை நியமிக்க உரிமை கிடையாதா?— நீங்கள் பேசாம லிருங்கள். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"ஷஜருத்துர்! என் வயிற்றைக் கலக்குகிறதே! தூரான்ஷாவின் கதியை நான் இன்னம் மறக்கவில்லையே!"

"ஏன் தொடை நடுங்குகிறீர்கள்? அவனுக்கு விரோதமாக நானிருந்தேன்; அதனால் அவன் அந்தக் கதியில் போய் முடிந்தான். நீங்கள் என்னுடைய கணவரா யிருக்கிற வரையில் ஏன் கலங்க வேண்டும்? நான் இருக்கிற வரையில் உங்களை எவர் நெருங்க முடியும்! கலீபா, என்ன, உங்கள் சிரசையா கிள்ளி விடுவார்?"

"ஷஜர்! நீ இருக்கிற வரையில் என்னை எவரும் நெருங்க முடியா தென்பது முற்றிலும் மெய்தான். ஆனால், கலீபா எடுக்கிற நடவடிக்கையில் நம்மிருவருக்குமே சேர்ந்து கேடுவந்து விட்டால்?... ஆ! நினைக்கவும் பயமாயிருக்கிறதே!"

"நீங்கள் பெரிய தைரியசாலியா யிருக்கிறீர்களே! கலீபா இன்னம் என்ன நடவடிக்கை எடுப்பா ரென்பது தெரியாம லிருக்கும்போது உங்கள் உயிரும் பாதி போய் விட்டது; குடலும் கலங்கிவிட்டது! உங்களை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?"

"ஷஜருத்துர்! வேண்டாம்! கலீபாவின் கோபத்துக்கு என்னை ஆளாக்க வேண்டாம்! என்னை விட்டுவிட்டால். போதும், நான் மைமூனாவுடன் எங்கேயாவது ஓடிப்போய்ப் பிழைத்துக் கொள்ளுகிறேன்! எனக்கு என்னவோ பண்ணுகிறது. வயிற்றாலே வரும்போ லிருக்கிறதே!"

"உஸ்! பேசாமலிருங்கள். எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்ள எனக்குத் தெரியும். கலீபா என்ன செய்கிறா ரென்பதைப் பொறுத்துப் பார்ப்போம். நீங்கள் இம்மாதிரி தொடை நடுங்கியாயிருப்பது எனக்கு மிகுந்த வருத்தத்தையும் ஏமாற்றத்தையுமே அளிக்கிறது. கொண்டவன் பலமிருந்தால்தானே கூரைமேல் ஏறிச் சண்டை செய்யலாம்? உங்களுக்கு நான் தைரியங் கூறிக் கொண்டே யிருந்தால், என் வேலையை யார் பார்ப்பது?" என்று கோபமாகப் பேசினார் மிஸ்ரின் மாஜீ சுல்தானா.

"என்னுடைய பலம் என்னவேண்டி யிருக்கிறது? எல்லா அதிகாரத்தையுந்தாம் நீயே வைத்துக் கொண்டிருக்கிறாயே! நான் பெயருக்காகவும் அறிக்கையில் காட்டிய இடத்தில் கையொப்பமிடவும், வெள்ளிக்கிழமை குத்பாக்களில் என் பெயரைப் பேஷிமாம் சேர்த்துப் படிக்கவும் மட்டுமேயன்றோ சுல்தானாக இருக்கிறேன்! நான் சுல்தானாக இருந்த தெல்லாம் போதும்போதும். என்னை இவ்வளவோடு விட்டாலே போதுமே!"

அதற்கு மேல் ஷஜருத்துர்ரால் பொறுக்க முடியவில்லை. மிகுந்த ரோஷத்துடனும், ஆக்ரோஷத்துடனும் மூஜூத்தீனுக்கு உபதேசம் புரிய ஆரம்பித்தார். சுல்தானென்றால் சர்வ சக்தியும் அவருக்கே இருக்கிற தென்பதை நன்றாய் விளக்கிக் காட்டி, போதாக் குறைக்குத் தாம் வேறு வேண்டிய மட்டும் துணைபுரியக் காத்திருப்பதாகவும் தைரியங்கூறி ஒன்றும் பிரமாதமாக வந்துவிடா தென்பதையும் சுட்டிக் காட்டினார்.

மூஜூத்தீன் இயற்கையாகப் பயந்த சுபாவமுடையவரல்லர்; பக்கா தைரிய சாலியே. ஆனால் அவர் ஷஜருத்துர்ருக்குத் தம்முடைய சுயேச்சையைப் பலி கொடுத்த பிறகு மிகவும் பலஹீனமுற்றுவிட்டார். ஷஜருத்துர் சற்றுவது பயந்து அடங்கி நடந்திருந்தால், மூஜின் கையே ஓங்கியிருந் திருக்கும். ஆனால், அவ்வம்மையார் தம் அதிகாரத்தை எந்த விதத்திலும் எள்ளத்துணையும் பறிகொடுத்துவிடக் கூடாதுஎன்னும் வைராக்கியசித்தத்துடனே, மூஜூத்தீனைமகாதந்திரமாகத் தமக்கு முற்றமுற்ற அடங்கி நடக்கக் கூடியவராகச் செய்து கொண்டுவிட்டு, இம் மாதிரியான சங்கட சந்தர்ப்பங்களில் பக்குவமாகப் பயமுறுத்தாட்டிக் கொண்டும் வந்தார். இம்மாதிரி யெல்லாம் செய்வதற்கு வேறொருவரால் இயலுமா? என்பது சந்தேகந்தான். எனினும், ஷஜருத்துர் இந்த விஷயத்தில் விசித்திரமான திருஷ்டாந்தமாகவே விளங்கி வருகிறார். இப்படியெல்லாம் தம்முடைய் இணையிலாச் சாமர்த்தியத்தைக் கொண்டு ஷஜருத்துர் செய்து காட்டுகிற விசித்திரங்களை விளங்கிக் கொள்ளாதவர்கள், "ஷஜருத்துர் சூனியக்காரி" என்றும், "மந்திரவாதி" என்றும், "தந்திரக்காரி" என்றும் "மோகினிப்பேய்" என்றும் விதம் விதமாக வெல்லாம்திரித்துக் கூற ஆரம்பித்து விட்டார்கள்.

முற்கூறிய சம்பவம் நடந்து சில நாட்களாயின. ஷஜருத்துர்ருக்குத் தெரியாமல் எப்படியாவது

தம்முடைய ஆசை மனைவி மைமூனாவையும், அருமைக் குழந்தை நூருத்தீன் அலீயையும் ஒரு முறையாவது போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று முஈஜுக்கு ஆவல் தோன்றியது. அவர் அப்படிப் போய்வரக் கூடாதென்று ஷஜருத்துர் ஒன்றும் நேரடியாகத் தடுத்து வைத்திருக்கவில்லை. எனினும், அவராகவே பயந்து கொண்டுதான் போகாமலிருந்தார். மேலும், பொழுது விடிந்ததிலிருந்து பொழுது போகிறவரை ஷஜருத்துர் ஓயாமல் முஈஜுத்தீனைக் கவனித்துக் கொண்டேயிருந்தமையால், அவருக்குப் பிரிந்துபோகத் தைரியம் பிறக்கவில்லை. அன்றியும் ஸல்தனத்தின் சாவியை யெல்லாம் கணவரிடம் கொடுத்துவிட்டு, ஷஜருத்துர்ரே சூத்திரக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்தமையால், அம்மனைவிக்குத் தெரியாமல் கணவர் ஏதும் செய்யவும் முடிவதில்லை; நினைக்கவும் முடிவதில்லை. ஆகவே, எப்படியாவது புது மனைவியிடம் அனுமதி பெற்றுப் பழைய மனைவியைப் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று நினைத்து ஷஜரை அண்மினார்.

வாழ்க்கையின் பற்பல வின்னியாசமான நாடகங்களில் நடித்து நடித்துப் பழகிப்போயிருந்த ஷஜருக்கு, தம்மெதிரில் வந்து நிற்பவரின் முகத்தைப் பார்த்தாலே எதிரியின் உள்ளத்துள் என்னவித எண்ணம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்பதைச் சரியாய் ஊகித்துணரும் சக்தியும் இப்போது வந்து விட்டது. எனவே, முஈஜுத்தீன் தமதில்லத்துக்குப் போய்வர அனுமதி கோரவே தம் முன் வந்து நிற்கிறாரென்பதை ஷஜருத்துர் உணர்ந்து கொண்டுவிட்டார். கலீபாவின் நடவடிக்கைகள் தெரிவதற்குள்ளே முஈஜுத்தீனை நழுவ விடுவது கூடாதென்று ஷஜருத்துர் பல காரணங்களை யுத்தேசித்து முடிவு செய்திருந்தமையால், அந்த சுல்தானை மெதுவாக மயக்க ஆரம்பித்தார்.

“நாதா! தங்கள் வதனம் ஏன் சற்று வாட்டமுற்றாற்போலிருக்கிறது? கலீபா என்ன, நம் தலையையா சேதித்து விடுவார்? விட்டொழியுங்கள் அந்தப் பயத்தை!”

“கண்மணி! நான் கலீபா எடுக்கப் போகிற நடவடிக்கைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை... ஆனால், நான்...”

“ஆனால், என்ன? தாங்கள் ஒன்றுக்குமே சற்றும் கவலைப்பட வேண்டாமென்றுதான் நான் சொல்கிறேனே! அந்த மூஸா என்பவன் ஓர் எலிக்குஞ்சு! தாங்களோ, சிங்கக்குட்டி! கலீபா எலிக்குஞ்சை இந் நாட்டுக்கு சுல்தானாக நியமித்தனுப்பினால், சிங்கக்குட்டியாகிய தாங்களேன் அஞ்ச வேண்டும்? கேவலம், ஒரு ருக்னுத்தீனின் உதவியையும் மூமிய்யாவாக்கப்பட்ட பிரேதத்தையும் வைத்துக் கொண்டு, காட்டு மிராண்டிகளான கொடிய நசாராக்களிடமிருந்தே நான் இந்த ஸல்தனத்தைக் காப்பாற்றியிருக்க, தேகாரோக்கியத்தில் ஒரு குறைவுமின்றி, நல்ல திடகாத்திரத்துடனே யிருக்கும் தங்களை வைத்துக் கொண்டா இந்த அக்கிரமம் புரிகிற கலீபாவை வெல்ல முடியாது? முன்னமொரு கலீபாவுக்கு வேறொரு வகையில் விசித்திரமான பைத்தியம் பிடித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பல கலீபாக்கள் விதம் விதமான அக்கிரமங்களையும், அட்டூழியங்களையும், அழிச் சாட்டியங்களையும் புரிந்ததாக வெல்லாம் படித்திருக்கிறேன். அந்த மாதிரி இந்த கலீபாவும் என்னென்னவோ செய்து பார்க்கிறார்!”

“ஷஜருத்துர்! சும்மா கிடந்த என்னை இந்த மாதிரி சுல்தானாக்கிவிட்டு, என் உரிமைகளை யெல்லாம் பறித்துவிட்டாயே! என்மனைவியுடனும் குழந்தையுடனும் நான் எவ்வளவோ சுகத்துடனும் சௌகரியத்துடனும் வாழ்க்கை நடாத்தி வந்தேன். ஆனால் நான் எப்பொழுது உன்னை மணந்து கொண்டேனோ, எப்பொழுது சுல்தானாக ஆக்கப் பட்டேனோ, அப்பொழுதே நான் எல்லாவற்றையும் இழக்க நேர்ந்து, மன நிம்மதியற்ற வாழ்க்கையும் வாழவேண்டி வந்து விட்டதே!”

“நாதா! சல்தனத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நாம், ஒரு சிறிதாவது நம்மாலியன்றதைத் தியாகம் செய்துதான் ஆக வேண்டும். இப்போதும் ஒன்றும் மிதமிஞ்சி விடவில்லையே! சர்வ பொறுப்பையும் நானே தான் நிர்வகித்து வருகிறேன். தாங்கள் பெயருக்காகவாவது சுல்தானாயிருக்கிறீர்கள்; எல்லாவித சுகபோகங்களையும் சௌகரியமாய் அனுபவித்து வருகிறீர்கள். என்னைப் பாருங்கள்! அல்லும் பகலும் உறக்கங்கூடக் கொள்ளாமல் என்னென்ன விதமாக வெல்லாம் கவலைப்பட்டு வருகிறேன், தெரியுமா? இவ்வளவும் யாருக்காக? எல்லாம் தங்களுக்காகவே! சுல்தானாகிய தங்களைக் கௌரவிக்கவே! ஆனால், காரணம் ஏதுமின்றித் தாங்கள் இல்லாத கவலைகளை வலிய வரவழைத்துக் கொண்டு, வீணே தவிக்கின்றீர்கள். இந்த கலீபாவின் உபத்திரவம் சிறிதே தணியட்டும். நானே மீண்டும் சுல்தானாவாகி, உங்கள் சுமையை இறக்கி விடுகின்றேன். இதற்காகப் பிரமாதமாகக் கவலைப் படுவானேன்?”

முஈஜுத்தீன் படுகிற அவஸ்தைகளை யெல்லாம் ஷஜருத்துர் “தியாகம்” என்னும் ஒரே வார்த்தையில் அடக்கிவிட்டபடியால், வீட்டுக்குப் போவதற்கு அனுமதி கோர அவர் துணியவில்லை. எனவே, பேசாமல் அங்கேயே அமர்ந்து விட்டார். மெய்யும் சோர்ந்து விட்டார்.

“ஷஜருத்துர்! கலீபா மூஸாவை சுல்தானாக நியமித்துவிட்டால், நாமென்ன செய்யலாம்? நம் மீதும் அமீருல் மூமினீன் ஒழுங்கு நடவடிக்கை யெடுப்பாரோ?”

“நாதா! நான் எத்தனைமுறை சொல்லியிருக்கிறேன்? மிஸ்ரின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கு இவர் யார்? கலீபாவாயிருந்தால், நினைத்ததெல்லாம் செய்யலாமோ? மிஸ்ரை நான் தூரான்ஷாவுக்காகக் காப்பாற்றிக் கொடுத்தேன். அவன் சுல்தானாகவும் சில நாட்கள் அரசு செலுத்தினான். ஆனால், பொது மக்களும்

அமீர்களும் அவனுடைய அக்கிரமங்களைச் சகிக்க முடியாமல் அவனைக்கொன்று வீழ்த்தினார்கள். பிறகு அவர்களே ஏகமனதாக என்னைப் பட்டத்துக்கு உயர்த்தினார்கள். திஜ்லா நதிதீரத்தில் பாக்தாத் ஷரீபில் உல்லாசமாகப் பொழுது போக்கிக்கொண் டிருக்கும் கலீபா சாஹிபுக்கு இப்போது என்ன அவ்வளவு பெரிய அக்கறை இம்மிஸ்ரின் மீது வந்துவிட்டது? ஒரு பெண்பிள்ளை ஆளுவது ஹராம் என்று மார்க்கத் தீர்ப்புக் கொடுத்துவிட்டார். இப்போதுதான் தங்களை சுல்தானாக்கி விட்டேனே! இனியும், கலீபாவுக்கு என்ன வந்தது கேடு? நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். மிஸ்ரீகள் வெறும் முட்டாள்கள்; சிறிதும், சுயஞானமில்லாதவர்கள்; இத்தனை நாட்களாக ஐயூபிகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தவர்கள்; இனி நமக்குத்தாம் அடிமையா யிருப்பார்கள். மேலும், நான் இந்தக் காஹிராவுள் காலடி யெடுத்து வைத்தது முதல் அமீர்தாவூதால் வாங்கப்படுகிற வரையில் மிஸ்ரீகளுள்ளே நன்றாய்ப் பழகி, அவர்களுடைய குணவிசேஷங்களையும் மிக நன்றாகவே தெரிந்துகொண் டிருக்கிறேன். கலீபா ஏதாவது இசகு பிசகு செய்வதா யிருப்பின், மிஸ்ரீகள் நம்மையே ஆதரிப்பார்களன்றி, கலீபாவுக்குப் பயப்பட மாட்டார்கள். எனவே, நீங்கள் பேசாமலிருங்கள்!''

"கலீபா தம்முடைய பரிவாரங்களுடன் மூஸாவை ஈங்கனுப்பி, அவனையே சுல்தானாக்கி விட்டால், நானும் எப்படி சுல்தானாக இருக்க முடியும்? எனக் கொன்றும் புரியவில்லையே! நீ ஏதேதோ தைரியம் சொல்லுகிறாய். நான் கேட்டுக் கொண்டாலும், என் மனம் கேட்க மறுக்கிறதே, ஷஜ்ருத்துர்! கலீபாவை அறைகூவுவது சரிதான். ஆனால், பிறகு என்ன விளையு மென்பதையும் நாம் சற்றாவது சிந்திக்க வேண்டாமா? உன்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றியோ, அல்லது கெட்டிக் காரத்தனத்தைப் பற்றியோ நான் சந்தேகிக்கவில்லை. ஆனால், நம்மெல்லாரையும்விட சாமர்த்தியசாலியான அல்லாஹு தஆலா ஒருவன் இருக்கிறா னென்பதையும், எல்லாம் அவன் நாடியபடியேதான் நடக்கு மென்பதையும் நாம் மறக்கக் கூடாதல்லவா? 'அல்லா (ஹ்) சூழ்வினை செய்பவருள்ளெல்லாம் மிகச் சிறந்தவன்' என்று அவனே தன் திருமறையில் கூறி யிருக்கவில்லையா?''

ஷஜருத்துர் ஆண்டவனைச் சென்ற சில நாட்களாக அடியோடு மறந்துவிட்டு, உலகாயத வாழ்க்கையிலே நன்றாய் ஊறிப்போ யிருந்தார். இப்போது முஈஜுத்தீன் அந்தப் பரம்பொருளின் பெயரை உச்சரித்த வுடனே நெஞ்சம் துணுக்குற்றுக் கல்லாய்ச் சமைந்துவிட்டார்.

கலீபாவை ஏமாற்றலாம்; மிஸ்ரீகளை ஏமாற்றலாம்; கணவரை மயக்கலாம்; சுல்தானாவா யிருக்கலாம். பேநாமியாகவாவது முஈஜுத்தீனைப்

(34-ஆம் பக்கம் பார்க்க)

புதுவருஷப் பெரும் பரிசு!

ரூ. 40,000

நெ. 34

(20 சரியான பரிசுகளுக்கு வினியோகிக்கப்படும்) Tele: FINIX

எல்லாப் பரிசுகளும் உத்தரவாத முள்ளவை.

ரூ. 2000 முற்றிலும் சரியானதற்கு. ரூ. 200 முதல் இருவரிசை சரியானதற்கு. ரூ. 30 ஒவ்வொரு முதல் வரிசை சரியானதற்கும்.

1 முதல் 16 வரையுள்ள எண்களை இந்தக் கட்டங்களில் எழுதி, நேராகக் கூட்டினாலும், மேலிருந்து கீழே கூட்டினாலும், குறுக்கே கூட்டினாலும் 34 விடை வரும்படி செய்யவேண்டும். ஒவ்வோர் எண்ணும் ஒரே முறைதான் உபயோகிக்கப்பட வேண்டும்.

கடைசியாக அனுப்பும் தேதி: 2-2-53 முடிவு: 12-2-53

பிரவேசக் கட்டணம்:—ஒரேவிடைக்கு ரூ. 1-0-0. 4 விடைகளுக்கு ரூ. 3-0-0. ஒவ்வொரு 8 விடைகளுக்கும் ரூ. 5-0-0.

சென்ற போட்டியின் விடை (78)

19	20	23	16
14	25	26	13
24	15	12	27
21	18	17	22

நிபந்தனைகள் :- வெறுங்காகிதத்தில் எழுதப்பட்ட எத்தனை விடைகளும் அனுப்பலாம். மேலே காட்டிய கட்டணப்படி அனுப்பவேண்டும். கட்டணம் செலுத்தப்படும்போது, மணியார்டர் ரசீதை அல்லது போஸ்டல் ஆர்டர், பாங்க் டிராப்டை உடன் சேர்த்து அனுப்பவேண்டும். புலந்த்ஷஹரிலுள்ள ஒரு பிரபல பாங்கியில் சீல் வைக்கப்பட்டுள்ள எமது சரியான விடைக்கு முற்றிலுமோ, அல்லது வரிவரிக்கோ ஒத்தாற்போல் உள்ள விடைகளே சரியானவை என்று கருதப்படும். ஆங்கிலத்திலேயே கடிதம் எழுத வேண்டும்; அரபி இலக்கத்திலேயே விடை இருக்க வேண்டும். மணியார்டர் கூப்பனில் உங்கள் பெயரும் விலாசமும் எழுதுங்கள். மேலே சொன்ன பரிசுத் தொகை, எமக்கு வந்து சேரும் முழுதும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கும். ஆனால், உத்தரவாதமுள்ள பரிசுகள் மாற்றப்பட மாட்டா. விடையனுப்பும்போது, உங்கள் பெயரும் விலாசமுமிட்ட, ஸ்டாம்பு ஒட்டிய கவரை வைத்தனுப்பினால் சீக்கிரம் முடிவைத் தெரிந்து கொள்வீர்கள். மானேஜரின் தீர்ப்பே சட்டப்படி முடிவானதும் கட்டுப்படுத்துவதுமாகும். உங்கள் விடைகளையும் கட்டணங்களையும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும் :—

PHOENIX CORPORATION, REGD. (35) BULANDSHAHR U. P.

இஸ்லாத்தின் இலக்ஷியங்கள்

[கனம் தங்கிய டாக்டர் இஷ்தியாக் ஹுஸைன் குறைஷி வரைவது.]

முஹம்மத் நபி (சல்) ஒரு நூதன மதத்தினைப் போதிக்கவில்லை; ஆனால், அனைத்து மதங்களின் சாராம்சத்தையே போதிக்கலாயினர்.

மனிதன் கேவலம் இத் தாழுலக பௌதிக வாழ்க்கையைக் காட்டினும் மேலாய தொன்று இருந்து வருகின்ற தென்பதை சதா சர்வகாலமும் அறியவே ஆவல் மிக்கவனா யே படைக்கப்பட் டுள்ளான்; இத்தகைய மனப்பான்மை யொன்று இவனுக்கு இயற்கையிலே இல்லாதிருப்பின், இம்மானிடன் மிருகப்பிராய வாழ்க்கையைப் பார்க்கினும் வேறாய உயரிய உயிர்வாழ்க்கையை யடையப் பெற்றவனா யிரான். வெறும் பொட்டல் நிலமாய "கானகத்தூடே தட்டழிந்து திரிய" (குர்ஆன்) மனமில்லாது போய்விடின், இவன் தனக்கு முன்னே ஒருயரிய லக்ஷியத்தையே வைத்துக் கொள்ளக் கடவன். மானிட எண்ணத்துக்கும், இவனது செயலுக்கும் ஏற்பட்டுள்ள நெருங்கிய தொடர்பு யாவரும் அறிந்துள்ள தொன்றேயாம். எனவே, நாம் அடிக்கடி, "நம்முடைய லக்ஷியத்தை அறிந்தே தான் நடக்கிறோமா?" என்று நம்மையே வினவிக் கொள்ளக் கடவோம்.

இஸ்லாத்தின் இலக்ஷியங்கள் என்னென்ன வென்பதை அறிய முயல்வதா யிருப்பின், இம்மார்க்கம் ஆதியிலே போதிக்கப்பட்ட காலத்திருந்த சூழ்நிலைகள் இப்படிப்பட்டவை யென நாம் நன்குணர்தல் அத்தியாவசியமாகும். அக்கால அரைநாகரிக வனாந்தரப் பிரதேசமாய் விளங்கி வந்த அரப்நாடு ஏனையெல்லா உலக நாடுகளைவிட மிக மிக மிருக வாழ்க்கையிலே இழிந்துகிடந்தது எனல் வேண்டும்; அந்நாட்டு மக்கள் மிருகத்தினும் கீழான இழிய பிராணிகளா யிருந்தனர்கள்; அவர்க ளெல்லாம் மாகொடிய வியபிசாரம், மதுபானம், சூதாட்டம், உள்நாட்டுப் போராட்டம், களவு, கொலை, கொள்ளை ஆதிய மகா பாதகங்களில் ஆழ மூழ்கிப் போய்க்கிடந்தார்கள். அவ்வரபிகளின் பாடல்க ளெல்லாம் பெண்களையும் அசுவங்களையுங் குறித்தே வருணித்து வந்தன; "குர்"ஐயைப் பற்றியும் கவி யாப்பார்கள்.

இத் தகைய மக்களுக்கு ஒழுக்கமும் சீலமும் உபதேசிக்கவே முஹம்மத் (சல்) அவர்கள் எழுப்பப்பட்டார்கள். இம் மகான் பால்ய முதலே அந்நாட்டு மக்களின் அடாத ஒழுக்க வீனங்களைப் பழித்து இழித்துக் கூறியே வந்தார்கள். இவர்கள் அவர்களுடைய தீச்செயல்களை விட்டு நீங்கி நின்றதுடனே, அவர்களுடைய பழைய துராசாரங்களைப் படித்துப் பார்க்கப் பிரியங்கொள்ளாதவர்க ளாகவும் இருந்துவந்தார்கள்; என்னெனின், இவர்கட்கு எழுதப் படிக்கத் தெரியாது. இப் பெருமானைத் தவிர்த்து, அநேகமா யெல்லா அரபியரும் மீக்கூறியவாறு தீய ஒழுக்கமுடையவர்களா யிருந்துவந்தமையால், இம்மஹானுபாவர் தன்னந் தனியாய் நின்றே தங்கள் ஏக தெய்வ ஏக சகோதர இஸ்லாத்தைப் பிரசாரம் புரியத் துணிந் தெழுந்தார்கள். நபி முஹம்மத் (சல்) அவர்களுடைய உபதேசங்களில் ஒன்றுகூட அம்மக்களுக்கு— அவர்களுடைய பழங்கால வாழ்க்கைக்கு— ஒத்திராது போய்விட்டமையால், அவர்கள் நம் பெருமானது ஒவ்வொரு சீர்திருத்த ஏற்பாட்டையும் மிகவன்மையாய் எதிர்க்கத் தலைப்பட்டார்கள்; அதற்கெல்லாம் கிஞ்சித்தும் அஞ்சாமலே நபிபெருமானார் (சல்) ஆண்டவன் மீது வைத்துள்ள அசைக்க முடியா உறுதியால் அவனது உறுதுணை கொண்டே தங்கள் பிரசாரத்தைத் தைரியத்துடனே நடத்திவரலாயினர்கள். பாருங்களேன் அவ்வாண்டவன் விளைத்த அற்புதத்தை! ஒரு சில ஆண்டுகளுக்குள்ளே அவ்வரப் ஜாதியா ரெல்லாரும் தங்கள் புராதன வாழ்க்கையையும் பாழான பழக்க வழக்கங்களையு மெல்லாம் அடியுடன் கைகழுவி விட்டு, புதிய நல்லொழுக்க மத வாழ்க்கையை மேற்கொண்டு

விட்டதுடனே நில்லாது, ஏக இறைவன் கொள்கையையும், ஏக சகோதர வாஞ்சையையும் ஏனைமக்களுக் கெல்லாம் போதிக்கும் போசிரியர்களாகவே பரிணமித்தெழுந்துவிட்டார்கள்; உலக மன்பதைக் கெல்லாம் ஒழுக்க உயர்வையும் நல்லறிவுச் சுடரையும் நல்கத்தக்க ஞானசிரியர்களாகவும் உயர்ந்தோங்கத் தலைப்பட்டு விட்டார்கள்.

சத்திய மென்பது என்றும் ஒன்றுதானே! எனவே, இஸ்லாம் போதிக்க வந்த சத்தியம் ஒரு நூதன சித்தாந்த மன்று; பண்டு முதல் பழங்கால தீர்க்கதரிசிகளால் போதிக்கப்பட்டு வந்த சன்மார்க்க போதத்தைத்தான் நபிகட்டிலகமும் (சல்) நவீன முறையிலே நன்கெடுத்துப் போதித்தார்கள்; இஸ்லாம் என்பது ஒரு நூதன சமயமன்று; எல்லாக் காலத்திலும் எல்லா நபிமார்களாலும் எல்லா மன்பதைக்கும் எடுத்தோதப்பட்ட சத்தியத்தின் சாரசங்கிரமே இஸ்லாத்தினுல் எடுத்துபதேசிக்கப் படுவதாயிற்று. அவ்வக்காலத்தில் அந்த அந்த நபிமார்களால் தத்தம் மக்களுக்குஏற்றமாதிரியிலே போதிக்கப்பட்டு வந்த அந்த ஏக இறையின் சத்திய சன்மார்க்கம் எம்பெருமானுரால் (சல்) சகல மன்பதைக்கும் சர்வ காலத்திற்கும் பொருத்தமா யிருக்கத் தக்க நல்ல முறையிலே ஸ்திரமான அஸ்திபாரத்தின்மீது வன்மையுடனே வேரூன்றச் செய்யப்பட்டது. எனவே, இறைவனது அந்தச் சத்தியத்தைத் துறந்து, அல்லது மறந்து வெளியேறிவிடுவ தன்று இஸ்லாம்; ஆயின், அதனை அனுசரித்து நடப்பதே இஸ்லாமாகும். இறைவனுடைய நபிமார்களால் உபதேசிக்கப்பட்ட சத்தியம் ஆதிமுதலே ஒன்றுகவேயிருந்துவந்தும், அந்த அந்த ஜாதியினரும் தத்தமக்கு மட்டுமே ஆண்டவனல் அவ்வுண்மை அருளப்பட்ட தென்றும், ஆதலால், அவர் அவர் சமயமே அவ்வாண்டவனுக்குரிய மெய்யான மதமென்றும் அறியாமையால் உரிமை பாராட்டலாயினர்கள்; இந்தத் தவறுன, அசத்தியமான அபிப்பிராயத்தை நபி முஹம்மத் (சல்) திருத்தி, எல்லாத் தீர்க்கதரிசிகளாலும் எப்பொழுதும் போதிக்கப்பட்டு வந்த இறைவன் சத்தியம் ஒரே சத்தியந்தான் என்றும் அச் சத்தியம் எல்லாக் காலத்துக்கும் எல்லா மன்பதைக்கும் பொருத்தமா யிருக்கக் கூடிய முறையிலே செவ்வனம் தங்களால் செப்பஞ்செய்து வைக்கப்பட்டு விட்டதென்றும் கூறலுற்றுர்கள். எனவேதான், இந்த மஹான் முஹம்மத் (சல் அம்) இறுதி நபியென்று எல்லாராலும் ஏகோபித்துக் கூறப்பெறுகிருர்கள். ஆதலினுலேயே முஹம்மத் (சல்) ஒரு நூதன மதத்தினைப் போதிக்கவில்லையென்றும், ஆனல் அனைத்து மதங்களின் சாராம்சத்தையே போதிக்கலாயினர்களென்றும் கூறவேண்டுவதா யிருக்கிறது.

தெய்வ பக்தி யென்பது முஸ்லிமுக்கு என்ன தாத்பரியத்தைப் போதிக்கிறது?

இஸ்லாத்திலே, இறைவன் பக்தி யென்பது ஓர் உயிருள்ள தெய்வ பக்தியாகவேயிருந்து வருகிறது. இஸ்லாம் "ஏக தெய்வ மத"மென்று எல்லாராலும் ஏகோபித்து ஏற்கப்பட்டு வருகிறது; ஆனல், அவரவரும் தத்தம் திரிகாண சுத்தியுடனே அவ் ஏகவல்லவனை மட்டும் (வேறெத்தகை ஷிர்க்குமின்றி) வணங்குவது கிடையாது. முஸ்லிம் என்பவர் எவ்வித அச்சத்தாலோ, எத்தகை வசிகரத்தாலோ அல்லா(ஹ்) வையே யன்றி, வேறெந்த (செத்த, அல்லது உயிருள்ள) மனிதனையேனும், விக்கிரகத்தையேனும், வேறு பொன்னையேனும், பொருளையேனும், பெண்டையேனும், பிள்ளையையேனும், பட்டத்தையேனும், பதவியையேனும் அவ்விறைவனுக்கு இணையாக, அல்லது அவனைவிட மேலாக மதித்து நடப்பது தகாது. இக்கூறியவற்றை யெல்லாம் இறைவனென்று, அல்லது அவனைவிட மேம்பட்டன வென்று மதிப்பது மதியீனரின் மடமைச் செயலேயாம்; அறிவுள்ள முஸ்லிம்கள் தங்கள் ஏக இறைவனுக்கே யுரிய உயரிய திரிகாண சுத்தியுடன் கூடிய (இக்லாஸ்) எண்ணத்திலே எப்படிப்பட்ட இணைவைக்கும் ஷிர்க்குக்கும் இடங்கொடுக்கத் துணியார்கள். "சுயநயம்" என்பது கூட ஷிர்க் கென்றே சூபியாக்களால் சொல்லப்பெறுகிறது. கல் மண் கட்டை உலோக விக்ரகங்க ளெல்லாம் பழங்கால ஷிர்க்குக்களாகும்; ஆயின், அந்தப் பழங்கால ஷிர்க்குக்களனைத்தும் பகிரங்க "மோட்டா ஷிர்க்"காம்; இக்காலச் சுயநய மென்பதோ, நவீன நாகரிக நாஜூக்கான ஷிர்க்கா யிருக்கிறது; எவ்வாறெனின், சுயநயப் பேய் பிடித்தவன் தன் சுயகாரியத்தில் வெற்றி பெற அல்லா(ஹ்)வையும் அவனுடைய ஏவல் விலக்கல்களையு மெல்லாம் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடுகிறுன். சுய

நயப் பேராசை யென்பது மேலோங்கி விடுங்கால், அதனைத் தடுத்து நிறுத்தப் பீரங்கிகளாலும் இயல்வது முடியாது; என்னெனின், ஒரு நாட்டவரின் சுய நயம் உயர்ந் தோங்கி எழுவது காரணமாகத்தானே இப்பாருலகில் மகா யுத்தங்களெல்லாம் இது காலை மூளத்தெழுகின்றன? எனவே, இந்தச் சுயநய ஷைத்தான் சாமியை விட்டு, எல்லாரும் ஏக இறைவனையே "இக்லாஸு"டனே வணங்கத் துவங்கிவிட்டால், அஃது எத்துணைப் பெரிய நன்மைபயக்கக் கூடுமென்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்களே! ஆதலால், அச்சமோ, அபிலாஷையோ, அல்லது வசீகரமோ நம்மை நமது ஏக இறைவனுக்குரிய (இக்லாஸ்) திரிகரண சுத்தியு ன் கூடிய இணையற்ற வழிபாட்டிலே நிறுத்தி வைக்கத்தக்க முறையிலே, அடியுடன் இல்லாதொழியட்டும்.

"இக்லாஸு"டனே இறைவனை வணங்க வேண்டு மென்று இயம்புவதால், நாம் இகலோக வாழ்க்கையை உதாசினத்துடன் வெறுத் தொதுக்கவேண்டு மென்று கருத்துக் கொள்வது கூடாது. இஸ்லாம் என்பது ஒரு துறவறமார்க்க மன்று. இகலோக வாழ்க்கையை முஸ்லிம்கள் வெறுத் தொதுக்குவது தகாது; அவ்வாறு வெறுக்கத் துணிவது ஆண்டவனையே நிந்திப்பதா யிருக்கிறது. இகத்தையே கட்டிக் கொண்டழுவதும் இஸ்லா மன்று; இகத்தை வெறுத்துப் பரத்துக்கென்றே பாடுபடுவதும் இஸ்லா மன்று. இவ்விரண்டற்கும் நடுமையமாயுள்ள "சிராத்துல் முஸ்தகீ மில்" நடந்துவரும் மத்திய மார்க்கமாகவே இஸ்லாம் இருந்துவருகிறது. சிறிதும் புசியாது வீண்பட்டினி கிடப்பது எவ்வாறு இஸ்லாமாகிற தில்லையோ, அவ்வாறே "சாப்பாட்டு ராமன்" — பகாசுரன் வேலையும் இஸ்லாமாவது கிடையாது. அறியாமை யென்பது எத்துணைத் தீயதோ, அத்துணைத் தீயதே மௌட்டிய பாரமார்த்திக பக்தி என்னப்படுவதும். சுருக்கிச் சொல்லு மிடத்து, இஸ்லாம் எல்லா முஸ்லிம்களையும் உடல்வலியில் உரம் பெறுமாறும், உளத் தொழுக்கத்தில் உயர்வு பெறுமாறும், பாரமார்த்திகத்தில் பதம் பெறுமாறும் ஆய்விடுமாறும் ஆணையிட்டுள்ளது. இஸ்லாமிய சமுதாயத்தில் ஒரொரு மனிதனும் அலீ (றலி) அவர்களைப் போலவே யிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறார்; ஹஜ்ரத் அலீ (றலி) உடல் வலியில் ஒரு மகா தீரவீராகவும், ஆத்மிகத் துறையில் ஒரு மகா சூபியாகவும், ஒரு மாபெரும் தத்துவ ஞானியாகவும், ஒரு மகா மதியூகியாகவுமே விளங்கி வந்தார்கள்.

இஸ்லாத்தில் பகுத்தறிவின் எல்லை

முஸ்லிம்களின் உயிர் வாழ்க்கையில் மீக்கூறியாங்கு, இரு கடைக் கோடிகட்குஞ் சென்றுவிடாது, மத்திப மார்க்கத்திலே நடந்து செல்லவேண்டு மென்னும் உணர்வு உண்டாயிருப்பது இஸ்லாமிய வேதத்தினால் இவர்கள் சமுதாயத்துள் நுழைக்கப்பட்டுள்ள பகுத்தறிவின் பதமான வரையறையினாலேயாம். இத்தகையவரையறை இவர்களுடைய தனி மனிதரிடத்து மட்டுமேதான் தொழிலாற்றி வருகிறதென்றெண்ணிவிடாதீர்கள்; இம் முஸ்லிம்கள் இத் தரணி மாந்தருடன் ஒழுகிவரும் ஒழுக்கத்திலுங் கூட இப்படிப்பட்ட பகுத்தறிவுக்குரிய ஹத்துடனே தான் நடந்து வருகிறார்கள். செல்வத்தையும் செல்வாக்கையும் இவர்கள் சுயநய வேட்டைக்கும் சுகபோக சௌகரியங்களுக்குமே யுரிய சாதனங்களென எண்ணாது, இவ்வுலக மக்களுக்கு ஊழியம் புரியவே ஆண்டவனால் அளிக்கப்பட்டுள்ள சற்சாதனமென்றே கொண்டு நடந்து வருகிறார்கள். எம் முஸ்லிம்களின் இந்தப் பரநய நோக்கமே இச் சமுதாயத்தினரைச் சமதர்ம (Socialism) எல்லையின்பாலே கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. இஸ்லாத்தின் வாரிஸ் கிரமச் சட்டம், ஏழைகளைக் கைதூக்கிவிடப் பணக்காரரிடத்திருந்து வசூலிக்கப்படும் "ஏழை விகிதம்"— இது ஜகாத் தென்று அழைக்கப்படுகிறது— இஸ்லாத்தினால் பொதுப்படையாய்ப் பிரகடனப் படுத்தப்பட்டு வரும் ஜனநாயகத் தத்துவம், இஸ்லாத்தின் ஊழியம் அன்பு அனுதாபம்

(31-ஆம் பக்கத் தொடர்)

'பொய் சுல்தா'னை ஆக்கிவிடலாம். ஆனால், எல்லாம் வல்ல இறைவனின் சக்தி யொன்று எல்லாவற்றுக்கும் மேலாக நின்று சகல லோகங்களையும் ஆட்டிப் படைக்கிற தென்பதை அந்த ஷஜருத்துர் எப்படி மறுக்க இயலும்? லூயீயைத் தோற்கடிக்க உதவிபுரிந்த இறைவன், ஸாலிஹின் பிரேதத்தை மூடிவைக்கத் துணைபுரிந்த ஆண்டவன், காஹிராவைக் காப்பாற்றிய காருண்யன், அனைவரையும் ஆதரிக்கும் அருளாளன் இப்போது ஷஜருத்துர்ரைத் தண்டிக்க ஆரம்பித்துவிட்டால்? — இப்படி நினைத்துக்கொண்டே மாஜீ சுல்தானா மனமேங்கினார். மூச்செறிந்தார். (தொடரும்)

தர்ம சிந்தனை ஆதிய வெல்லாம் மக்கள்பால் சமூக அரசியல் பொருளாதார வேற்றுமை யொழிந்து சமரச சமதர்ம ஒற்றுமை ஏற்பட வழிகோலுவனவா யிருக்கின்றன. இஸ்லாம் எப்பொழுதுமே முதலாளித்துவத்தை அங்கீகரிப்பது கிடையாது; முதலாளித்துவப் பைசாசத்தால் விளையக்கூடிய தொல்லைகளையும் தொந்தரைகளையும் நீனுல் இஸ்லாம் என்றுமே ஏற்பது வழக்கமில்லை. எனினும், இஸ்லாம் கம்யூனிஸப் பொதுவுடமைக் கொள்கையினின்று வேறுபட்டே பிரிந்து நிற்கிறது; என்னெனின், இஸ்லாம் என்றுமே இவ்வுலக உயிர் வாழ்க்கையின் முக்கிய நோக்கம் அவசவரும் தத்தமக்குப் போதுமான பொருளை யீட்டுவதுதான் என்று இயம்புவது கிடையாது. எனவே, இம்மார்க்கம், ஏழைகளுக்குப் பணக்காரர் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொடுத்துவிட வேண்டுமென்று கூறுவது கிடையாது; இஸ்லாம், அவாவர் சொத்து அவாவருக்கே சொந்தமென்றும், அதனை இனியொருவர் அபகரிக்கக் கூடாதென்றும் கூறுகிறது. கம்யூனிஸம் கழறுவதே போல், இஸ்லாம் தனிமனித ரெல்லாம் அரசாங்கப் பொருள் வருவாய்க்கே யுழைக்கும் (மெஷீன்) எந்திரமென்று எண்ணுவது கிடையாது. இத்தாணிக்குரிய பவுதிக வாழ்கை+கு மேற்பட்ட பாரமார்த்திக வாழ்க்கை யொன்று இருக்கிறதென இஸ்லாம் இயம்பிக்கொண் டிருக்கிறது. என்னெனின், ஆண்டவ னொருவன் உண்டென்றும், அடியவனுக்கு ஆத்மா வொன்று இருக்கிறதென்றும் இம் மார்க்கம் வற்புறுத்தியுள்ளது. எனவே, மனிதனை மனிதன் சுரண்டவோ, பணக்காரன் ஏழையை அமுக்கி அடிமை கொள்ளவோ இஸ்லாத்தில் இடமில்லை; ஒரு சிலர் மட்டும் பணப்பொதிகளில் மல்லாந்து இறுமாந்து கிடக்கவும், மிகப்பலர் பட்டினியால் மடியவும் இஸ்லாம் அனுமதிப்பது கிடையாது; உழைத்துப் பாடுபட இம்மார்க்கம் எல்லார்க்கும் சரிசரியான சந்தர்ப்பத்தையே யளித்துக் கொண் டிருக்கிறது; ஆயின், அனைவரும் லக்ஷாதிபதிகளா யுயர்ந்துவிடப்போதிய செல்வம் இப்பூவுலகில் இல்லை யென்பதையும் இஸ்லாம் அறிந்தே யிருக்கிறது: எனினும் இவ்வுலக மக்களிடத்துக் காணப்படும் பசிப்பிணியையும் வறுமைக் கொடுமையையும் நீக்க இஸ்லாம் மிக மிகப் பாடுபட்டே வருகிறது. எற்கெனவே, எழுதியுள்ளாங்கு, இஸ்லாம் இன்ஸானின் வயிறென்றனையே பிரதானமாய்க் கருதாது, இவனுக்குரிய ஆத்ம முன்னேற்றத்தையும் அதிகம் கவனித்து வருகிறது. மானிட சுபிக்ஷ வாழ்க்கைக்குப் பொருளாதார சமத்துவத்துடனே, சமுதாய சமத்துவமும் அத்தியாவசியமென்றே இஸ்லாம் எடுத்தோதியுள்ளது. பொருளாதாரப் பிரச்சினை, உண்மையிலே, ஆன்மிக வாழ்க்கைக்குரிய அடிப்படையாயே யிருந்துவருகிறது.

(தொடரும்)

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும், ஹிப்னாட்டிஸ மெஸ்மெரிஸ வித்தைகளைப் பயில்வதற்கும், வியாதிகள் வராமல் தடுத்துக் கொள்வதற்கும், வந்துவிட்ட வியாதிகளை மெஸ்மெரிஸ முறைப்படி போக்கிக் கொள்வதற்கும் சுலபமான இலேசான, செயல் முறைகளைக் கற்றுக்கொடுக்கும் ஒரே அபூர்வ அதிசய நூல். ஒவ்வொரு மனிதனும் தவறுமல் வாங்கிப் படித்து நற்பய னடைவதற்கு இந்நூல் இன்றியமையாதது. அறிஞர் அற்புதானந்த யோகி வரைந்தது. இந்நூலின் மூன்றும் பதிப்பு இன்னம் சில பிரதிகளே எஞ்சியுள்ளன. சீக்கிரம் முந்துங்கள். விலை ரூ. 4-8-0

தபால் செலவு 0 10 0

—::—

குத்பா பிரசங்கம்

(ஜுமுஆவில் ஓதக்கூடியது)

(இரண்டாம் பதிப்பு)

வெள்ளிக் கிழமை தோறும் நம் பள்ளி வாயில்களில் ஓதப்படும் குத்பாவில் எங்கெங் கெல்லாம் அரபு மேற்கோள் இருக்க வேண்டுமோ அங்கங்கெல்லாம் அரபு மேற்கோள் சேர்க்கப்பட்டும், வேலூர், (மத்ரஸா) பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் ஸத்ர் முதர்ரிஸ் மௌலானா, மௌலவீ அப்துல் ஜப்பார் (மர்ஹூம்) அவர்களின் "பத்வா" சேர்க்கப்பட்டும், அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் அவர்களால் செந்தமிழில் தயாரிக்கப்பட்டும் இருக்கிறது. இதில் 57 குத்பாக்கள் அடங்கியிருக்கின்றன. இறுதியில், நபிகள் நாயகம் (சல் அம்) ஆதியில் குபாயில் புரிந்த குத்பா பிரசங்க மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, நல்ல அழகிய பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. இருவர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. கண்ணைப் பறிக்கும் வனப்பு மிக்கது.

விலை ரூ. 2—12—0 வி. பி. பி. வேறு.

கொழும்பில் ஓரியண்டல் நியூஸ்மார்ட்டிலும் பர்மாவில் சவுத் இந்தியா புக் டெப்போ, இரெங்கூனிலும் கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

எமது இலங்கைச் சுற்றுப் பிரயாணம்

சென்ற மீலாதெஷரீப் வாரங்களில் "தாருல் இஸ்லாம்" பத்திரிகாசிரியர்களான நாங்க ளிருவரும் இலங்கைத் தீவின் பல பாகங்களையும் சுற்றிவிட்டு, ஆண்டவனருளால் மீண்டும் சுகமே சென்னை வந்து சேர்ந்தோம். ஆனால், நாம் சென்று வந்த வைபவம் சில ருசிமிக்க சம்பவங்கள் நிறைந்திருக்கின்றமையால், சற்று அவற்றின் விவரத்தைத் தெரிவிக்க ஆசை கொள்கிறோம்.

இலங்கையின் தலைநகராகிய கொழும்பிலே மீலாத் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று திட்டமிட்ட வாலிப முஸ்லிம் சங்கத்தார் (Y. M. M. A.) நவம்பர் மாதம் பிறப்பதற்கு முன்பே எங்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். முன்போல் நினைத்த சமயத்தில் இந்திய னொருவன் இலங்கைத் தீவுக்குச் செல்வதென்பது முடியாதாகையால், முதன் முதலில் பொலீஸ் கமிஷனரிடம் இலங்கை செல்வதற்காகப் பாஸ் போர்ட்டுக்கு விண்ணப்பித்துக் கொண்டோம். நவம்பர் எட்டாந் தேதி எங்களுக்குப் பாஸ்போர்ட் கிடைத்துவிட்டது. ஆனால், வெறும் பாஸ்போர்ட்டை மட்டும் வைத்துக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டுவிட முடியாது. அதற்காகச் சென்னை அரசாங்க 'ஹோம் டிபார்ட்மெண்'டில் அனுமதி (Visa) பெறவேண்டும். அந்த அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொண்டோம். 30–ஆம் தேதி கொழும்பில் நடக்கும் மீலாத் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக 29–ஆம் தேதி விமான மூலம் நாங்கள் புறப்படுகிறோமென்றும், இலங்கையில் தங்கியிருக்க 15 நாள் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் விண்ணப்பித்தோம். கொழும்பு முஸ்லிம் சங்கத்தார் எங்களுக் கனுப்பிய அழைப்புக் கடிதத்தையும் வைத்தனுப்போட்டோம். இது 12-11-52–இல் நடந்தது. ஆனால் 22உ வரை எங்களுக்கு அந்த அனுமதி கிடைக்கவில்லை. காரணம் என்னவென்று பலமுறையும் நாங்கள் கோட்டை ஸெகரெடேரியட் காரியாலயத்துக்குச் சென்று வினவியபோது, பத்திராதிபர்களும், மதபிரசாரகர்களும், அரசியல் வாதிகளும் இலங்கைக்குள் எளிதில் அனுமதிக்கப்படுவதில்லையென்று தெரியவந்தது. நாங்கள் செல்வது நபிகள் நாயகத்தின் பிறந்ததின விழாவை யொட்டியேதானென்றும், இலங்கை அரசியலைப் பற்றியோ இந்திய அரசியலைப் பற்றியோ ஏதும் பிரசாரமோ துஷ்பிரசாரமோ செய்வதன்று எமது நோக்கமென்றும் எவ்வளவோ எடுத்துக் கூறியும், காருண்ய மிக்க சென்னை அரசாங்கம் அனுமதி யளிக்கச் சற்றும் இசையவில்லை. இறுதியாக, வேறு வழியின்றி, கொழும்பு நண்பர்களுக்கு இதை விளக்கி எழுதி, அங்குள்ள அரசாங்கத்தை அவர்கள் நெருங்கி ஏதும் நடவடிக்கை யெடுத்தாலன்றி எங்களால் புறப்பட இயலாதென்று தெரிவித்துவிட்டோம். அவர்கள் உடனே கொழும்பிலுள்ள அதிகாரிகளிடம் எங்களுடைய வரவின் நோக்கம் இன்னதென்பதை எடுத்துச் சொல்லி, சென்னை அரசாங்கம் எங்களை அனுப்ப மறுப்பது தவறென்றும் விளக்கினார்கள். அதன் மீது கொழும்பு அரசாங்கம் சென்னை அரசாங்கத்துக்குக் கடித மெழுதி, எங்களிருவரையும் தடையின்றி அனுப்பி வைக்கலாமென்று கேட்டுக் கொண்டது. அதற்கப்பாலே தான் சென்னை ஹோம் டிபார்ட் மெண்டுக்கு எங்கள்மீது கருணை பிறந்தது. இறுதியாக, 22–11–52 சனியன்று பகல் 1 மணிக்கு இலங்கையில் 7 நாள் தங்க எங்களுக்கு அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது!

பொறுப்புமிக்க பத்திராதிபர்கள் முஹம்மத் நபி (சல்) பிறந்ததின விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கொள்ளும் கோரிக்கையே சென்னை உள்நாட்டு இலாகாவால் (அதுவும் திரு ராஜாஜியின் கண்காணிப்பில் உள்ள இலாகாவால்) இப்படி அவதூறும் இழிவும் கேவலமும் படுத்தப்பட்டதென்றால், உலக விவகாரம் தெரியாத, சட்ட நுணுக்கம் அறியாத சாதாரணப் பாமர மக்கள் அந்த இலாகாவுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் விண்ணப்பங்கள் என்ன கதிக்கும் என்ன காலதாமதத்துக்கும் இலக்காகுமென்று நினைக்கிறீர்கள். அப்ஸோஸ்!......கேட்கப்போனால், எல்லாம் இலங்கை அரசாங்கம் செய்கிற சூழ்ச்சி என்று சொல்வார்கள். ஆனால், இலங்கை அரசாங்கமே கூட வரவேற்கத் தயாரா யிருக்கும் நபர்களை நம்முடைய காருண்ய மிக்க ஹோம் டிபார்ட் மெண்ட் அனுப்பிவைக்க இசைய மாட்டாது! இதற்கொரு விமோசனம் எப்போது பிறக்குமோ, தெரியவில்லை.

இவ்வளவு இடுக்கணோடே அனுமதி பெற்ற நாங்கள் 29–11 52 சனியன்று காலை விமான நிலயம் சென்றோம். வங்காளக் குடாக் கடலில் கடுமையான புயல் சூல்கொண்டிருக்கிறதென்றும், எந்த நேரத்திலும் அந்தச் சூறாவளி கரையை வந்து பலமாக மோதிவிடக் கூடுமென்றும் கேள்விப்பட்டோம். நாங்கள் ஏறிச் செல்லும் விமானம் கொழும்புபோய் சேர்கிற வரையிலாவது அந்தப் புயல் கரையை எட்டாமலிருக்க வேண்டுமே என்னுங் கவலையுடன் விமான மேறினோம். ஆண்டவனுதவியால் எவ்வித இடையூறு மில்லாமல் மாலை 3 மணிக்கெல்லாம் கொழும்பு விமான நிலயம் சென்று சேர்ந்தோம். நாங்கள் பயந்தது சரியாயிற்று. ஏனென்றால், நாங்கள் ஏறிச் சென்ற விமானந்தான் இந்தியாவிலிருந்து இலங்கை சென்ற இறுதி விமானமாகும். அதை யடுத்து, தமிழுலகம் கண்டிராத அவ்வளவு பெரிய கொடிய சூறாவளி மிகக் கடுமையாய் வீசி யாழ்ப்பாண தீபகற்பம், திருச்சி

தஞ்சை ஜில்லாக்கள் முதலிய வட்டாரத்தைப் படுநாசம் செய்துவிட்டது. இந்தக் கொடிய காற்றில் எங்கள் விமானம் சிக்கி யிருந்தால்? நினைக்கவே பயமா யிருக்கிறது!...நாங்களும் கொழும்பு சென்று சேர்ந்தோம்; காற்றும் சுழன்று வீசிற்று; இலங்கைத் தீவு இந்தியாவி லிருந்து துண்டிக்கப்பட்டு விட்டது. அடுத்த 5 தினங்கள் வரை இந்தியாவுடன் கடித மூலமோ, தந்தி மூலமோ, டெலிபோன் மூலமோ யாதொருவிதத் தொடர்பையும் வைத்துக் கொள்ள இயலவில்லை.

நவம்பர் 30௳ மாலை 4–30 மணிக்குக் கொழும்புக் கடற்கரையான "கால் பேஸ்" (Galle Face) மைதான வெளியில் பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. வடக்கே வெகு தூரத்தில் அந்நேரத்தில் கடுமையான புயற்காற்றுச் சுழன்று வீசிச் சீறிக்கொண் டிருந்த தென்றாலும், அதன் வேகம் கொழும்புக் கடற்கரையையும் பாதிக்காமற் போகவில்லை. பயங்கரமான அலையோசையும், சீறும் காற்றும் கொஞ்சமும் அமைதியைத் தரவில்லை யென்றாலும், அங்குக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கொஞ்சமும் அசையாமல் ஒலிபெருக்கி வழியே வெளிப்படும் ஒவ்வொரு சொல்லையும் ஆடாமல் அசையாம லிருந்து கேட்டு ரசித்தார்கள்.

அந்தப் பிரம்மாண்டமான கூட்டத்துக்கு ஆலீ ஜனாப் அல்ஹாஜ் பலீல் அப்துல் கபூர் அவர்கள் தலைமை வகித்தார்கள். நாங்கள் அந்தத் தயாளுவின் இல்லத்திலேதான் விருந்தினர்களாகத் தங்கி யிருந்தோம். ஏழைப் பங்காளரும், பெருத்த தனிகரும், அன்பே உருவானவரும், மஹரகம என்னுமிடத்திலுள்ள முஸ்லிம் மத்ரஸா வொன்றை நிரம்பச் செலவு செய்து நடத்தி வருபவரும், நவரத்ன வர்த்தகத் திலகமுமாகிய அந்தப் பெரியார் சுருக்கமாக ஆங்கிலத்தில் தமது தலைமைப் பிரசங்கத்தை முடித்துக் கொண்டதை யடுத்து, எங்களுள் இளையவராகிய அப்துல் ஜப்பார் (பொறுப்பாசிரியர்) பிரசங்கம் புரிந்தார். ரசூலுல்லாவின் வெற்றி இதற்கு முன் அவனியில் தோன்றிய சகல நபிமார்களுள்ளும் தலைசிறந்த வெற்றியாக எப்படித் திகழ்ந்து வருகிற தென்பதை அவர் தற்கால உதாரணங்கள் பூர்வமாக இனிது விளக்கி வைத்தார்.

அவர்களுடைய பிரசங்கம் முடிக்கிற தறுவாயில் மக்ரிபுக்காக பாங்கு கூப்பிடப்பட்டு விட்டது. பிறகு அங்குக் குழுமி நின்ற அத்தனை ஆயிரம் முஸ்லிம் நபர்களும் இஸ்லாத்தின் இனிய சகோதரத்துவத்தை நன்கெடுத்துக் காட்டு முறையிலே, ஒருவருடனொருவர் தோளுறழச் சேர்ந்து நின்று மக்ரிப் தொழுகையைத் தொழுது முடித்தார்கள்.

தொழுகைக்குப் பின் நிர்வாக ஆசிரியரான அல்ஹாஜ் பா. தா. தமது அழகிய சொற்பொழிவை வெகு உன்னதமாகப் புரிந்தார். அவர் காதியானியா என்று சோதிக்க வந்தார்கள், அவர் மதத்தைப் புரட்டுபவர் என்று கயிறு திரிப்பவர்கள், அவர் இன்னம் ஏதேதோ தவறான கொள்கைகளை உடையவர் என்றெல்லாம் தப்பபிப்பிராயங் கொண்டவர்கள் உள்ளிட்ட சகல மக்களும் பிளந்த வாயில் ஈ நுழைவது தெரியாமல், ஓரிரண்டு மழைத் தூற்றல் தலையில் விழுவதையும் கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் அப்படியே அமர்ந்திருந்து, அவர்கள் இதுவரை இஸ்லாத்தின் பெருமையைப் பற்றியும் ரசூலுல்லாவின் வாழ்க்கை லக்ஷியத்தைப் பற்றியும் என்றுமே எங்குமே கேட்டிராத உன்னதச் சொற்பொழிவைக் கேட்டு மெய்விதிர்த்து விட்டார்கள். இரவு ஏழரை மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. எல்லாரும் எழுந்து நின்று "யா நபீ"யும் ஸலவாத்தும் ஓதியதுடன் கூட்டம் கலைந்தது.

ஒருவித இடைஞ்சலுமில்லாமல் அக் கூட்டம் இனிது நடந்தேறி முடிந்ததற்காக இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துவதுடன், அல்லும்பகல் அரும்பாடுபட்டு இதைக் கூட்டுவிப்பதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட வாலிப முஸ்லிம் சங்கக் காரியதரிசி ஜனாப் லாபிர் காஸிம் அவர்களுக்கும், ஜனாப் எம். கே. எம். அபூபக்கரவர்கட்கும், ஏனைச் சகோதரர்களுக்கும் எம் வந்தனத்தைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

மறுநாள் (1–12–52) திங்கட்கிழமை காலையில் கண்டி வாலிப முஸ்லிம் சங்கத்தின் (Y. M. M. A.) காரியதரிசி ஜனாப் ஐ. எம். யூசுப் அவர்கள் ஒரு மோட்டார் காரைக் கொண்டு வந்து, எங்களிருவரையும் கண்டிக்கு அழைத்துச் சென்றார்கள். இந்தக் காரியதரிசி நம்மீது எவ்வளவு அன்பும் நேசமும் அபிமானமும் மிக்கவ ரென்றால், நாம் எழுதி வெளியிட்டுள்ள அத்தனை நூல்களும் அவரிடம் மிகப் பத்திரமாக இருக்கின்றன. அவற்றைப் படித்தே தாம் பிழையறத் தமிழ் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டதாகவும் பெருமையுடன் கூறினார். 78 மைல் பிரயாணம் செய்வது கொஞ்சமும் சலிப்போ அல்லது அலுப்போ, ஊட்டாத முறையில் அவர் எங்களிடம் இனிமையாக்ச் சம்பாஷித்துக் கொண்டே வந்தார்.

கண்டியில் அன்று மாலை 3–30 மணிக்கு மீலாத் கூட்டம் அவ்வூர்ப் பிரமுகரும், பெரிய வர்த்தகருமாகிய ஜனாப் இஸ்மாயீல் அவர்களின் மருகர் தலைமையில் கூடியது. அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்தும், கண்டி சுற்றுப் பிரதேசத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடினர். ரசூலுல்லா (ஸல்) வின் இணையற்ற பெருமை குறித்தும், இஸ்லாத்தின் மகத்துவங் குறித்தும் அழகிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. மக்ரிபுடன் கூட்டம் இனிது முடிந்தது.

அன்றிரவு கண்டியில் நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு, மறுநாள் மாலை கார் மார்க்கமாகவே இலங்கைத்தீவின் கிழக்குக் கடற்கரை யோரத்திலுள்ள கல்முனை என்னும் ஊருக்குப் புறப்பட்டோம். கல்முனையை அடுத்த சம்மாந்துறை என்னும் ஊரில் 3௳ மாலை மீலாதெ ஷரீப் கூட்டம் நடத்தப்பட வேண்டி யிருந்தமையால், அவ்வூர்ப் பிரமுக வாலிபராகிய ஜனாப் அப்துல் மஜீத் என்பவர் எங்களைக் கண்டியிலிருந்து அழைத்துச் செல்வதற்

காக ஓர் உயர் ரகமான மோட்டார் காரையும், சிறந்த டிரைவரையும் கொண்டுவந்திருந்தார். அந்தக் காரிலே நாங்கள் ஏறிக் கொண்டு, 194 மைல் தூரத்தைச் சுமார் 8 மணி நேரத்துக்குள் கடந்து கல்முனை ஒய்வு விடுதியை எட்டினோம். அன்று நள்ளிரவுக்குப் பின் அங்குச் சென்று சேர்ந்த நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் 3–ஆம் தேதி மாலை 5–மணிக்குக் கல்முனையிலிருந்து சுமார் 5 மைல் தூரமுள்ள சம்மாந்துறை என்னும் ஊரில் பிரபல எஞ்சினீயராக விளங்கிவரும், ஜனாப் எம். எம். இஸ்மாயீல் அவர்களின் தலைமையில் மீலாதெ ஷரீப் கூட்டம் கூட்டப்பட்டது. தலைவரின் சொற்பொழிவை யடுத்து, அவ்வூர் முஸ்லிம் பள்ளிக்கூடத் தலைமையாசிரியரான ஜனாப் ஜே. எம். எம். அப்துல் காதரும், அப்பால் நாங்களிருவரும் சொற்பொழிவு நிகழ்த்தினோம். இலங்கைக் கிழக்குக் கரைப் பிரதேசம் எப்போதும் கண்டிராத அவ்வளவு நேர்த்தியுடனே அவ்விழா இரவு 10–மணியளவில் இனிது நடந்து முடிந்தது.

பிறகு மறுநாள் வியாழனன்று முற்பகலில் சம்மாந்துறைக்குச் சமீபமாயுள்ள அட்டாளைச்சேனை என்னும் ஊரிலுள்ள முஸ்லிம் ஆசிரியர்ப் பயிற்சிப் பள்ளியின் தலைமை யாசிரியர் எங்களை அப்பள்ளியை வந்து பார்வையிடும்படி மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். அதன்மீது நாங்கள் அவ்வூருக்குச் சென்றோம்.

மிக அழகான தோற்றத்துடன் காணப்படும் அச் சிறந்த பயிற்சிப் பள்ளி விசாலமான ஒரு ஸ்தலத்தில் நிருமிக்கப்பட் டிருக்கிறது. பள்ளியை அடுத்து மாணவர்கள் தங்கி வசிக்க ஹாஸ்டல் வசதிகளும் அமைந்துள்ளன. இலங்கைத் தீவிலேயே முஸ்லிம் ஆசிரியர்களுக்காகப் பயிற்சி யளிக்கும் பள்ளிக்கூடங்கள் இரண்டே யுள்ளன. அவற்றுள் இது வொன்றாகும். எங்களை அப்பள்ளியின் உதவி பிரின்ஸிபால் ஜனாப் ஷாஹுல் ஹமீத் என்பவர் கல்முனையிலிருந்து அழைத்துச் சென்றார். அங்குச் சென்றதும் பிரின்ஸிபால் ஜனாப் மஸூர் எங்களை நல்வரவேற்று, எல்லா உபாத்தியாயர்களுக்கும் எங்களை அறிமுகப்படுத்தினார். எதிர்கால ஆசிரியர்களாக உயரப் போகும் 37 மாணவர்களும் அங்கு வந்து குழுமினார்கள். நாங்கள் அவர்களுக்குச் சற்று உபதேசப் பிரசங்கம் புரிந்தோம். பிரசங்கங்களை அவர்கள் உருக்கமாய்ச் செவி யேற்றனர்.

பின்பு நாங்கள் பள்ளிக் கூடத்தையும் ஹாஸ்டலையும் நன்கு சுற்றிப் பார்த்துவிட்டு, பிரின்ஸிபாலின் விருந்துணவையும் களிப்புடன் அருந்திவிட்டுக் கல் முனைக்குத் திரும்பிவிட்டோம். அன்றுமாலை சம்மாந்துறை யன்பர்கள் எங்களை மட்டக்களப்பு ரயிலடிக்குக் கார்மூலம் கொண்டு சென்று, நல்ல விதமாக உபசரித்துக் கொழும்புக்குச் செல்ல ரயிலேற்றிவிட்டார்கள். சம்மாந்துறை மீலாதெ ஷரீப் கமிட்டியின் காரியதரிசியாகிய ஜனாப் அஹ்மத் என்பவர் உருவத்தில் சிற்றுருவைப் பெற்றிருப்பினும், அவர் மிகத் திறம்படச் சாதித்து முடித்த அரும்பெருந் தொண்டுகளை எம்மால் மறக்க முடியாது.

நாங்கள் இலங்கைக்குள் நுழைந்து ஆறு நாட்களுக்குப் பின் அன்றுதான் முதன் முதலாக ரயிலேறினோம். இலங்கை யரசாங்கம் ஓட்டுகிற ரயில் வண்டிகளின் தரமே ஒரு விசித்திரம் மிக்கது. அதில் ஏறிப் பார்த்தவர்களுக்கு மட்டுமே அதன் தன்மை தெரியும். நின்ற விடத்தை விட்டு அது சீக்கிரம் புறபபடாது. அப்படியே புறப்பட்டாலும் தவளை கரையிலிருந்து தண்ணீருக்குள் தாவிப் பாய்கிற மாதிரியிலும் வேகத்திலும் திடீரென்று துள்ளிக் குதித்துப் பாயும். ரயில் எஞ்சின் மட்டும் பாய்வதுடன் நில்லாமல், அதனுடன் தொடுக்கப்பட்டுள்ள எல்லா வண்டிகளுமே பெருங் குலுக்குக் குலுக்கித் துள்ளிப் பாய ஆரம்பிக்கும். அரைகுறை நித்திரையுடன் படுத்துக் கிடப்பவரும், உட்கார்ந்தபடியே சிற்றுறக்கங் கொண்டவர்களும் ரயில் வண்டிக்குள் குப்புற்று வீழ்ந்து குட்டிக்கரணம் போடுவதைப் பலர் இன்றும் காணலாம். எனவே, ரயில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றுவிட்டுப் புறப்படுகிற தென்றால், வீற்றிருக்கும் பிரயாணிகளும் படுத்திருக்கும் பிரயாணிகளும் ஒன்று கீழே வீழ்ந்து எழவேண்டும்; அல்லது தலையுடன் தலை மோதி அதிர்ச்சியடைய வேண்டும். நாங்கள் அன்றிரவு ஏறிப் படுத்த முதல் வகுப்பு வண்டியின் சொகுசான மெத்தையும் மென்மையான தலையணைகளும் இதமாக இருந்தன வென்றாலும், கொழும்பு சென்று சேர்கிற வரையில் அந்த வண்டியில் பெற்றுக்கொண்ட .அடியும் அதிர்ச்சியும் குலுக்குதலும் எங்கள் உடலை நெளித்து விட்டன. நம் இந்திய நாட்டிலே இந்த மாதிரியாகத் தவளைப் பாய்த்து நிகழ்த்தும் ரயிலை எங்குமே காணமுடியாது.

துள்ளிப் பாய்கிற ரயில் வண்டிக்குள் வீழ்ந்து எங்கள் தலைகளை உடைத்துக் கொள்ளாமல் ஆண்டவனுதவியால் பத்திரமாக 5உ வெள்ளியன்று காலை கொழும்பு வந்து சேர்ந்தோம். உடனே காரில் ஏறி, புத்தளம் ஜில்லாவைச் சேர்ந்த கல்பிட்டி என்னும் ஊரை நோக்கிப் புறப்பட்டோம். கொழும்பிலிருந்து 104 மைல் தூரத்திலுள்ள அவ்வூர் நோக்கிச் சென்ற நாங்கள் வழியில் மாதம்பை என்னுமூரில் இறங்கி ஜும்ஆத் தொழுகையை முடித்துக் கொண்டு, மாலை 4 மணிக்குக் கல்பிட்டி போய்ச் சேர்ந்தோம்.

இலங்கைப் பிரமுகரும், ஏழைகளுக் கன்பரும், பரோபகார சீலரும், நல்ல ஞானியுமாகிய ஜனாப் அலீ ஹுஸைன் ("அன்பர் பூபதிதாஸர்" என்று அவரை மக்கள் அன்புடன், அழைக்கின்றனர்) எங்களை உபசரித்த பெருமையை வருணித்து முடியாது. இவரேதாம் அந்தக் கல்பிட்டி மீலாத் மகாநாட்டை நடத்துவதற்குத் தூண்டுகோலாய்த் திகழ்ந்தவர். இவரே மகா நாட்டுக்கும் தலைமை தாங்கினார். மாலை 5–15 மணிக்குக் கூட்டம் ஆரம்பித்த போது நல்ல மழை தூறிக்கொண் டிருந்த தென்றாலும், கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுள் ஒருவர்கூட அப்பாலிப்பால் அசையவில்லை. காக்கை கூட்டத்

தில் கல்லெறிந்தவுடன் ஏற்படும் காட்சியையே மழைத் தூற்றல் ஏற்படும் எந்தக் கூட்டத்திலும் நாம் கண்டிருக்கிறோமன்றி, இந்தக் கல்பிட்டிக்காரர்கள் அசையாமற் கல்லாய்ச் சமைந்திருந்தது போன்ற காட்சியை நாம் வேறெங்குமே இதற்கு முன் கண்டதில்லை.

தலைவரவர்கள் பேசி முடித்ததும் எங்களுள் இளையவரான அப்துல் ஜப்பார் மக்ரிப் வேளைவரை சுருக்கமாக இஸ்லாத்தின் கோட்பாடுகளைப் பற்றியும், ரசூலுல்லாவின் வெற்றிகளைப் பற்றியும் பேசினார். மக்ரிபுக்குப் பின் கொழும்பு "சுதந்தரன்" ஆசிரியர் வெகு ருசிகரமாகத் தற்கால இலங்கை அரசாங்க அங்கத்தினர்கள் நடந்து கொள்ளும் பொறுப்பற்ற தனங்களை எடுத்து ஒப்பிட்டுக் காட்டி, அந்தக் காலத்தில் நபிகள் திலகம் (சல்) அவர்கள் எப்படித் தந்நலங்கருதாது மக்கட்காக உழைத்துப் பெருங் கீர்த்தியை நிலைநாட்டினார்களென்பதை விளக்கினார். அப்பால் பா. தா. அவர்கள் சுமார் 2½ மணி நேரம் இஸ்லாத்தின் பரந்த கொள்கைகளைப்பற்றிய சகல நுட்பங்களையும் வெகு விளக்கமாக எடுத்துக்கூறி, இஸ்லாம் பிற மதங்களைத் தூஷிக்கவில்லையென்பதையும், முஸ்லிமல்லாதாரை நேசிக்கும்படியே இறைவனின் தூதரும் (சல்) குலபாயெ ராஷிதீன்களும் உபதேசித்தும் நடத்தியும் காட்டிச் சென்றிருக்கிறார்களென்பதையும் இனிதெடுத்துக் காண்பித்தார்கள். அப்பால் கிறிஸ்தவத் தோழரொருவர் பேசினார். எல்லாவற்றுக்கும் இறுதியாக 'ஸக்கிடுதார்' என்னும் பட்டப் பெயருள்ள உள்ளூர்ப் பிரமுகரொருவர் கல்பிட்டி முஸ்லிம்கள் ஒற்றுமையாய் வாழ வேண்டுமென்றும், அவர்கள் வேற்றுமையைத் தங்களிடையே வளர்த்துக்கொண்டமையாலேயே மிகவும் சீரழிந்து விட்டார்களென்றும் காரசாரமான சொற்களால் சுடச்சுட எடுத்துச் சொல்லி, முஸ்லிம்களின் ஏக சகோதரத்துவத்தை நடைமுறையில் நன்கு செய்து காட்டவேண்டுமென்று கோரிக்கொண்டார்.

இரவு பத்து மணியுடன் கூட்டம் கலைந்தது. கல்பிட்டி சின்ன குடியிருப்புப் பகுதியின் மரைக்காய பிரமுகர்கள் எங்களை உபசரித்த நல்லுபசாரங்களின் கீர்த்தியை எழுதிக்காட்ட முடியாது. அவ்வளவு அபரிமிதமாகவும் உள்ளன்புடனும் பிரியத்துடனும் நேசத்துடனுமே அவர்கள் எங்களை அளவுமீறி உபசரித்தார்கள். பொதுவாகவே, நம் நாட்டில் வாழும் மக்களைவிட இலங்கைத் தீவில் வாழும் மக்கள் பிரசங்கிகள்மீது எல்லையற்ற வாஞ்சையுடனே தான் ஒழுகிக்கொள்கிறார்கள். அன்றிரவின் மீதிப் பொழுதை ஜனாப் ஸாலிஹ் மரைக்காயரவர்களின் இல்லத்தில் கழித்துவிட்டு, மறுநாட் காலையில் அங்கிருந்து கொழும்புக்குத் திரும்பினோம்.

மாலை 4 மணிக்குக் கொழும்பு வந்து சேர்ந்தோம். 7 மணிக்கெல்லாம் எங்கள் அடுத்த பயணம் ஆரம்பித்துவிட்டது. திரிகோணமலையில் மறுநாள் 7ஆ நடக்கும் மீலதெ ஷரீபில் கலந்து கொள்வதற்காக உடனே ரயிலேறிவிட்டோம். முன்பு மட்டக்களப்பிலிருந்து வந்த ரயில் எங்களைத் தூக்கியெறிந்ததைப் போலவே இப்போது திரிகோணமலைக்குச் செல்லும் ரயிலும் எங்களுக்கு இடஞ்சலைத் தந்தது.

ஞாயிறன்று காலை நாங்கள் திரிகோணமலை சென்று சேர்ந்தோம். அங்கே டவுனுக்கு வெளியிலே ஓரிடத்தில் இயற்கை வெந்நீரூற்றுக் கிணறுகள் இருக்கின்றன. ஆண்டவன் அமைத்துள்ள உலக அதிசயத்துள் இப்படிப்பட்ட வெந்நீரூற்றுக் கிணறுகளும் ஓர் அதிசயமாகும். அடுத்தடுத்து வெந்நீரும் தண்ணீரும் ஊறுகிற கிணறுகள் அமைந்திருக்கும் அதிசயம் தென் அமெரிக்க மெக்ஸிகோ நகரில் இருப்பதாகக் கேள்விப் படுகிறோம். ஆனால், திரிகோண மலையருகே அதே போன்ற இயற்கையைக் காண்கிறோம். அவ் வெந்நீரூற்றுக் கிணறுகளிலே குளித்துவிட்டுச் சற்று ஓய்வெடுத்துவிட்டு, ஊரையும் சுற்றிப் பார்த்தோம்.

மாலையில் மீலாத் கூட்டம் அவ்வூர் மைதானத்தில் கூட்டப்பட விருந்தது. ஆனால், எதிர்பாராமல் பலத்த மழை 3-மணிக்கே பிடித்துக் கொண்டபடியால், கூட்டத்தை அவ்வூர் ராம கிருஷ்ண பள்ளிக்கூடத்தில் நடத்தினார்கள். திரிகோணமலை பிரதான வர்த்தகப் பிரமுகரான ஜனாப் V. P. முஹம்மத் அலீ சாஹிபும், (Y. M. M. A.) காரியதரிசி ஜனாப் "ஹாஜியார்" ஜமாலுத்தீன் அவர்களுமே இந்த மீலாத் விழாவை நடத்த முன்னின்ற பிரமுகர்களாவர். உள்ளூர் ஹிந்துப் பெரியார்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்பதற்காக வரவழைக்கப்பட்டனர். மாலை 5 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

இதுவரை திரிகோண மலைவாசிகள் கேட்டிராத மாதிரியிலே ரசூலுல்லாவின் (சல்) வாழ்க்கை சம்பந்தமாகவும், இஸ்லாத்தின் மஹோன்னத நிலைமை சம்பந்தமாகவும் எங்கள் சொற்பொழிவு காணப்பட்டதென்று அங்குள்ள மக்கள் இறுதியிலே மெச்சிப் பாராட்டினர். நாங்கள் உடனே கொழும்புக்குச் செல்லவேண்டியிருந்தபடியால், இரவு 7-30 மணிக்குக் கூட்டத்தை இனிது முடித்துக் கொண்டு உடனே ரயிலுக்கு வந்து சேர்ந்தோம். திரிகோணமலைப் பிரமுகர்கள் எங்களை வழியனுப்பி வைக்க ரயிலடிக்கு வந்திருந்தனர். வழமைபோலே அவர்கள் எங்கள்மீது மட்டற்ற பாசத்துடனும், எல்லையற்ற பேரன்புடனுமே எங்களை நடத்தினார்கள். குறிப்பாக, ஜனாப் தாவூத் என்னும் அவ்வூர்ப் பிரபல வர்த்தகரும், முற்குறிப்பிட்ட ஜனாப் முஹம்மதலீ சாஹிபும் எங்களை மிகவும் அன்புடனும் ஆதரவுடனும், உபசரித்து வழியனுப்பினார்கள்.

மீண்டும் ரயிலேறி, மறுநாள் 8ஆ திங்களன்று காலை கொழும்பு வந்து சேர்ந்தோம். அன்று மாலை ஜாஹிராக் கல்லூரியில் மாணவர்களுக்கு நாங்கள் உபதேசம் புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கல்லூரி அரபி போதகர் ஆலீ ஜனாப் அபுல் ஹஸன் தலைமை வகித்தார். எதிர்காலத்தில் பிரமுகர்களாக உயரப்போகும் மாணவர்கள் இப்போது பள்ளியில் எவ்வெப்படி ஒழுகிக்கொள்ளல் வேண்டும் என்று நாங்கள் பிரசங்கம் புரிந்தோம்.

(43-ஆம் பக்கம் பார்க்க)

குர்ஆன் மஜீதை நான் மொழி பெயர்த்த முழு விருத்தாந்தம்

[By B. D. Shah]

நீக்கூறிய குறளுக்கிணங்க அம் மூன்று "ஆலிம்சா"க்களும் சிங்கையிலிருந்த இழிசன முஸ்லிம்களை யெல்லாம் தூண்டி விட்டு, இவ் வடியேன்மீது மிக மிகக் கேவலமான அருவருப் புள்ள வசை மொழி நோட்டீஸ்களையும், "குபுர்பத்வா"க்களையுமெல்லாம் ஒரொரு நாளும் அச்சிட்டுப் பரத்துமாறு தூண்டி விட்டுக் கொண்டே திரிந்தார்கள்; அவற்றினை யெல்லாம் நாங்கள் ஒரு சிறிதும் பொருட்படுத்தினோ மில்லை. எனினும், இறுதியிலே ஒரு கொழுத்த குட்டி வந்து அவர்கள் பொறியிலே சிக்கிற்று. அக்கணமே ஒரு நோட்டீஸ் — மிகவும் இழிய மகா ஆபாச மொழிகளைக் கொண்டு தமிழெழுத்திலே — அவர்களது அடுப்பங்கரை பாஷையிலே எங்களைக் காபிராக்கி அச்சிட்டு வெளியாக்கிற்று அக்கொழுத்தகுட்டி. அவ்வளவுதான்! என் நண்பர்களும் அன்பர்களும் அக்குட்டியை இறுகப் பற்றிக் கொண்டு விட்டார்கள். ஆகவே, அக்குட்டிக்குத் தப்பி யோட வழியில்லாது போய்விட்டது. அந்த ஆபாச அபவாத நோட்டீஸைத் தன் திருப்பெயரால் (ஜே. முஹம்மத் இஸ்மாயீல் மரைக்கான், வில்கீ ரோட்) வெளியிடச்சொல்லி, 20 டாலர் பணமும் செலவுக்குக் கொடுத் துதவினான்; அஃது, 20—5—1926 அன்று வெளியாயிற்று. அது மகா நீசத்தனமான நடையிலே முழு மோசமாய் வரையப்பட் டிருந்த வசைப் புராணமா யிருந்து வந்தமையான், என்னை ஆதரித்து நின்ற அன்பர்களெல்லாம் அந்த ஜே. மு. இஸ்மாயில் மரிக்கான்மீது அவதூற்றுக் குற்றத்துக்காக மான நஷ்ட தாவா நடத்தத் துணிந்தெழுந்தார்கள். ஆகலால் அவ்வாபாச நோட்டீஸை என்னா லியன்றவரை பிரயாசை யெடுத்து, ஆங்கிலத்திலே ஒரு மொழிபெயர்ப்புச் செய்து கொடுத்தேன்; இதனை எதிரி ஏற்க மறுத்துவிட்டான்; அவன் செய்து கொணர்ந்த ஆங்கில மொழிபெயர்ப்பை எங்கள் கக்ஷியினர் ஏற்க மறுத்துவிட்டனர். இரு கக்ஷிக்கும் பொதுவாக அந்த வசைப் புராண நோட்டீஸ் சென்னை ஹைகோர்ட்டுக்கு அனுப்பப்பட்டு, அஃது இவ்வூரிலே ஓர் எம். ஏ. படித்த ஐயரால் மொழிபெயர்க்க இயலாதுபோய், அவர் என்பால் ஓடி வந்து எனது உதவியைக் கோரினார். ஆகவே, அவரும் நானும் எங்கள் மண்டையை யுடைத்துக் கொண்டு, அரைப் பகல் செலவு செய்து, அவ் வாபாச "ஆலிம்சாபாஷை"யை ஒருவாறு ஆங்கிலத்திலே எழுதி முடித்தோம்.* சென்னை ஹைகோர்ட்டில் செய்யப்பட்ட அந்தத் தர்ஜுமாவே சிங்கப்பூர் ஸுப்ரீம் கோர்ட்டால் அங்கீகரிக்கப்பட்டு, இரு கக்ஷியினராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. கண்ணால் எவராலும் கண்டு சகிக்க வியலாத ஆபாசம்! காதால் எவராலும் கேட்டுச்சகிக்க வியலாத அசப்பியம்! ஆதலால், என் அபிமானிகள் சிங்கை ஸுப்ரீம் கோர்ட்டில் தாவா தொடுத்தார்கள். அதில் ஆலீ ஜனாப்களான மூ. காதர் சுல்தான், லெ. முஹம்மத் கௌஸ்

* அவ் வாபாச அசப்பிய (தமிழெழுத்தால் அச்சாகியிருந்த) நோட்டீஸ் இதுபொழுது என் கைவயத்தி லில்லை. 1926-இல் "தாருல் இஸ்லாம்" மாசிகையில் அத் தமிழ் நோட்டீஸை அப்படியே வெளியிட்டுள்ளேன்.

மரைக்காயர், மீருன்லெப்பை, மூஅல்லிம் முதலியோர் முக்கியஸ்தர்களாய் விளங்கி வந்தார்கள். இரு கக்ஷியினரும் இரு பெரும் இங்கிலீஷ் பாரிஸ்டர்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். விசாரணை வெகு மும்முரமாய் நடைபெறலாயிற்று. வாதிகளின் வக்கீல் ஒரு பெரிய ஆங்கில பாரிஸ்டர் ஜான் ஜீ. கேம்பர் துரையாவார்; பிரதிவாதியின் வக்கீலும் ஒரு பெரிய ஆங்கில பாரிஸ்டர் ஹெச். டீ. மண்டெல் துரைமகனுவார்.

அந்த மானநஷ்ட தாவா, 26—1—'26 முதல் 19—3—'26 வரை 12 "ஈரங்கி"யில் முடிவுற்றது; 12 சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள். கேஸின் சாராம்சம் என்னவென்ருல், தாவூத்ஷாவும், இவனைச் சார்ந்தவர்களும் "காதியானி"கள்; எனவே, இவர்களெல்லாரும் "காபிர்"களே என்று பிரதிவாதி கூறினன்; ஆயின், "நாங்கள் காதியானிகளும் இல்லை; காபிர்களும் இல்லை," என்பதே வாதிகளின் தாவாவாயிருந்தது. எனவே, இவர்கள் மான நஷ்ட தாவா தொடுத்தார்கள். எதிரியோ, தாவூத்ஷாவும், இவனைச் சார்ந்தவர்களும் காதியானிகளேயென்றும், ஆகலால் காபிர்களேயென்றும் மெய்ப்பிக்க முயன்ருன்; முயன்ருன்; முக்காலும் முயன்ருன். அவ்வெதிரியைத் தூண்டிச் சந்தியிலே இழுத்துவிட்ட (இல்லை, மூலையிலிருந்தானை முற்றத்தே ஈர்த்துவிட்ட) மூன்று மூல்லாக்களும் இந்தியா திரும்பி, இங்கிருந்து "பத்வாக்"களும், ஆலிம்களின் ஆதார நோட்டீஸ்களும் அவ் இஸ்மாயீல்மரைக்கானுக்கு அடிக்கடி அனுப்பிக்கொண்டிருந்தார்கள் என்று யான் கேள்வியுற்றேன். யானும் என்னுலான உதவிகளனைத்தையும் என் கக்ஷிக்காரருக்கு இச் சென்னையிலிருந்து செய்து வந்தேன். சென்னை ஹைகோர்ட் தீர்ப்பொன்று இருக்கிறது; அஃது, இது பொழுது பாக்கிஸ்தான் அயல்நாட்டு மந்திரியாய் உலகப் புகழ் பெற்று விளங்கும் சௌதரீ ஜபருல்லாகான் அவர்களால் பேசி வெல்லப்பட்டது. அத்தீர்ப்பிலே "அசல்காதியானி" கூட — மிர்ஜாயீயும் — "காபிர்" என்று கூறப்படுவது கூடாதெனச் சொல்லப்பட்டுள்ளது.*

யான் அனுப்பிய இந்தச் சென்னை ஹைக்கோர்ட் தீர்ப்பையும், வேறுபல தீர்ப்புக்களையும் அனுசரித்தே சிங்கை ஸுப்ரீம்கோர்ட் தனது முடிவான தீர்ப்பைக்கூறிவிட்டது. வாதிகள் மூவரையும், மற்றும் ஒன்பது சாக்ஷிகளையும் எதிரியே தன் சாக்ஷிகளாய்க் கூண்டிலேற்றி விசாரித்தான்; அவனுடைய லாயர் வெகு வெகு சாமர்த்தியத்துடனேயே தம் கேஸை நடத்தினர்; வெகு வெகு சாதுரியமாகவே டிபென்ஸ் ஆர்கியுமெண்ட்டை ஜோடித்துப் பேசினர். கேஸ், 26-1-1926 முதல் 19-3-26 வரை மூன்று மாத காலம் நடைபெற்று முடிவுற்றது. இறுதியிலே, 19-3-26 வெள்ளிக் கிழமை யன்று அந்த ஸுப்ரீம் கோர்ட் நீதிபதி—ஜஸ்டிஸ், ஜீ. லீடன்— ஒரு நீண்ட ஜட்ஜ்மெண்ட் (தீர்ப்பு) கூறியுள்ளார்.¶ அந்த நீதிபதி தாவூத்ஷாவும் அவரைச் சார்ந்தவர்களும் "காதியா"னிகளே யல்லரென்றும், ஆதலால் "காபிர்"களல்லரென்றும் தீர்மானித்து, எனினும் எதிர்க்கு ஒரு தருணம் தருவான் வேண்டி, ஏன் அந்த இஸ்மாயீல் மரைக்கான் அவ்வாறு அந்த அவதூறு நோட்டீஸைக் காசு கொடுத்து அச்சிட்டுப் பரத்தினன்? என்று வினவினர். ஒருகால் அந்த எதிரி தன்னை மூன்று இந்திய மூல்லாக்கள் ஒன்றுசேர்ந்து ஏமாற்றிவிட்டதால் தான் அவ்வாறு அந் நோட்டீஸை அறியாத் தனத்தால் அச்சிட்டுப் பரத்திவிட்டதாகவும், அதற்காகத் தான் வருந்தி வருத்தந் தெரிவிப்பதாகவும் கூறக்கூடுமென்று ஜஸ்டிஸ் லீடன் எதிர்பார்த்தார்; ஆனல், அவ்வெதிரி அவ்வாறு செய்யாது, "ஒட்டக் கூத்தன் கவிக்கு இரட்

---

* அந்தக் கேஸ், Narantakatt Avalla V. Purakkal Mammu, Indian Law Reports, Madras Series (1922), Vol. XLV, page 986-இல் பொறிக்கப்பட்டுள்ளது.

¶ Trial of MUSLIM LIBEL CASE என்னும் அச்சுப் புத்தகத்தில் 20 பக்கங்களில் சிறு எழுத்தால் பொறிக்கப்பட்டுள்ளது, அந் நெடிய தீர்ப்பு.

டைத் தாழ்ப்பாள்'' என்றபடி, தான் அந்நோட்டீஸை முழுதும் அங்கீகரித்து ஆதரிப்பதாகவும், அதனை அச்சிடத் தான் 20 டாலர் கொடுத் துதவியதோடு தன் பெயரையும் அதில் அச்சிட முழு அனுமதியும் அளித்ததாகவும் இறுமாப் புடனே ஏக்கழுத்தம் செய்து கூறினன். அதுகேட்டு, அந்த நீதிபதி, இந்த எதிரி இஸ்மாயீல் மரைக்கான் வேண்டு மென்றே தெரிந்துதான் தாலூத்ஷாவை யும் அவரை ஆதரித்தவர்களையும் "காதி யானிகள்'' என்றும், ஆகலால் "காபிர் கள்'' என்றும் திட்டியுள்ளா னென்று கொண்டு 5000 (ஐயாயிரம்) டாலர் அப ராதமும் விதித்து, வாதிகளுக்கு உயர்தர (முதல் வகுப்பு)ச் செலவுத் தொகை கொடுக்க வேண்டு மென்றும் தீர்ப்புச் செய்துவிட்டார். இத் தொகை உத் தேசம் 25 ஆயிரம் டாலராம். எனவே, இனம் இரண்டுக்கு, இஸ்மாயீல் மரைக் கான் 30 ஆயிரம் டாலர் வரை வாதிக ளுக்குக் கட்டிக் கொடுத்துளான். இம் மனிதன் தன் கக்ஷிக்காகவும் சுமார் 30 ஆயிரம் டாலர் வரை செலவு செய்து விட்டான் என்று கேள்வியுற்றேன்.

இவ்வளவோடு இவ்வெதிரி நில்லாது, சிங்கை ஸுப்ரீம் கோர்ட் "புல் பெஞ்ச்'' சுக்கு அப்பீல் செய்து பார்த்தான், ஜஸ்டிஸ் டீன் துரையின் தீர்ப்பை எதிர்த்து. அஃது — அந்த அப்பீல்— கோர்ட் உயர்தர நீதிபதிகள் மூவராலும் ஏக மனதாய் 15—6—1926 இலே தள் ளுபடி செய்யப்பட்டுப் போய்விட்டது. இதற்காகவும் அவ்வெதிரி வாதிகளுக்கு உயர்தரச் செலவுத் தொகையே கட்டிக் கொடுக்க வேண்டியவ னயினன். இவ் வாறாக வெல்லாம் அந்த இஸ்மாயீல் மரைக்கான் அம் முல்லாக்களின் முழுக் கட்டணத்தை யுணரச் சக்தியற்றுப் போய், 20 டாலர் கொடுத்து, ஓர் அவ தூற்று நோட்டீஸைத் தன் பெயரால் வெளியிட்ட முட்டாட்டனத்தால் அறு பது, எழுபதாயிரம் டாலர் செலவு செய்து நஷ்டமடைந்து, வியாபாரத்தி லும் முறிந்து போய்விட்டான்; இம் முட்டாள், சென்ற மகா யுத்தத்தின் பொழுது ஜப்பானியர் வெடிகுண்டுக்கு இலக்காகி மடிந்தும் போய்விட்டான். அவனைத் தூண்டிவிட்ட தென்காசி முல் லாவும், ஏனங்குடி முல்லாவும் எமலோ கம் ஏகிவிட்டார்கள், அவ் விஸ்மாயீல் மரைக்கானுக்கு ஆங்குப் பக்கபலமா யிருக்கும் பொருட்டு. வாதிகளும் வீர சுவர்க்கம் புக்கு மறைந்து விட்டார்கள். ஆனால், சிங்கை ஸுப்ரீம் கோர்ட் ஸூட் நெ. 513—1925 மட்டும், தாலூத்ஷாவும் அவரைச் சார்ந்தவர்களும் காதியானி களுமல்லர், காபிர்களுமல்லர் என்று கூறிக்கொண்டு இன்றும், இனி என்றும் உயிருடனே இருந்துகொண் டிருக்கிறது. மலாய் நாட்டிலே இந்தக் கேஸ் ஒரு மா பெரும் பரபரப்பை யுண்டுபண்ணி விட் டமையால், இதனை ஒரு புத்தகமாக (210 பக்கங்களில்) வெளியிட் டுள்ளார்கள் வாதிதரப்பார்; பொதுமக்களின் நன் மைக்கென இந்நூல் வெளிவந் துள்ளது; கண்ணுடையோர் கண்டு தெளிக. உறங் குகிறவனை எழுப்பிவிட முடியும்; ஆனால், தூங்குவதேபோல் பாசாங்கு செய்கிற வனை எவராலும் தட்டி யெழுப்பிவிடல் இயலாது. எனினும், கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடராவ தேனோ? அன் ருகட்டும், அல்லது இன்ருகட்டும், என்று மே யாஞெரு காதியானியா — மிர்ஜாயீ யா — யிருந்தது கிடையாது.

"வட்டுருக்கமாய்ச்'' சுருக்கிச் சொல்ல வேண்டுமாயின், எனது மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தால் "ஜவாஹிருல் புர்க்கான்'' வேலை மேற்கொண்டு நடத்த வோ, அல்லது அதற்காக ஓர் அச்சகம் திறக்கவோ பயன்பட இயலாது போய் விட்டது. இவ்வளவுதான் யான் திரை கடலோடியுந் திரவியந் தேடிய புதுமை.

யான் 16-6-'25-இல் செவ்வாய்க் காலை யிலே இச் சென்னை வந்து சேர்ந்தேன்; எனக்கு முன்னே அப்பொழுதைக் கப்பொழுது எனக்கு விரோதமாய் அச் சடிக்கப்பட்டுள்ள எல்லா நோட்டீஸ் களும் இந் நகருக்குக் கட்டுக் கட்டாய் வந்து சேர்ந்து, அவற்றிற்கான சகல விதக் கைங்கரியங்களையும் இங்கிருந்த ஸை. இ. ஆசிரியர் காலஞ் சென்ற அஹ் மத் ஸயீத் ஆலிம் சாஹிப் செவ்வனம் செய்து முடித்தார்: பள்ளி வாசல்களில்

ஒட்டியும், பொது மக்களிடம் பரத்தியும், தம் பத்திரிகையில் பிரசுரித்தும் ஒழுங்கான சு. ஜ. ஊழியமே புரிந்திருந்தார்! எனவே, யான் அங்கப்ப நாய்க்கன் தெருவிலுள்ள நவாப்பள்ளிக்கு ஜமுஆத் தொழுகைக்குச் செல்லுந் தோறும் செல்லுந் தொறும் ஆங்குள்ள அனைத்து சு. ஜ. முஸ்லிம்களும் இம் மிஸ்கீனை இருபதாவது நூற்றாண்டின் 'தஜ்ஜால்' என்றே ஏற இறங்கப் பார்ப்பார்கள். பற்பல முஸ்லிம்கள் திண்ணைகளிலும், சாளரங்களிலும் ஏறி நின்று எட்டி யெட்டிப் பார்ப்பார்கள்; என்னைச் சுட்டிக் காட்டி, சுட்டிக் காட்டி எல்லாரும் ஏதேதோ இரகசியமாயும் ஏளனமாயும் பேசிக்கொள்வார்கள். "காபிரெனச் சிங்கையில் தீர்மானிக்கப்பட்டவன் இன்னம் தற்கொலை புரிந்து கொள்ளாது உயிருடனே யிருக்கிறானே!" என்று அதிசயித்து நோக்கினார்கள். ஆயின், பாவம்! 19-3-1926 வெள்ளியன்று சிங்கை ஸுப்ரீம் கோர்ட் ஜஸ்டிஸ் டீன் என்ன தீர்ப்புக் கூறப்போகிறா ரென்பது அம்முஸ்லிம்களுக்கு எவ்வாறு முன்னறிவிப்பாய்த் தெரிந்திருத்தல் கூடும்? கடைசியில் சிங்கைக் கேஸின் முடிவு இச் சென்னைக்கு எட்டியவுடன் ஸை. இ. ஆசிரியர் தமது சு. ஜ. தீர்ப்பைக் கூறி விட்டார், "இஸ்லாத்தின் விஷயத்தில் தீர்ப்புக்கூற எம்முஸ்லிம் மவுலவீகளுக்கே யுரிமையுண்டு; கிறிஸ்தவ வெள்ளையன் அப்படித்தான் தாறுமாறாய்க் கூறுவான்; அவன் செய்த தீர்ப்பு நம் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்த மாட்டாது," என்று. (தொடரும்)

(39-ஆம் பக்கத் தொடர்)

இவ்வளவுடன் எங்கள் பிரசங்க நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அடுத்துச் சில தினங்கள் நாங்கள் மீண்டும் முற்சொன்ன பலீல் கபூர் ஹாஜியார் சாஹிபவர்களின் இல்லத்திலே தங்கி யிருந்துவிட்டு, 12உ மாலை கொழும்பிலிருந்து ரயில் மார்க்கமாகப் புறப்பட்டு விட்டோம். அந் நகரில் தங்கியிருந்த போது ஜனாப்களான ஏ. ஈ. எம். யூசுப், ஓரியண்டல் நியூஸ்மார்ட் கே. மதார் சாஹிப், புறக்கோட்டையிலுள்ள (ஜகவீரமங்கலம்) மே. பீர் சாஹிபு அவர்களும் எங்களை நன்கு உபசரித்தார்கள். ரயிலடிக்கு அநேக பிரமுகர்கள் எங்களை வழியனுப்ப வந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் மட்டற்ற மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் பிரிய மனமில்லாதவர்க ளாகவும் எங்களை நல்ல நேசத்துடன் வழியனுப்பி வைத்தார்கள்.

எங்கள் திரும்பும் பயணத்தில் ஒரு பேரதிசயத்தைக் கண்டோம். அதுதான் தலைமன்னார்க் கடற்கரையிலுள்ள இலங்கை யரசாங்க சுங்க அதிகாரிகள் விளைக்கும் லஞ்சப் பரிதான ஊழல். அவர்கள் இந்தியா செல்லும் பிரயாணிகளை எவ்வெப்படியெல்லாம் இம்சைக்கு ஆளாக்கி, கறக்க முடிந்த அளவுக்கு லஞ்சம் பறிக்கிறார்க ளென்றால், தன்னுடன் ஒரு கள்ளச் சாமானையும் கொண்டு வராத பரம யோக்கியனான பிரயாணியுங்கூட வீணே தொந்தரைகளுக்கு உட்படுத்தப்படுகிறான். கப்பலைப் பிடிக்க வேண்டுமே என்னும் கவலையாலும், தன் சாமான்கள் கீழே கவிழ்க்கப்பட்டுப் படுநாசப்படுத்தப்படாம லிருக்க வேண்டுமே என்னும் சஞ்சலத்தாலும் அவரவரும் ரூ. 10, 15 என்று "வாய்க்கரிசி" எடுத்து வீசி யெறிந்துவிட்டு, தலைதப்பியது தம்பிரான் புண்ணிய மென்று கப்பலில் வந்து ஏறுகிறார்கள். இந்திய பிரஜைகளுக்கு இலங்கை யரசாங்கம் வேறெந்தச் சலிகையைக் காட்டா விட்டாலும், அவர்களிடம் தலை மன்னாரிலுள்ள சுங்க அதிகாரிகள் நடந்து கொள்ளும் பரம நீசத்தனமான லஞ்ச ஊழலை ஒழிக்கவாவது அந்த அரசாங்கம் முற்பட வேண்டு மென்று மிகவும் கேட்டுக் கொள்கிறோம். கொழும்பிலுள்ள நம் இந்திய ஹைக் கமிஷனர் ஏதாவதொரு நாள் அந்தத் தலைமன்னார்க் கடற்கரை சென்று இந்தக் கண்ணராவிக் காட்சிகளைக் காணவேண்டும். அப்போதுதான் வழிபிறக்கும்.

இவ்விதமாக வெல்லாம் நாங்கள் இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு தனுஷ்கோடிக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தோம். எமது அபிமானியும், நேயருமாகிய ஆலீஜனாப் நாகூர் மீரா அவர்களின் குமாரர் ஜனாப் பதுருத்தீன் எங்களை அங்கேயே நல்வரவேற்று, இனிய உணவுகளால் அதிகமும் உபசரித்து, இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸில் ஏற்றி வழியனுப்பி வைத்தார்.

நாங்களும் ஒருவிதமாக 14உ ஞாயிறன்று காலை சென்னை வந்து சேர்ந்தோம். அல்லா (ஹ்) வுக்கே எல்லாப் புகழும்! எங்களை இலங்கைக்குள் ஒரு வாரத்துக்குமேல் தங்கி யிருக்கக்கூடாது என்று சென்னை யரசாங்க ஹோம் டிபார்ட்மெண்ட் கண்டிப்பாய் அனுமதி தந்திருந்தும், ஜனாப் பலீல் கபூர் அவர்களின் சொந்த முயற்சியாலும், ஜனாப் எம். கே. எம். அபூபக்கர் அவர்களின் ஓயாத அலைச்சலாலும் கொழும்பு 'எமிக்ரேஷன் கண்ட்ரோ'லரிடம் மேற்கொண்டும் ஒருவாரகால நெடுவுக்கு விஸா அனுமதி பெற்றுக் கொண்டோம்.

நாங்கள் கொழும்பில் சில தினங்கள் தங்கியிருந்த போது "வீரகேசரி" ஆசிரியர் K. P. ஹரன் என்பவரிடம் அளவளாவிப் பேசிக்கொண் டிருந்தோம். இவர் முன்னொரு காலத்தில் (1938-39-இல்) நம் தா. இ. வாரமிருமுறைப் பத்திரிகைக்குக் கூட்டாசிரியராயிருந்தவர். இவர் 12உ "வீரகேசரி"ப் பத்திரிகையில் எங்களைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தெழுதி, எங்களை இலங்கை வாசிகளுக் கெல்லாம் நன்கு அறிமுகப்படுத்தி விட்டார்.

(3-ஆம் பக்கத் தொடர்)

வினவினர்கள்; அதற்கு நாங்கள் ஆமென்று விடையளித்தோம். அப்பாலவர்கள், "இந்த நாள் எந்த நாள்?" என்று அத்திருநபி வினவலுற்றார்கள். அதற்கு நாங்கள், "அல்லா(ஹ்)வும் அவனுடைய தூதருமே செவ்வனம் அறிவார்கள்," என்று விடையிறுத்தோம். அதற்குரிய பெயரையன்றி வேறொரு பெயரை அப்பெருமான் சீக்கிரம் சொல்லப் போகிறார்களென்று நாங்கள் நினைத்த வரையில் மௌனமாயிருந்தார்கள். இது குர்பானீக் குரிய (புனித) நாளல்லவா?" என்று வினவினர்கள்; அதற்கு நாங்கள் ஆமென்று விடையிறுத்தோம். அப்பாலவர்கள் செப்பினர்கள்: "நிச்சயமாக, உங்களுயிர்களும், உங்கள் பொருள்களும், உங்கள் கண்ணியங்களும் உங்களுடைய இந்த நகரத்திலே, உங்களுடைய இந்த மாதத்திலே, உங்களுடைய இந்த நாளின் புனிதத்தைப் போலே உங்களுக்குப் புனிதமாயிருக்கின்றன. நீங்கள் சீக்கிரத்திலே நுங்கள் ரக்ஷகனைச் சந்திப்பீர்கள்; அதுகாலை அவன் உங்கள் செயல்களைக் குறித்து உங்களிடத்து வினவுவான். எனவே, கவனியுங்கள்! எனக்குப் பின்னே, உங்களுள்ளே ஒரு சிலர் மற்றுஞ் சிலரின் கழுத்தை வெட்டிக் கொண்டு, தவறிய வழிக்குத் திரும்பி விடாதீர்கள். இன்னம், கவனியுங்கள்! என்பால் ஒப்படைக்கப்பட்ட (இறையின்) தூதை யான் (உங்கள் பால்) ஒப்படைத்து விட்டேனே?" என்று வினவினர்கள்; இதற்கு அவர்களனைவரும் ஆமென(த் தங்கள் ஆமோதிப்பை)க் கூறினர்கள். அதுகாலை, அப்பெருமானர் (சல்) இவ்வாறு அறைந்தார்கள்: "வ அல்லா (ஹ்)! (இதற்கு) நீயே சாக்ஷி. இங்கு ஹாஜிராயிருப்பவர்கள் ஹாஜிரில்லாதவர்கட்கு இதனைக் கொண்டு செல்லக் கடவர். எவர்கட்கு ஒரு செய்தி சுமந்து செல்லப்படுகிறதோ, அவர்களும் எத்தனையோ பேர்கள் (நேரிலே) கேட்பவர்களைவிட அதி ஜாக்கிரதையாயிருக்கிறார்கள்."—முஸ்லிம், புகாரீ.

அனுதாபம்

எமது அன்பரும் அபிமானியுமாகிய கொழும்பு வ. மீ. ஷம்சுத்தீன் அவர்களின் இரண்டாவது புத்திரியும், ஜனப் N. M. கவுஸ் அவர்களின் பாரியையுமாகிய திருமதி நபீஸா பீபி தமது 25-ஆவது வயதில் பிரசவத்துக்குப் பின் திடீரென்று காலமான செய்தி கேட்டுத் துயருறுகிறோம். இறைவன் அந்த ஆவிக்குச் சாந்தி நல்கியருள்வானாக. ப—ர்.

(8-ஆம் பக்கத் தொடர்)

சாற்றி வந்தார். ஆனல், திரு- ஈ. வே. ராவும் அவருடைய சீடரும் சென்னை மாகாணத்தைத்திராவிட நாடாகப் பிய்த்து எடுத்துக் கொள்வதற்குள்ளே நம் ராஜ்யத்தின் வடபகுதியாகிய தெலுங்கு பிரதேசம் பிட்டுக்கொண்டு போய்விட்டது. மீதி இருக்கிற பாதியில் மலேயாள தேசத்தினரும் கன்னட தேசத்தினரும் தங்கள் தங்கள் பாஷாவாரி மாகாணங்களுக்காக அடுத்த யுத்தத்தை நிகழ்த்த ஆரம்பிக்கலாம். இந்தக் கூத்தில் அந்தத் "திராவிடநாடு" என்னும் கானல் நீர் என்ன கதி ஆகும்? நாய்க்கரும் அண்ணாத்துரையும் சென்னை மாகாணத்தைச் சுயேச்சையான திராவிட நாடாகச் சிருஷ்டி செய்வதற்குள் பொட்டி ஸ்ரீராமுலு தம் உயிரையே மாய்த்துக்கொண்டு ஆந்திர மாகாணத்தை அமைக்கும்படி செய்துவிட்டார். ஆந்திர ஜில்லாக்கள் நீங்கித் தனியே போய்விட்ட பின்பு "திராவிட நாடு" என்னும் பொய் வேஷம் இன்னம் எத்தனை நாட்களுக்குப் பலிக்கும்?

முன்னமே நாம் பல முறையும் சொல்லியிருக்கிறோம்: திராவிட நாட்டுக்காகப் பாடுபடுகிறவர்கள் ஆந்திர ஜில்லாக்களிலோ எவரையும் காணோமே என்று. அதற்குத் திராவிடக் கட்சி "புலிகள்" சொன்னர்கள்: "ஜின்னா பாக்கிஸ்தான் கேட்டு 1940-இல் தீர்மானம் நிறைவேற்றியபோது எல்லாரும் அப்படித்தான் பழித்தார்கள். ஆனல், அவர் வெற்றி பெற்றுவிட்டார். இப்போது எங்களைப் பார்த்து நீங்கள் பரிகசிக்கிறீர்கள். நாங்களும் வெற்றிபெற்றபின்னர் நீங்கள் வெட்கமடைவீர்கள்!" என்று.

முடிவு என்னவென்றால், "செம்பும் கெட்டதே கோவிந்தா!" என்ற பழமொழிப்படி திராவிட நாடு இருக்கிற இடம் தெரியாததுடன், ஒரு துண்டாயிருந்த திராவிட எல்லை அடுத்த சில மாதங்களில் இரு துண்டாகிவிடப் போகிறது.

சிகரெட் கொளுத்தும் நவீனமிஷின் ரூ. 2/8/-

நிக்கல் கேசுடன் கூடிய தண்ணீர் உள்ளே புகமுடியாத சிறந்த டிசைன். தீப்பெட்டி தேவையில்லை. ரூ. 2/8/-; ரூ. 3/-. மிகச் சிறந்தது ரூ. 3/8/- ஸ்பெஷல் ரூ. 4. 1 டஜன் கல் ரூ. 1. தபால் செலவு 15 அணு. U. S. A. பௌண்டன் பேனு பல கலர்களிலும் சிறந்த டிஸைன்களிலும் ரோல்டு கோல்டு நிப், கிளிப்களுடன் கூடியது ரூ. 2/-. சிறந்தது ரூ. 2/8/-. ராஜா பேனு ரூ. 3/-. சிறந்தது ரூ. 3/8/- பார்க்கர் 51 மாடல் ரூ. 6/-, சிறந்தது ரூ. 7/- தபால் செலவு 15 அணு. ஏககாலத்தில் ஏதாவது மூன்று வாங்கினல் தபால் செலவு இனம். ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்து.

MODERN WATCH CO. (D.M.)

Post Box No. 12220. CALCUTTA 5.

199008

"நபிகள் நாயக மான்மியம்"

(முதற் பாகம்)

29 அதிகாரங்கள்: ஹி. ஆருவதாண்டு, அஹ்ஜாப் யுத்தம் முடிய

இலக்கிய உலகில் தனிப் பெரும் புரட்சி!

பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் அள்ளிச் சொரியப்பட்டு, அழகினும் அழகிதாய் வனப்பினும் வனப்பதாய், பல மூவர்ணக் கலர்ப் படங்களுடன் தையாரிக்கப் பட்டுள்ளது. ஈராண்டுகளாக ஏராளமாக விற்கப்படுகிறது. இந்த "தாருல் இஸ்லாம்" பத்திரிகை எந்த ஸைஸில் இருக்கிறதோ அதே ஸைஸ் 600 பக்கங்களுடன், தையாரிக்கப் பட்டுள்ளது. சர்வமும் பஞ்சமாயுள்ள இக்காலத்தில் அபூர்வமான அழகிய நேர்த்தியான, வழுவழுப்புள்ள, மிகச்சிறந்த தூய காகிதத்தில் இந் நூல் அச்சிடப் பட்டிருக்கிறது. மிகப் பிரமாதமான பைண்டு செய்யப்பட்டது. 3-வர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. பார்ப்போர் கண்ணைப் பறிக்கத்தக்கது!

இப் பாருலகின் கீர்த்தி மிக்க ஜயதிலகமாய் விளங்கும் எம்பிரான் முஹம்மது நபி (சல் அம் அவர்களின் மெய்யான, ஆதார பூர்வமான அபூர்வ சரித்திரம். நாம் முன்னம் வெளியிட்ட முதல் பதிப்பைவிட, இதில் 9 அதிகாரங்கள் கூடுதலாகச் சேர்க்கப் பட்டுள்ளன. அறுசுவையுடன் கூடிய இனிய விருந்தில் வயிறு நிரம்ப உண்டு விட்டு மெய்ம்மறந்து திரியும் மனிதனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியைவிட, இலக்கிய உலகில் இந்நூல் அளிக்கும் இணையற்ற இன்பத்தை வாயால் வருணிக்க இயலுமோ, இயலுமோ?

இவ்வபூர்வ இலக்கிய சரித்திர ஆராய்ச்சி நூல் ஒவ்வொரு நூல் நிலையத்திலும், மத்ரஸாவிலும், கல்லூரியிலும், வாசக சாலைகளிலும் பொது மக்கள் நற்பயனடைவதற்காக அத்தியாவசியமாய் இருக்கவேண்டிய அரும் பெரும் பொக்கிஷமாகும்.

விலை ரூ. 12. தபாற் செலவு 1-6-0 தனி.

இ ஸ் லா ம்

(பல படங்களுடன்: பத்தாம் பதிப்பு)

ஹனபீ, ஷாபீ இரு திறத்தாருக்கும் அவசியமானது

கால நூற்றாண்டாகத் தமிழ்நாட்டு முஸ்லிம்களின் தனிப்பெரும் பாக்கியமுள்ள முக்கிய நூலான "இஸ்லாம்" என்னும் அழகிய புஸ்தகத்தின் புத்தப் புதிய பத்தாம் பதிப்பு **இப்போது வெளிவந்து விட்டது!** இதில் இஸ்லாத்தின் ஐந்து பர்ல்களும் (கடமைகளும்) மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் புத்திக்கும் யுக்திக்கும் மிக மிகப் பொருத்தமாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கடமையின் சார்பாய தத்துவமெல்லாம் (மஸ்அலாக்களுடன்) விஸ்தரிக்கப்பட் டிருப்பதுடன், அனுஷ்டானத்துக்கு வேண்டிய விவரங்களனைத்தும் சாங்கோபாங்கமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. சென்ற ஒன்பதாம் பதிப்பைவிட அதிகமான ஆர்ட் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. குர்ஆனிலுள்ள துஆக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கண்ணைக் கவரும் மூவர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. இஸ்லாத்தின் ஐந்து பர்லான கடமைகளையும் இனிது போதிக்கும் தமிழ் நூல் இதைவிட வேறெதுவுமில்லை யென்பது தமிழ் நாடறிந்த உண்மையாகும். நவ் முஸ்லிம்களுக்கும் தொழுகையைக் கற்க விரும்பும் பால்யர்களுக்கும் மிகப் பேருதவியா யிருக்கக் கூடிய நூல் இஃதொன்றேயாகும். முன் பதிப்புக்கள் எல்லாவற்றையும் விடப் பலவிதங்களில் சிறந்து காணப்படும் இந்நூல் ரூ. 3—0—0-க்கே கிடைக்கும். தபாற்செலவு 10 அணா. கண்ணையும் கருத்தையும் ஒருங்கே பறிக்கிற இவ்வனுஷ்டான நூலின் தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, திருவல்லிக்கேணி ஹைரோட் :: சென்னை-5.

என்ன நேர்த்தி பாருங்கள்



கிளை :—84, கீழ வெளி வீதி, மதுரை.

இலங்கை ஏஜெண்ட்:

அபூபக்கர் டெக்ஸ்டைல்ஸ், 25-1/4, டாம் வீதி, கொழும்பு.

Printed by Sri K. Sundaresan at Photo Litho Press, Madras—5
Published by I. Abdur Rahman, at "DARUL ISLAM," 460, Triplicane High Road, Madras—5